

# தமிழரசு

நவ 1. 1972 40 காசு





# செழுமையான விளைச்சலுக்கோர் சீரான சாதனம் எல் & டி மோட்டார் ஸ்டார்ட்டர்





செழுமையான விளைச்சலைப்பெற மிக அவசியமானது சீரான நீர்ப்பாசனம். பம்ப் செட்களின் மூலம் வயல்களுக்குத் தடையின்றி நீர் பாய்ச்சவும், அவைகளை நல்ல முறையில் இயங்கச் செய்யவும் எல் & டியின் டைரெக்ட்-ஆன்-லைன் மற்றும் ஸடார் டெல்டா மோட்டார் ஸ்டார்ட்டர்கள் சிறந்தவை. இவை எல்லாவித மோட்டார்களுக்கும் ஏற்ற ரகங்களில் கிடைக்கின்றன.

விவசாயிகளின் நலனை மனதில் கொண்டு லார்ஸன் & டூப்ரோ கம்பெனியார் சில தனிப்பட்ட வசதிகள் செய்கின்றனர்.

- பிரசார வண்டிகள் மூலம் பல இடங்களுக்கு நேரில் சென்று அவர்களுக்கு வேண்டிய ஆலோசனைகள் கூறி, உடனுக்குடன் ஸர்விஸ் வசதிகள் செய்து கொடுக்கின்றனர்.
- சிறிய ஊர்களில்கூட விற்பனையாளர்களை நியமித்துத் தேவையான ஸ்பேர் பார்ட்டுகள் அருகாமையிலேயே கிடைக்க வழி செய்துள்ளனர்.


ஏதேனும் உதவி தேவைப்பட்டால் எல் & டியின் விற்பனையாளர் அல்லது அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

தடையற்ற சேவைக்கோர் நிகரற்ற பெயர் எல் & டி.

CONTROL POWER WITH L&T Switchgear

**ஸ்விட்ச்கியர் டிவிஷன்,**
**லார்ஸன் அண்டு டூப்ரோ லிமிடெட்**
P.O. Box 8922, பம்பாய் 72 □ P.O. Box 323, புது டில்லி 1.
P.O. Box 619, கல்கத்தா 16 □ Post Bag 5247, சென்னை 2,

LT-3506





# தமிழரசு

மலர் 3. 1·11·1972. இதழ் 9




**முகப்பில்**

விருத்தாசலம் அரசினர் பீங்கான் தொழிற் கூடத்தில் உருவாக்கப் பட்ட கலைப்பொருட்கள்.

## தென் ஆர்க்காடு மாவட்டச் செய்தித் தொகுப்பு





# தொலைநோக்குத் திட்டங்கள் தேவை!

இது திட்டயுகம்!

இந்தத் திட்ட யுகத்தில் எதையும் திட்டமிட்டுச் செயலாற்ற வேண்டியவர்களாகவே நாம் இருக்கிறோம்.

'' எண்ணித் துணிக கருமம்'' என்று இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே திருவள்ளுவப் பெருந்தகை கூறியிருக்கிறார்.

எந்தக் காரியமானாலும் முதலில் எண்ணிப் பார்த்துக் காரியத்தில் இறங்கிட வேண்டும் என்று வள்ளுவர் வலியுறுத்துகிறார். அந்தக் கருத்தின் அடிப்படையில்தான் இந்தத் திட்டக் குழுவின் குறிக்கோள்கள் அமைந்திட வேண்டும்.

' ஆற்றில் போட்டாலும் அளந்து போட வேண்டும்'— என்று சொல்வார்கள். ஆற்றில் போடுவதே வீணானதாக இருந்தாலும் அதையும் அளந்து போடவேண்டும் என்பார்கள். இதிலுள்ள உட்கருத்தைப் புரிந்து கொண்டு நாம் செயல்பட வேண்டும். நல்லவைகளைச் செய்யும் போது அளந்து செய்ய வேண்டும்— என்று கிராமிய மக்களும் கருத்துக் கொண்டிருக்கிறார்கள்.

நாம் திட்டங்களை உருவாக்கி நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம். மூன்றாண்டுத் திட்டமானாலும்— ஐந்தாண்டுத் திட்டமானாலும் அவையெல்லாம் தொலை நோக்கைக் குறிக்கோளாக வைத்துப் போடப்பட வேண்டும்.

நாம் திட்டங்களை நிறைவேற்றி வருகிறோம். ஆனால் எதிர்பார்ப்பது போலச் சமுதாயத்தின் தேவைகள் நிறைவேற— மக்களுக்கு நல்வாழ்வு கிடைக்க— வறுமை ஒழிந்த வளமான வாழ்வு— வசதி நிறைந்த வாழ்வு கிடைத்திட வாய்ப்புகள் மிகுந்ததாக அமைந்திடும் நிலை மக்களுக்குக் கிடைத்ததா என்றால் இல்லை!

அகில இந்தியத் திட்டக்குழுவினால் வகுக்கப்பட்ட ஐந்தாண்டுத் திட்டங்களின் மூலம் ஏற்பட்ட பயன்களைப் பற்றி எண்ணிப் பார்த்திட வேண்டும்.

அகில இந்தியத்திட்டக் குழுவே சொல்வதென்ன?

' நமது திட்ட வளர்ச்சி விகிதம் முதல் பத்தாண்டுக் காலத்தில்—1951–60 ஆகிய பத்தாண்டுக் காலத்தில் 3·8 சதவிகிதமாகும்.

1961–70 வரையிலான இரண்டாவது பத்தாண்டுக் காலத்தில் 3·7 சதவிகிதமாகும்.

நமது பொருளாதாரம் தகுந்த அளவில் வளர்ச்சி அடையவில்லையாதலால் நம்முடைய வளர்ச்சி நல்ல நிலையில் இல்லை. நான்காவது திட்ட காலத்தில் இந்தியாவின் வளர்ச்சி 5·7 சதவிகிதமாக இருக்கலாமெனவும் பிறகு அடுத்த ஐந்தாண்டுத் திட்டக்காலத்தில் 6·2 சதவிகிதமாக இருக்குமெனவும் குறிக்கப்பட்டுள்ளது. ஆனால் தற்போதுள்ள சூழ்நிலைகளைப் பார்க்கும் போது ஐந்தாவது திட்ட முடிவில் 5·5 சதவிகிதம் வளர்ச்சி அடைந்தால் அதிகமாக இருக்குமெனத் தோன்றுகிறது'' என்று ஆராய்ச்சி நடத்தித் தெரிவித்திருக்கிறார்கள்.

இந்தக் கருத்தை நாம் அக்கறையோடு ஆராய வேண்டும்; ஆர்வத்தோடு ஆராய வேண்டும். அதனால்தான், மாநிலத் திட்டக்குழு அமைத்துச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறோம்.

1972-ம் ஆண்டு முதல் 1984-ம் ஆண்டு வரை நம்முடைய திட்டங்கள் எப்படி அமைய வேண்டும் என்ற அடிப்படையில் மாநிலத் திட்டக் குழுவின் சார்பில் ஆராய்ந்து நல்ல முடிவுகளை எடுத்துவருகிறோம்.

திட்டமிட்ட பொருளாதார வளர்ச்சிக்குப் பாடுபடுவதில் நாம் முன்னோடியாக இருக்கிறோம். மாநில அளவில் மட்டுமல்ல; மாவட்ட அளவிலும் திட்டமிட்டுச் செயலாற்ற நாம் முன் வந்திருக்கிறோம்.

கல்விப் பிரச்சினையைப் பற்றிய சிந்தனைத் தொகுப்பு டாக்டர் மால்கம் ஆதிசேசையா தலைமையில் அமைந்த குழுவினர் தந்திருக்கின்ற சிந்தனைகள் பொன்னே போல் போற்றத் தகுந்தவைகளாகும். அந்தச் சிந்தனைகளின் மூலம் நாம் புதிய ஊக்கத்தைப் பெறமுடியும்.

இப்படி மாநிலத் திட்டக் குழுவிலே இருக்கின்ற ஒவ்வொருவரும் ஒவ்வொரு துறைகளுக்குத் தலைமை தாங்கிப் பல்வேறு ஆக்கப்பூர்வமான சிந்தனைகளைத் தந்திருக்கிறார்கள். அவர்கள் எடுத்துக் கொண்டிருக்கிற இந்தக் காரியம் தமிழகத்தில் மட்டுமல்ல; இந்தியாவிலேயே புதியதோர் திருப்பத்தை ஏற்படுத்தக் கூடியவைகளாகும்.

நபர்வாரி வருமானத்தைப் பொறுத்தவரை அதைப் பெருக்க வேண்டும் என்று நாம் விரும்புகிறோம். தமிழ்நாட்டில் நபர்வாரி வருமானம் 1970–71-ல் ரூ. 654 ஆக இருந்து வருகிறது. 1983–84-ஆம் ஆண்டு அளவில் தமிழ்நாட்டில் நபர்வாரி வருமானம் ரூ. 1,308 ஆக உயர்த்துவதற்கு மாநிலத் திட்டக் குழு தனது ஆராய்ச்சி மூலம் வரையறுத்திருக்கிறது.

இன்றையத்தினம் சமுதாயத்தில் பீடித்துள்ள பெரிய

நோயாக வேலையில்லாத் திண்டாட்டம் இருந்து வருகிறது. இந்த வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கத் திட்டங்களின் மூலம்தான் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதற்குக் கல்வித் துறையில் புதிய திட்டங்களை—சீரிய திட்டங்களை உருவாக்கியாக வேண்டும். வேலையில்லாப் பிரச்சினையும், கல்விப் பிரச்சினையும் இணைந்திருக்கின்ற ஒன்றாகும் என்பதனை அனைவரும் ஒப்புக் கொள்வார்கள்.

அண்மையில் நான் ஐதராபாத் நகரில் கல்லூரித் திறப்பு விழாவொன்றில் பேசும் போது இன்றுள்ள நமது கல்வி நிலையினால் வேலை வாய்ப்பு இல்லாமல் இருப்பது மட்டுமல்ல; வேலைக்கே இலாயக்கில்லாத பலரும் உருவாக்கப்பட்டு விடுகிறார்கள். ஆகவே கல்வி கற்கும் போதே வேலைக்கும் தகுதியுள்ளவர்களாக ஆக்கிவிட கல்விமுறை வேண்டும்'' என்று சொன்னேன்.

டாக்டர் மால்கம் ஆதிசேசையா அவர்களின் தலைமையில் அமைந்த குழுவினரால் தரப்பட்டிருக்கின்ற கல்விச் சிந்தனைகள் நமக்குப் புதிய சிந்தனையைத் தருவதாக அமைந்திருக்கின்றன.

தமிழ்நாட்டில் 60 சதவிகிதம் மக்கள் ஏழ்மையில் உழல்கிறார்கள். 'ஏழ்மையை விரட்டுவோம்; வறுமையை விரட்டுவோம்' என்ற முழக்கத்தால் மட்டும் இந்த நிலையை மாற்றிவிட முடியாது. இப்படிப்பட்ட சமதர்ம சமுதாயத்தை உருவாக்கத் தொலை நோக்குத் திட்டங்கள் அவசியமாகும்.

இன்றுள்ள நிலைமையில் உடனடியாக ஒரு சிலவற்றை நிறைவேற்றி விடுவதில் இலாபமில்லை. அதனால் நீண்ட காலத்திற்குத் தேவைப்படும்பரிகாரங்களைநிறைவேற்றிடத் தவறியவர்கள் என்ற குற்றச் சாட்டுக்கு ஆளாகிவிடுவோம்.

தலை வலிக்கிறது என்றால் மருந்து தடவினால் தீர்ந்துவிடும். அப்படிப்பட்ட தலைவலியும் உண்டு! சில நேரங்களில் நிரந்தரத் தலைவலியாகவும் இருந்துவிடும். வயிற்றுக் கோளாறுகளினாலும் தலைவலி வருவதுண்டு. அப்படிப்பட்ட தலைவலி வரும்போது மருந்து தடவினால் அந்த நேரத்தில் மட்டும்தான் வலி போகும். ஆனால் தொடர்ந்து இருக்கக் கூடியதாக—தொல்லைதரக் கூடியதாக இருந்துவிடும். ஆகவே ஏன் இந்தத் தலைவலி ஏற்பட்டது என்பதை ஆராய்ந்து இதைக் கைவிட ஆவன செய்ய வேண்டும். அப்படிப்பட்டவை தான் திட்டங்களாகும்.

அப்படிப்பட்ட திட்டங்களைத் தருகின்ற நல்ல மூளைகள் இருக்கின்றன. அவற்றை நிறைவேற்றும் போது ஏற்படுகின்ற சங்கடங்களைத் தடுக்க நிர்வாகத்தில் இருப்பவர்கள் முனைந்து முயலவேண்டும்.

நிதிப் பற்றாக்குறை—கருவிகள் வரவில்லை என்று இருக்கிற நிலைமைகளின் மீது பழிபோட்டு தப்பித்துக் கொள்ளக்கூடாது. ஏற்படுகின்ற இடைஞ்சல்களை நீக்கி ஏற்ற முறையில் சிந்தித்துச் செயல்படவேண்டும்.

ஒரு பைல் இருக்கிறதென்றால் அமைச்சர் அதிகாரியை அழைத்து நிறைவேற்றிட ஆணை பிறப்பிக்க முடியும். ஆனால் நடைமுறையில் இருக்கின்ற சில சம்பிரதாயங்களினால் இங்கேயிருந்து பைல் புறப்பட்டு ஆதிசேசையாவிடம் போய் அவரிடமிருந்து நடராசன் அவர்களிடமும்—இராச்சாராம் அவர்களிடமும் போய்ச் சுற்றிவந்து இறுதியில் என்னிடம் வருமானால் எவ்வளவு கால தாமதமாகிவிடும்.

இப்படிப் பைல்கள் ஒவ்வொரு இடத்திலும் விருந்தினராக இருந்து விடக்கூடாது. மாமனார் வீட்டுக்குப் போகும் மாப்பிள்ளைகளைப் போலப் பைல்கள் உடனடியாக விடுபடவேண்டும். அங்கேயே தங்கிவிடக்கூடாது.

எந்தத் திட்டங்களானாலும் ஆராய்ச்சி நடத்தப்படுவது, பிறகு அனுமதி பெறுவது—அனுமதிக்கப்பட்ட திட்டத்திற்கு ஏதாவது சங்கடங்கள் இருக்கின்றனவா என்று பார்ப்பது—அதை ஆராய்ந்திடக் குழுவை அமைப்பது பிறகு அமைச்சரவை விவாதத்திற்கு அனுப்புவது—பிறகு மாவட்ட அளவில் விவாதிப்பது இப்படி நிர்வாகத்தின் சக்கரம் சுழன்று கொண்டே இருந்தால் — எப்படிப்பட்டவர்கள் திட்டம் தீட்டித் தந்தாலும் பலன் ஏற்படாது. சிறிய உதாரணத்தைப் பெரிய விஷயத்தை விளக்கச் சொன்னேன். எப்போதுமே பெரிய விஷயங்களைச் சிறிய உதாரணங்களால்தான் விளக்கமுடியும்.

தமிழ்நாட்டில் 12 ஆண்டுகளுக்கான திட்டத்தை மாநிலத் திட்டக்குழு வகுத்திருக்கிறது. மத்தியத் திட்ட அமைச்சர் தார் அவர்கள் தமிழ்நாட்டுக்கு வர இருக்கிறார் — நமது திட்டக்குழு உறுப்பினர்களோடு கலந்து பேச வருகிறார். நானும் அமைச்சர்களும் அவரைச் சந்தித்துப் பேசுகிறோம். நான் அவர் வருவதற்கு முன்பே சில விஷயங்களை சொல்லி வைக்கிறேன்.

மாநிலத் திட்டங்களை நிறைவேற்ற 'பவர்' வேண்டும். 'பவர்' என்றதும் நான் ஏதோ மாநில சுயாட்சி அடிப்படையில் 'அதிகாரம்' வேண்டும் என்று சொல்லவில்லை—மின்சாரத்தைத் தான் குறிப்பிடுகிறேன்.

நீர்வழி மின்சாரம் முடிந்துவிட்ட நிலையில் அனல் மின்சாரத்தையும், அணுமின்சாரத்தையும் தயாரிக்க வேண்டியிருக்கிறது. மின்சார உற்பத்திக்கு நமது திட்ட அளவின்படி மேலும் 27 கோடி ரூபாய் தேவைப்படுகிறது. அடுத்த ஐந்தாண்டுத் திட்டத்திற்கு 400 கோடி ரூபாய் மின்சார உற்பத்திக்குத் தேவைப்படும் என்று கருதுகிறோம்.

நமது தேவைகளைப் பூர்த்தி செய்யத் தேவையான கருவிகள் இல்லையென்றால் அவற்றை இறக்குமதி செய்வதற்கும் தயாராக இருக்கவேண்டும்.

பெரிய தொழிற்சாலைகளுக்கான அனுமதி நமக்குக் கிடைக்கவில்லை.

சேலம் இரும்பு உருக்காலைக்கு அனுமதி கிடைத்திருக்கிறது. அதற்கும் முற்றுப்புள்ளி வைக்க முயற்சி நடைபெறுகிறது. எப்படியாவது சேலத்தில் தொழிற்சாலையை உருவாக்கப் பாடுபட்டு வருகிறோம். அதற்கு மத்திய அரசு பரிவோடு இருப்பதற்காக நன்றியும்—பாராட்டுதலும் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

நெய்வேலியில் இரண்டாவது சுரங்கம் தேவை என்று வற்புறுத்தி வருகிறோம்.

# முதல்வர் கலைஞர்

இன்று 600 மெகாவாட் அளவுக்கு ஸ்டேஷன் இருந்தும், 300 மெகாவாட்டுக்கு மேல் போக முடியாத அளவுக்குத்தேவையான 'லிக்னைட்' கிடைக்க முடியாத காரணத்தால் 100 மெகாவாட் ஸ்டேஷனைப் பயன் படுத்திக் கொள்ள முடியாதவர்களாக இருக்கிறோம்.

இன்று தூத்துக் குடியில் உரத் தொழிற்சாலை இருக்கிறது.

புதிதாகத் தென் ஆர்க்காடு மாவட்டத்திலாவது தஞ்சையிலாவது ஓர் உரத் தொழிற்சாலை வேண்டும்.

சேது சமுத்திரத் திட்டத்தை நிறைவேற்றினால் எத்தனை தொழிலாளர்களுக்கு வேலை கிடைக்கும். சர் ஏ. ராமசாமி முதலியார் கமிட்டி வரையறுத்திருக்கிறது. 'ஐயாயிரத்திலிருந்து பத்தாயிரம் பேர் வரை தொழிலாளர்களுக்கு வேலை கிடைக்கும், என்று தெரிவிக்கப்பட்டது என்று நான் நினைக்கிறேன்.

இன்று மேற்குக் கடற்கரையிலிருந்து சுற்றிவந்து கிழக்குக் கடற்கரைக்கு வர இலங்கையைச் சுற்றி வர வேண்டியிருக்கிறது. ஆகவே இந்தத் திட்டத்தை நிறைவேற்றினால் 1,000 மைல் தூரம் குறையும்.

சேது சமுத்திரத் திட்டத்தை முன்பே நிறைவேற்றியிருந்தால் ரூ. 20 கோடியில் முடிந்திருக்கும். இன்று அதற்காக அதிகமாகச் செலவிட வேண்டியிருக்கிறது. இவ்வளவு செலவாகுமா என்று இப்போது தயங்கினால் இன்னும் பத்தாண்டுகளுக்குப் பிறகு மேலும் செலவு அதிகமாகிவிடும்.

ஆகவே, ஏழை எளிய மக்கள் வாழ்வு முன்னேற கிராம மக்களின்—சமுதாயத்தின் அடித்தளத்தில் உள்ள மக்களின் வாழ்வை மையமாக வைத்துத் திட்டங்கள் நிறைவேற்றப்பட வேண்டும். அந்த வகையில் தான் நமது மாநிலத் திட்டக்குழு செயல்பட்டு வருகிறது.

**[20—10—1972 அன்று சென்னை இராஜாஜி மண்டபத்தில் நடைபெற்ற தமிழகத் திட்டக்குழு இருநாள் கருத்தரங்கைத் தொடங்கி வைத்து ஆற்றிய உரை]**

---




குடிசைப் பகுதிகளில் வாழும் குழந்தைகளுக்கும், அவர்களின் அன்னையருக்கும் ஊட்டச்சத்து மிக்க துணை உணவுகளை வழங்கும் சிறப்பு ஊட்டச்சத்துணவு வழங்கும் திட்டம், மைய அரசு நிதி உதவியால் நடைபெற்று வரும் திட்டமாகும். மாநில அளவில் மகளிர் நலத்துறை இயக்குநர் அவர்களைத் தலைவராகவும், மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களைத் தலைவராகவும் கொண்டு இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

துவக்கத்தில் இத்திட்டம், 6 மாதம் முதல் 3 வயதுடைய, பள்ளிக்குச் செல்லும் முன் வயதுடைய குழந்தைகளுக்குப் பயனளித்தது. தற்பொழுது இத்திட்டம் குடிசைப்பகுதிகளில் உள்ள, 6 மாதம் முதல் 6 வயதுடையகுழந்தைகளுக்கும் தாய்ப்பால் கொடுத்துவரும் அன்னையருக்கும் விரிவுபடுத்தப் பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ், வாரத்தில் 6 நாட்களுக்கும், ஓராண்டில் 300 நாட்களுக்கும் ஊட்டச் சத்துள்ள உணவு வழங்கப்படுகிறது. குழந்தைகளுக்கும், அன்னையர்களுக்கும் இத்திட்டத்தின் கீழ், 25 கிராம் எடை கொண்ட, உயிர்ச்சத்து ( Vitamin ) செறிந்த சிறப்புப்பால் ரொட்டித் துண்டுகள் 3 வழங்கப்படுகின்றன.

தென்ஆர்க்காடு மாவட்டத்தில் இத்திட்டம் கடலூர் நகராட்சி எல்லையில் 3-6-1971 முதல் செயல் படுத்தப்பட்டு வருகிறது. இதுவரையில் இத்திட்டத்தின் கீழ்க் கடலூர் நகராட்சியில் ஏற்பட்டுள்ள சாதனை பின் வருமாறு உள்ளது.

| | இலக்கு. | சாதனை. |
|---|---|---|
| குழந்தைகள் | 3040 | 3040 |
| அன்னையர் | 400 | 400 |

சிறப்பு ஊட்டச் சத்துணவு வழங்கும் திட்டத்தினை தென் ஆர்க்காடு மாவட்டத்தில் இந்த ஆண்டில் (1972-73) செயல் படுத்துவதற்கு ரூபாய்1,14,000 ஒதுக்கப்பட்டுள்ளது. கடலூர் நகராட்சி எல்லையில், இத்திட்டத்தின் கீழ் ஊட்டச்சத்து மிக்க உணவு வழங்க 8 நிலையங்கள் உள்ளன. கடலூர் நகராட்சி ஆணையாளரின் மேற்பார்வையில், நகராட்சிப் பணியாளர்கள் ஊட்டச்சத்து மிக்க உணவு வழங்கும் பணியைச் சிறப்பாகச் செய்து வருகின்றார்கள்.

# தமிழில் வரைவுகளுக்குப் பரிசு

அரசுப் பணியாளர்களில் தமிழில் சிறந்த முறையில் வரைவுகளும் குறிப்புகளும் எழுதுகிற திறமை பெற்றவர்களுக்குப் பரிசளிக்கும் திட்டம் 14-7-1970-ல் அறிவிக்கப் பெற்றுத் தமிழ் வளர்ச்சித் துறைமூலம் தமிழக அரசு ஆண்டுதோறும் பரிசுகள் வழங்கி வருகிறது. இத்திட்டத்தின்படி, ஒவ்வொரு மாவட்டத்திலும் அந்தந்த மாவட்டநிலை அலுவலர்களின் கீழ் பணிபுரியும் பணியாளர்களில் (கண்காணிப்பாளர், உதவியாளர்கள், இளநிலை உதவியாளர்கள்) சிறந்தவர்களாகத் தேர்தெடுக்கப் பெறும் ஒவ்வொரு பணியாளரும் எழுதிய மூன்று கோப்புகள் அந்தந்த மாவட்ட ஆட்சியாளர்களுக்கு அனுப்பப்படும். அந்தக் கோப்புகள் ஆய்வுசெய்யப்பட்டுச் சிறந்த குறிப்புகளும் வரைவுகளும் எழுதிய பணியாளர் தேர்ந்தெடுக்கப்பெறுவர். மாவட்ட ஆட்சியாளர் அவருக்கு 500 ரூபாய் பரிசும் நற்சான்றிதழ்களும்வழங்குவர். இவ்வாறு, பதின்மூன்று மாவட்டங்களுக்கும் மாவட்டத்திற்கு ஒருவர் வீதம் 13 பேர் பரிசு பெறுவர்.


நமது சென்னை மாநகரைப் பொறுத்தவரை, அனைத்துத் துறைத் தலைமை அலுவலகங்கள், சென்னை மாவட்ட ஆட்சியாளர் அலுவலகம் ஆகியவற்றில் பணிபுரியும் பணியாளர்களில் ஒவ்வொரு அலுவலகத்திலிருந்தும் இருவரின் சிறந்த வரைவுகளும் குறிப்புகளும் அடங்கிய இரண்டிரண்டு கோப்புகள் தமிழ் வளர்ச்சி இயக்குநர்க்கு அனுப்புமாறு கோரப்படுகிறது. அவ்வாறு வரப்பெறுகிற கோப்புகளை ஆய்வு செய்து, பரிசுக் குரியவர்களாக இருவரைத் தேர்ந்தெடுப்பர்.


இவ்வகையில், சென்னை மாநகர்க்குரிய 1970-ஆம் ஆண்டிற்கான இரு பரிசுகளும், 25-3-1971-ல் மாண்புமிகு கல்வியமைச்சர் நாவலர் அவர்களால் வழங்கப்பெற்றன.

இப்போது, 1971-ஆம் ஆண்டிற்கான பரிசுகளை, மாண்புமிகு கல்வியமைச்சர் நாவலர் அவர்கள் பரிசு பெற உரியவர்களாகத் தேர்ந்தெடுக்கப் பெற்ற திரு த. சம்பந்தம், திரு த. மு. சுப்பிரமணியம் இருவருக்கும் வழங்கினர். திரு சம்பந்தம் சென்னை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை இயக்குநர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராகவும், திரு. தா. மு. சுப்பிரமணியம், சென்னை வருவாய் வாரிய (நிலவரித் திட்டம்)த்தில் உதவியாளராகவும் பணிபுரிகின்றனர்.

இந்தப் பரிசளிப்பு விழா 19-10-1972-ல் தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்களின் அறையில் நடைபெற்றது. ஒவ்வொருவருக்கும் 500 ரூபாய் ரொக்கப் பரிசும், நற்சான்றிதழும் வழங்கிப் பாராட்டுகையில் "தமிழில் நல்ல குறிப்புகளும் வரைவுகளும் எழுதவேண்டும் என்ற ஆர்வத்தினை இப்பரிசுத் திட்டம் எல்லா அரசுப் பணியாளர்களிடத்தும் ஏற்படுத்தும் என்று தாம் நம்புவதாக மாண்புமிகு நாவலர் அவர்கள் தெரிவித்தார்கள்.

மேலும் அலுவலர்கள் தம் பட்டறிவினால் சிறந்த பொருண்மையுடைய தமிழ்ச் சொற்களை அறிய நேரும்போது அவற்றைத் தமிழ் வளர்ச்சி இயக்ககத்திற்குத் தெரிவித்தல் சிறப்புடையதாக இருக்குமென்றும், தற்போது அரசு ஆய்வுப் பணி விரிவுபடுத்தப் பட்டிருப்பதால் தமிழ்த் திட்டம் அரசு அலுவலகங்களில் நல்ல முறையில் செயல்படுமெனவும் போதிய ஆர்வம் செலுத்த வேண்டுமென்றும், இனி வரும் ஆண்டுகளில் பரிசளிப்பு விழா பெரிய அளவில் அனைத்துப் பணியாளர்களும் கலந்து கொள்ளும் வகையில் சிறப்பான முறையில் ஏற்பாடு செய்யப்படுமெனவும் தெரிவித்தார்கள்.


திரு சம்பந்தம் பரிசு பெறுகிறார்.


திரு சுப்பிரமணியம் பரிசு பெறுகிறார்.



# பொது மருத்துவ மனையில்

# ஒரு சிறப்புப் பிரிவு

இந்திய மருத்துவ வரலாற்றிலேயே ஒரு புதுமை. தமிழக மருத்துவத் துறைக்கு ஒரு பெருமை. சென்னை அரசினர் பொது மருத்துவ மனையில் ஒரு புதிய சாதனை.

சென்னை மருத்துவ மனையில் காது-மூக்கு-தொண்டை நோய்ப் பிரிவு ஒரு சிறப்புக் குரிய புதிய பணியினை மேற்கொள்ளத் தொடங்கி இருக்கிறது. அத்துறையில் ஓர் ஆராய்ச்சி நிலைய மாக இயங்கத் தொடங்கி இருக்கிறது. இந்திய மருத்துவ வரலாற்றில் இப்படிப்பட்ட ஓர் ஆராய்ச்சி நிலையம் அமைவது இதுவே முதலாவதாகும். இந்நிலையத்தில் பட்டப் படிப்புக்கும், பட்ட மேற்படிப்புக்கும் படிக்கும் மாணவர்கள் பயிற்சி பெறுவதற்கும், ஆய்வு நிகழ்த்துவதற்கும், மருத்துவக் கல்வி பெறுவதற்கும் வாய்ப்பளிக்கப் படுகிறது.

இந்நிலையத்தை 18-10-1972 புதன் கிழமையன்று தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள், நல்வாழ்வுத்துறை அமைச்சர் மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் தலைமையில் திறந்து வைத்தார்கள்.

சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் திரு நெ. து. சுந்தரவடிவேலு, விழா மலரை வெளியிட்டார். நல்வாழ்வு, குடும்ப நலத்துறை இயக்குநர் டாக்டர் பி. ஆர். பாலகிருஷ்ணன் வரவேற்புரை நிகழ்த்தினார். நலத்துறைச் செயலாளர் திரு அம்பாசங்கர் காதுப் பிரிவைத் துவக்கி வைத்தார்.

நிலைய இயக்குநரும், பேராசிரியருமான டாக்டர் சத்திய நாராயணா, இத் துறையின் வரலாற்றுப் பின்னணியையும், வளர்ச்சியையும், அந்த வளர்ச்சிக்கு உதவிய தமிழக முதல்வர், நல்வாழ்வுத் துறை அமைச்சர் ஆகியோரின் ஒத்துழைப்பையும் முயற்சியையும் எடுத்துரைத்தார்.

தம்முடைய உரையில் டாக்டர் சத்திய நாராயணா குறிப்பிட்டதாவது, ''இத்துறைக்கும் நோயாளிகளுக்கும் இன்று ஒரு பொன்னாள். இத் துறையின் வளர்ச்சி பற்றியும், இந்த ஆய்வு நிலையம் பற்றியும் அதற்கான நிதித் தேவை பற்றியும் முதல்வரிடம் கூறியபோது, பெருநிதி தருவது இப்போது முடியாது தான். என்றாலும், முயற்சிகளையும், திட்டங்களையும் உங்களுடைய திறமையின் மூலம் செயற்படுத்திக் காட்டுங்கள்—பின்னர் நிதி பற்றிப் பார்த்துக் கொள்ளலாம் என்று சொன்னார். அவருடைய கருணையில்தான் இன்று இந்தப் பிரிவு உயர் நிலையமாக உயர்ந்துள்ளது.''

இத் திறப்பு விழாவுக்கான தமது வாழ்த்துச் செய்தியில், தமிழக ஆளுநர் அவர்கள் ''முதல்வரின் கரத்தால் திறக்கப்படுவதால், இது மேலும்மேலும் சிறந்தோங்கும்'' என்று கூறியுள்ளார். முதல்வரவர்களின் அந்தப் பொற்கரங்கள் இந்த மருத்துவமனை முழுவதிலும் பட்டு மிளிரட்டும்! மருத்துவ மனை பாங்குடன் சிறக்கட்டும்!''

## அன்பே அருமருந்து !

''டாக்டர்களின் திறமையை விட, அவர்கள் நோயாளிகளிடம் காட்டும் அன்புதான் சிறந்த மருந்தாகும். எனவே, நோயாளிகளிடம் தமது திறமையைக் காட்டுவதைவிட டாக்டர்கள் அன்பையே அதிகம் காட்ட வேண்டும். அதுவே நோயாளிக்கு ஆறுதலும், ஊக்கமும் தந்து நோயைக் குணப்படுத்தப் பெரிதும் உதவும்'', என்று முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் சென்னைப் பொது மருத்துவமனை டாக்டர்களிடம் கூறினார்.

அத்துடன், சமதர்மச் சமுதாயத்தை அமைக்கவும், டாக்டர்கள் உதவிட முடியும் என்றும், உதவிட வேண்டும் என்றும் எடுத்துரைத்தார்.

இந்தியாவிலேயே முதன் முதலாகப் புதிதாக அமைக்கப் பட்டுள்ள காது-மூக்கு-தொண்டை சிறப்புப் பகுதியை சென்னை அரசினர் பொது மருத்துவ மனையில் திறந்து வைத்துப் பேசுகையில் டாக்டர் கலைஞர் அவர்கள் மேற்கண்டவாறு கூறினார்கள்.

மேலும் அவர்கள் கூறியதாவது :

''இப்பொழுது மருத்துவ மனையில், டாக்டர் சத்தியநாராயணா அவர்களின் ஆர்வத்தாலும், அவர் சுட்டிக் காட்டிய அரசாங்கத்தின் ஒத்துழைப்பாலும், விரிந்தும் உயர்ந்தும் இருக்கின்ற காது-மூக்கு-தொண்டைப் பிரிவின் ஆய்வு நிலையத் தொடக்க விழாவில் பங்கேற்பதில் பெரிதும் மகிழ்ச்சி கொள்கிறேன்.

"ஒரு சிறிய இருட்டறையில் நடைபெற்றுக் கொண்டிருந்த இந்தப் பிரிவு 1934 முதல் முன்னேறத் தொடங்கி, இன்று உயர்த்தப்பட்ட ஒரு பிரிவாக வளர்ந்துள்ள வரலாற்றைச் சுட்டிக் காட்டினார்கள். ஒவ்வொரு முறையும் சிறுகச்சிறுக வளர்ந்து வந்தது என்றும் சொல்லப்பட்டது.

"இப் பிரிவின் வளர்ச்சி குறித்து என்னையோ, சம்பந்தப்பட்ட நல்வாழ்வுத் துறை அமைச்சரையோ அணுகி டாக்டர்கள் கேட்டபோது நிதி நெருக்கடியின் காரணமாகத்தான் இதில் முழு முயற்சியை உடனடியாக மொத்தமாக மேற்கொள்ள முடியாமல் தாமதப்படுத்தி இருக்கிறோம்.

"பல்வேறு கருவிகளையும், மருத்துவ வசதிகளையும் படிப்படியாகப் பெற்றுப் படிப்படியாக இப்பிரிவு விரிவடைந்து வளர்ந்தது என்று டாக்டர் சத்தியநாராயண குறிப்பிட்டார்கள்.

"எந்த வளர்ச்சியும் படிப்படியாகத்தான் இருக்க வேண்டும். திடீர் வளர்ச்சி என்பது ஆபத்தாகவே முடியும். நோயாளியின் நோயும் படிப்படியாகத்தான் குணமடைய வேண்டும். காலை எட்டு மணிக்கு வருகிற ஒருவரின் நோய் ஒன்பது மணிக்கே குணமாக முடியாது. அப்படி ஒரு மணி நேரத்திற்குள்ளேயே குணமடைந்து விட்டதென்றால், அது நோய் குணமடைந்ததாகப் பொருளல்ல. நோயாளியே மொத்தமாக 'குணமடைந்துபோய் விட்டான்' என்றுதான் பொருள்.

"மாண்புமிகு நல்வாழ்வுத்துறை அமைச்சர் பேராசிரியர் அவர்கள் பேசும்போது, டாக்டர்களின் பணி நாட்டுக்குப் பயன்பட வேண்டும் என்றும் அதற்கேற்றபடி டாக்டர்கள் தமது கடமையை உணர்ந்து செயற்பட வேண்டும் என்றும் கூறினார்கள். கடந்த சில மாதங்களாகக் கண்ணொளி வழங்கும் திட்டம் செயற்பட்டு வருகிறது. அத்திட்டத்தால் பயன்பெறுவோர் பாமர மக்களேயாவர்.

"கண் கெட்டால் வாழ்வு போய்விடும், அது விதிப்பயன் என்று மட்டுமே நொந்து கிடக்கும் கிராம மக்களுக்கு அவர்களுக்கு வழி இருக்கிறது; நல்ல வாய்ப்பு இருக்கிறது என்பதை எடுத்துச் சொல்லி உதவிட ஆளில்லாமல், தமக்கு இப்படி வாய்ப்பு உள்ளது என்பதை அறியாமலும், அதைப் பயன்படுத்திக் கொள்ளாமலும் அவர்கள் அல்லற்படுகின்றனர். அப்படிப்பட்ட மக்களுக்காகக் கண்ணொளி வழங்கும் திட்டத்தினை நம் அரசாங்கம் செயற்படுத்தி வருகிறது.

"சென்னை, கோவை, மதுரை போன்ற நகரங்களில் மட்டுமே வசதியான ஆடம்பரச் சூழலில் வாழ்ந்து பழக்கப்பட்ட டாக்டர்கள், இத் திட்டத்தைச் செயற்படுத்துவதற்காகக் கிராமப் புறங்களுக்குச் சென்று கந்தலாடை கட்டிய மக்களை, ஒட்டிய கன்னங்களும், கந்தலாடையும் கொண்டு ஏழ்மைப்பிடியில் வாடும் அந்த மக்களை அணுகி, அவர்களோடு உறவாடி அவர்களது கண்களுக்குச் சிகிச்சை அளித்து ஒளி பெறச் செய்கிறார்கள்.

"கண்ணொளி பெற்ற அந்த ஏழைமக்கள், மனமார டாக்டர்களையும், இந்த அரசாங்கத்தையும் நன்றியுடன் வாழ்த்தும் போதும், கையெடுத்துக் கும்பிடும் போதும், அதைக் காண்கின்ற எங்களுக்கு மெய்யெல்லாம் சிலிர்க்கிறது; உள்ளத்தில் பேரானந்தம் பொங்கி வழிகிறது!


"இப்படி மக்களின் நோயைக் குணப்படுத்துவதில் அரசும், மருத்துவர்களும் ஈடுபாடு கொண்டு இணையற்ற பணியாற்றி வருவது கடமையுணர்வில் தமிழ்நாடு முன்னிற்கிறது என்பதைக் காட்டுகிறது.

"இந்நிலையத்தின் இயக்குநரான டாக்டர் சத்திய நாராயண அவர்கள் இனிமையாகப் பழகி மனம் விட்டுப் பேசுகின்றவர்.

"நான் அவரிடம் சிகிச்சை பெற்றிருக்கிறேன். அப்போது, அவர் மிகவும் பாராட்டத்தக்கவகையில் செயற்பட்டார். என்னை ஒரு முதல்வர் என்று கருதிச் செயற்படவில்லை. ஒரு நோயாளியாகவே கருதிச் செயற்பட்டார்.

"இப்படி எல்லாரையும் சமமாகப் பாவித்துப் பணியாற்றும் அவரது இயல்பு மிகவும் பாராட்டுக்குரியது. நாட்டில் ஏற்றத்தாழ்வற்ற சமுதாயத்தை அமைத்துச், சமதர்மம் கண்டிட இப்படிப்பட்ட தொண்டுதான் தேவை. அப்படி எல்லாரையும் சமமாக மதித்துப் பணியாற்றிச் சமதர்ம சமுதாயம் காணத் துணை நிற்கும் டாக்டர்கள் பலரில் சத்திய நாராயணவும் ஒருவர். அவர் தனது ஆற்றலால் அனைத்துலகப் புகழ் பெற்றவர். அவர் எழுதிய மருத்துவத் துறைப் புத்தகங்கள் உலகெங்கும் பாராட்டப்படுகின்றன; பாட நூற்களாகவும் அமைந்துள்ளன.

"இம் மேடையில் அவரைப் பாராட்டுவதைப் போலவே தங்களையும் பாராட்டிப் போற்றும் வகையில், ஏனைய டாக்டர்களும் பணியாற்ற வேண்டுமென்று கேட்டுக் கொண்டு எனது உரையை முடிக்கின்றேன்."



# இதோ இன்னொரு சாதனை!

தமிழக அரசின் ஆக்கப் பணிகளுக்கு அடித்தளம்!

நாளையத் தலைமுறையின் "நல்வாழ்வுக்குப் புதியபாதை"!

அடுத்த குழந்தை இப்போது வேண்டாம்!


இரண்டுக்குப் பிறகு எப்போதும் வேண்டாம்!!

## தமிழ் நாட்டில் உருவாகிறது!

தென்னார்க்காடு மாவட்டத்திலுள்ள பூத்துறை என்ற சிற்றூர் குடும்ப நலத்திட்டப் பணியில் எடுத்துக்காட்டாக விளங்கும் சிற்றூர்!

குடும்ப நலத்திட்ட முனைப்பு இயக்கத்தில் தமிழ்நாடு முன்னணியில் நிற்கிறது!

பூத்துறை போன்று பல ஊர்களைத் தமிழகத்தில் உருவாக்குவோம்.




தமிழரசு

குடும்பநலத்துறை

# அரிசன–பின்தங்கிய மக்கள் அடைந்துள்ள நன்மைகள்

'சமுதாயத்தில் ஒரு பிரிவினரைத் தீண்டத் தகாதவர்கள் என்று ஒதுக்கி வைத்திருக்கும் நிலை மாறாதவரை சுயராஜ்ஜியம் என்ற வார்த்தைக்கு அர்த்தமில்லை' என்றார் காந்தியடிகள். 'எல்லாரும் ஓர் குலம், எல்லாரும் ஓர் இனம்' என்று கவிஞன் பாடிய பாடல் மட்டும் அல்ல, இன்று நடைமுறையில் காணும் நேரிடையான உண்மையாலும், நெடுங்காலமாகத் தாழ்த்தப்பட்டு அதன் விளைவாகப் பின்தங்கிவிட்ட அரிசனங்கள், குற்றப் பரம்பரைப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்தவர், இதர பிற்பட்ட வகுப்பினர் அனைவரும் இன்று தமிழக அரசின் தளராத தொண்டினாலும் வியக்கத்தகும் முன்னேற்றம் அடைந்துள்ளனர். ஆயிரக்கணக்கானவர் அறிவை வளர்க்கும் கல்வி பயின்று ஆக்கம் தேடும் தொழில் புரிந்து சொந்த வீடு கட்டிக் கொண்டு சீரும் சிறப்புமாக வாழ, ஏழை மக்களுக்கு ஏற்றம் தரும் தமிழக அரசு பாடுபட்டு வருகிறது. தென் ஆர்க்காடு மாவட்டத்தில் அரிசன வகுப்பைச் சேர்ந்த மக்களின் எண்ணிக்கை சுமார் 7 இலட்சமாகும். இது மொத்தத் தொகையில் 25 சதவிகிதம். இப் பின்தங்கிய வகுப்பினர் விவசாயத்தில் வளம் பெற நிலமும், நிலத்தை உழக் கால்நடைக் கருவிகள் வாங்கக் கடனும் அரசு வழங்கி வருகிறது. சிறு தொழில் புரியவும் அரசு ஆதரவு அளிக்கிறது. செவிக்கில்லாத போது சிறிது வயிற்றுக்கும் ஈயப்படும் என்ற சொல்லுக்கேற்பக் கல்வி பயிலும் அரிசன மாணவர்களுக்கும் மதிய உணவும் தங்க இடமும் அளிக்கப்படுகிறது.

இம்மாவட்டத்தில் அரிசன வகுப்பினரும் மலைச் சாதியினரும் உள்ளனர். இதில் அரிசன வகுப்பினர் செஞ்சி வட்டத்தில் 49,999 பேரும், திண்டிவனம் வட்டத்தில் 1,62,530 பேரும் விழுப்புரம் வட்டத்தில் 85,673 பேரும் திருக்கோவலூர் வட்டத்தில் 1,06,830 பேரும் கடலூர் வட்டத்தில் 1,13,535 பேரும் கள்ளக் குறிச்சியில் 1,04,412 பேரும் விருத்தாசலம் வட்டத்தில் 1,08,728 பேரும் சிதம்பரம் வட்டத்தில் 1,33,725 பேரும் உள்ளனர்.

மலைச் சாதி வகுப்பினர், செஞ்சிவட்டத்தில் 3,681பேரும், திண்டிவனம் வட்டத்தில் 4,602 பேரும் விழுப்புரம் வட்டத்தில் 1,052 பேரும் திருக்கோவலூர் வட்டத்தில் 945 பேரும், கடலூர் வட்டத்தில் 649 பேரும் கள்ளக்குறிச்சி வட்டத்தில் 540 பேரும் விருத்தாசலம் வட்டத்தில் 1,350 பேரும் சிதம்பரம் வட்டத்தில் 717 பேரும் உள்ளனர்.

## கல்வி வளம்

இவர்களின் கல்வித் தரத்தினை உயர்த்த அரசு பாடுபட்டு வருகிறது. இம்மாவட்டத்தில் 1968–69-ல் 178 பள்ளிகளில் 671 ஆசிரியர்கள் பணிபுரிந்து வந்தனர். அதுவே 1970–71-ல் 183 பள்ளிகளாகவும் 958 ஆசிரியர்களாகவும் உயர்ந்தது. இப் பள்ளிகளில் சுமார் 23,000 அரிசனப் பிள்ளைகள் படித்து வருகிறார்கள்.

இம்மாணவர்கள் தங்கிப் படிப்பதற்காக இம்மாவட்டத்தில் 1968-69 வரை 42 தங்கும் விடுதிகளில் 3,586 மாணவர்கள் தங்கிப் படித்து வந்தனர். அவர்களுக்கு ரூ. 7,47,944 அரசினரால் செலவிடப்பட்டிருக்கிறது. இவற்றோடு அரசு உதவி பெறும் விடுதிகள் 5-ம் தனியாரால் உதவி பெறும் விடுதிகள் 3-ம் இயங்கி வருகின்றன. 1970–71-ல் அரசினர் நடத்தும் விடுதிகள் 44 ஆக உயர்ந்தன. இவ்விடுதிகளில் தங்கும் மாணவர்களுக்கு விடுதியிலேயே படிப்புச் சொல்லிக் கொடுக்க 31 பகுதி நேர ஆசிரியர்கள் அமர்த்தப் பட்டிருக்கிறார்கள். இந்த விடுதிகளில் 4,706 மாணவர்கள் தங்கி வருகிறார்கள். இவர்களுக்காக அரசு ரூ. 8,48,355 செலவிட்டது. உண்ண வகையில்லாமல் கல்வியின் அவசியத்தை உணர்ந்திருந்த மக்களுக்கு, பள்ளிகளில் உணவளித்து, இந்த அரிசன மாணவர்களுக்குக் கல்வி புகட்டி வருகிறது அரசு. 1968–69-ல் 12,906 மாணவர்களுக்கு ரூ. 5,16,640 செலவில் மதிய உணவு வழங்கப்பட்டது. 1969–70-ல் 13,378 மாணவர்களுக்கு ரூ. 4,91,868 செலவில் மதிய உணவு வழங்கப்பட்டது. அதுவே 1970–71-ல் 13,526 மாணவர் ஆக உயர்ந்தது. அரசு இவர்களுக்காகச் செலவு செய்வது ரூ. 5,40,568 ஆக உயர்ந்திருக்கிறது.

கல்லூரிகளிலும், பள்ளிகளிலும் படிக்கும் அரிசன பின்தங்கிய மாணவர்களுக்குப் புத்தகங்கள் வாங்கவும், விடுதிகளுக்குப் பணம் கட்டவும் உணவு உடைகளுக்கும் அரசு, உதவித் தொகை வழங்கி வருகிறது. 1968–69-ல் 27,444 மாணவர்கள் ரூ. 11,57,339 உதவித் தொகை பெற்று வந்தனர். 1969–70-ல் 37,523 மாணவர்கள் ரூ. 13,88,145 பெற்று வந்தனர். 1970–71-ல் 48,386 மாணவர்களுக்கு ரூ. 19,33,075 உதவித் தொகையாக வழங்கப்பட்டது.

உடுக்க உடையில்லாமல் தவிக்கும் அரிசன-பின்தங்கிய மாணவ மாணவியர்களுக்கு அரசு சீர் உடைகள் வழங்கி வருகிறது. 1969–70-ல் சீர் உடை வழங்குவதற்காக ரூ. 2,76,400 அரசு செலவிட்டிருக்கிறது. 1970–71-ல் ரூ. 2,50,000 அரசு செலவிட்டிருக்கிறது. பள்ளிப் பிள்ளைகளுக்கு எழுதும் பலகை, எழுதுகோல், புத்தகங்கள் இலவசமாகக் கொடுக்க ரூ. 2,67,303-க்கு 1970–71-ல் அரசு செலவிட்டுள்ளது.

## தீண்டாமை

தீண்டாமையை ஒழிக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு மக்களிடையே தீண்டாமை ஒழிக்க இங்கு ஆண் பெண் சமூக நல ஊழியர்கள் தீண்டாமை ஒழிப்புப் பிரச்சாரப் பணிகளை மேற்கொண்டு வருகி

ரூர்கள். சிறந்த முறையிலே துப்புரவாகவும் தொழில் துறையில் முன்னேற்றமும் கண்டுள்ள கிராமங்களுக்கு ஊக்கமளிக்க மாவட்டந் தோறும் அரசு ரூ. 1,500 பரிசு வழங்கி வருகிறது. அதோடு சிறந்த அரிசனக் காலனிகளுக்கு வானொலிப் பெட்டி போன்ற பரிசுகளை வழங்கி வருகிறது. தீண்டாமையை மறக்க அரிசன விழாக்கள் ஊர்தோறும் வருடம் தோறும் கொண்டாடப்படுகிறது.

### வீட்டு வசதி

ஒழுகும் கூரைகளிலும், ஓலைக் குடிசைகளிலும், மரத் தடியிலும் வாழ்ந்து நலிவுற்ற இம்மக்களுக்குச் சிறந்த முறையில், ஒழுகாத வீடுகளில் குடியிருக்க வீடுகள் கட்டிக் கொடுக்கிறது அரசு. வீடுகள் கட்டுவதற்கு இம்மக்களுக்குக் கடன் உதவியும் அளித்து வருகிறது. இத்திட்டம் 1970-ல் தான்முதன்முதலாகச் செயல்படுத்தப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின் கீழ் ரூ. 83,000 ஒதுக்கப்பட்டுள்ளது. 1970-ல் விழுப்புரம் வட்டத்தில் உள்ள வளவனூரில் வீடுகள் கட்டப்பட்டுள்ளன. 1971-ல் 4 இடங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுக் கட்டடவேலைகள் நடைபெற்றன.

### நிலமற்றோருக்கு நிலம்

இம்மாவட்டத்திலுள்ள அரிசன, பின்தங்கிய மக்களுக்காக நிலப்பட்டா வழங்கி அவர்கள் வீடு கட்டிக் கொள்ள வசதி செய்து தரப்பட்டிருக்கிறது. இவ்வாறு வழங்கப்பட்ட இடங்களில் இம்மக்கள் வீடு கட்டிச் சுகாதாரமான வாழ்க்கை வாழ்ந்து வர அரசு வழி செய்திருக்கிறது. குடிநீர் வசதி செய்து தரப்பட்டிருக்கிறது. அரிசன மக்களுக்கென நடைபாதை, இடுகாடு போன்ற வசதிகள் ஏற்படுத்த இடங்களை ஒதுக்கி வருகிறது. கடந்த 4 ஆண்டுகளில் அரசு வழங்கிய நிலப்பட்டாக்களின்எண்ணிக்கை.

| ஆண்டு. | வழங்கப்பட்ட நிலங்களின் மதிப்பு. ரூ. | பயன் பெற்றவர்களின் எண்ணிக்கை. |
|---|---|---|
| 1968–69 | 3,00,367 | 2,169 |
| 1969–70 | 2,62,500 | 3,382 |
| 1970–71 | 5,42,872 | 12,775 |

### உழவுக்கு ஊக்கம்

இம்மாவட்டத்திலுள்ள அரிசன மக்கள் உழவுத் தொழிலில் மேன்மை பெற விவசாயக் கருவிகளும், உரங்களும் நல்ல விதைகளும் கடன் உதவியும் அரசு வழங்கியிருக்கிறது. அவ்வகையில் கடந்த 4 ஆண்டுகளில் அரசு செய்த பேருதவி.

| ஆண்டு. | பயன் பெற்றவர்களின் எண்ணிக்கை | செலவிடப் பட்ட தொகை ரூ. |
|---|---|---|
| 1968–69 | 46 | 57,250 |
| 1969–70 | 128 | 86,350 |
| 1970–71 | 118 | 1,10,500 |

தொழில் வளர மட்பாண்டம், தச்சுத் தொழில், காலணி செய்தல் போன்ற சிறு தொழில் செய்து வரும் அரிசன மக்களுக்காக அவர்களுள் சிலரைத் தேர்ந்தெடுத்து அரசு கடன் உதவி அளித்து வருகிறது.

### அரசு அலுவலகப் பயிற்சி

1969–70-ல் அரசு அலுவலகப் பயிற்சி துவக்கப்பட்டு நடைபெற்று வருகிறது. பயிற்சியின் காலம் ஓராண்டாகும். இங்குத் தட்டெழுத்து, சுருக்கெழுத்து ஆகியவை கற்பிக்கப்பட்டு அரசுத் தொழில் நுட்பத் தேர்விற்கு அனுப்பப்படுகின்றனர். தமிழில் தட்டெழுத்து, சுருக்கெழுத்துப் பயிற்சி விரைவிலேயே துவக்கப்படும் ; மாதம் ரூ. 20 உதவிச் சம்பளம் இங்கு பயில்வோருக்கு அளிக்கப்படுகின்றது.

இவ்வாறு அரசு, அரிசன மக்களுக்கும் பின்தங்கிய மக்களுக்கும் இந்த மாவட்டத்தில் பெரும் உதவிகளை செய்துவருகிறது.

---

தமிழ்நாட்டில் உள்ள மூன்று வேளாண்மைக் கல்லூரிகளில் படித்துப் பட்டம் பெற்ற அனைவருக்கும் தமிழக அரசு வேலை வாய்ப்பு வழங்கி ஒரு சாதனையை ஏற்படுத்தியுள்ளது.

1971–72-ஆம் ஆண்டில் வேளாண்மைப் படிப்பில் பட்டம் பெற்ற பட்டதாரிகள் 250 பேருக்கும் 1972–ஆம் ஆண்டில் தேறிய 223 பட்டதாரிகளுக்கும் தமிழ்நாடு வேளாண்மைத் துறை வேலை வாய்ப்பு வழங்கியுள்ளது.

இது அல்லாமல் பிற மாநிலங்களைச் சேர்ந்த வேளாண்மைப் பட்டதாரிகளுக்கும் வேலை வாய்ப்புவழங்கப்பட்டுவருகிறது.

* * *

1971 மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி தமிழ் நாட்டில் முதல் தடவையாக 14 நகர்கள் ஐம்பதாயிரத்திற்கு மேல் மக்கள் தொகை பெற்ற நகரங்களாக உள்ளன.

அவை திருவொற்றியூர், ஆவடி தாம்பரம், பல்லாவரம், திருவண்ணாமலை, ஆம்பூர், வாணியம்பாடி, விழுப்புரம், நெய்வேலி சிங்காநல்லூர், திருவரங்கம், காரைக்குடி, கடையநல்லூர் ஆகிய நகரங்களாகும்.

கோவை மாவட்டத்தில் உள்ள சிங்காநல்லூரில் மக்கள் தொகை ஐந்து மடங்கு பெருகியுள்ளது. 1961-ல் அதன் மக்கள் தொகை 26,674 தான். அது இப்போது 1,12,306 ஆகியுள்ளது. அதே மாதிரி ஆவடியிலும் 13,050லிருந்து 77,413 ஆகியிருக்கிறது. நெய்வேலி நகரியத்தில் 10,296-லிருந்து 58,285 ஆக மக்கள் தொகை பெருகியிருக்கிறது.

## கொய்தவை

மாநிலத்தில் இப்போது ஐம்பதாயிரம் மக்கள் தொகைக்கு மேற்பட்ட 43நகரங்கள் உள்ளன. 1961-ல் 25 நகர்களே அப்படியிருந்தன. இப்போது ஒரு இலட்சம் முதல் இரண்டு இலட்சம் மக்கள் தொகையுள்ள 12 நகர்கள் உள்ளன. 1961-ல் இப்படி 9 நகர்களே இருந்தன.

தர்மபுரி மாவட்டத்தில் 50,000 மக்கள் தொகைக்கு மேற்பட்ட நகர் ஒன்று கூட இல்லை.




தென் ஆர்க்காடு மாவட்டத்தில் உள்ள விருத்தாசலம் இன்று வெளிநாடுகளில் எல்லாம் அறிமுகமாகத் தொடங்கியுள்ளது. அதற்குக் காரணம்—அங்குள்ள ஆர்ட்டீசியன் கிணறுகள் மட்டுமல்ல—பீங்கான் தொழில் வளர்ச்சியுற்றிருக்கும் பாங்கான நிலையும் அதற்குக் காரணம்.

விருத்தாசலத்தில் அரசு அமைத்துள்ள பீங்கான் தொழிற்பேட்டை தென் ஆர்க்காடு மாவட்டத்திற்கே தனிப்பெருமையை ஏற்படுத்தி வருகிறது.

இந்தியாவில் உள்ள பீங்கான் தொழிலகங்கள் பீகார், வங்காளம் ஆகிய மாநிலங்களில் தீவிரமாகச் செயலாற்றுகின்றன. இந்தியாவின் தென் பகுதியும் அந்த வகையில் செயலாற்றுவதற்குரிய வாய்ப்புகளைப் பெற்றிருக்கிறது.

தமிழகத்தில்—பீங்கான்தொழிலுக்குத் தேவையான எல்லா மூலப் பொருள்களும் கிடைக்கின்றன. தரமான சைனுக் களிமண்—நெய்வேலி லிக்னைட் சுரங்கத்திலிருந்து கிடைக்கிறது. துப்புரவுப் பணிக்குப் பயன்படும் பீங்கான் பொருட்கள் தயாரிப்பதற்குத் தேவையான ஒரு வகைக் களி மண்ணும் நெய்வேலியில் கிடைக்கிறது. பண்ணுருட்டி-திண்டிவனம் ஆகிய பகுதியிலும் இந்தக் களிமண் கிடைக்கிறது. ஏனைய மூலப் பொருள்களான, க்வார்ட்ஸ், பெல்ஸ்பார் ( Felspar ), ஜிப்சம் ( Gypsum ) ஆகியவை சேலம், திருச்சி, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் கிடைக்கின்றன. மிகமிகத் தரமான மேக்னசைட், சேலத்தில் மிகுந்து காணப்படுகிறது. ஆகவே, தமிழகம் இந்த மூலப் பொருள்களைத் தன்னகத்தே கொண்டிருப்பதால்—இந்தப் பீங்கான் தொழிலைச் சிறப்புடன் செய்வதற்குத் தென் ஆர்க்காடு மாவட்டத்திற்கு நல்வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

பீங்கான் தொழில்—நாட்டின் நாகரிக வாழ்வுக்கு—நாட்டின் தொழில் வளத்துக்கு மிகவும் பயன்படும் ஓர் அடிப்படைத் தொழில். அநேக தொழில்கள், பீங்கான் தொழிலின் ஓர் அங்கமாக விளங்கும் சுகாதாரப் பொருட்களை எதிர்பார்க்குலால் இயங்கும் பல தொழில்கள்—தங்கள் உலைகளில் பீங்கான் பொருட்களைப் பயன்படுத்துகின்றன. இரும்பு—உருக்குத் தொழில்கள் பீங்கான் பொருட்களை மிகவும் எதிர்பார்க்கின்றன.

தொழில் துறை மட்டுமல்ல—சமுதாயத் துறையும் பீங்கான் பொருள்களை வரவேற்று வருகின்றன. செங்கற்கள், ஓடுகள், மெருகிடப் பட்ட பீங்கான் ஓடுகள், சுகாதாரச் சாதனங்கள் குழாய்கள், இன்சுலேட்டர்கள், ஆகியவை மக்கள் வாழ்வில் உன்னத இடத்தைப் பிடித்துள்ளன.

நமது நாட்டிலே உள்ள வசதி படைத்த மக்கள் பீங்கானால் செய்யப்பட்ட, சமையற் கருவிகள், அலங்காரப் பொருட்கள், கோப்பைகள், தம்ளர்கள், கலைப் பொருட்கள் ஆகியவற்றைப் பெரு விருப்பத்துடன் பயன்படுத்தி வருகிறார்கள்.

உச்ச ஆற்றல், மித ஆற்றல் கொண்ட இன்சுலேட்டர்கள் மின் துறையில் பயன்படுத்தப்படுகின்றன.

எனவே, ஆண்டு தோறும் இந்தப் பொருட்களின் விற்பனை அதிகரித்து வருகின்றதே தவிரக் குறைந்ததே கிடையாது.

ஆண்டு தோறும் பீங்கான் பொருட்களின் கண்காட்சி ஒன் ... மக்களுக்கு விருந்து படைத்து வருகிறது இந்தப் பீங்கான் தொழிற்சாலை. சென்ற ஆண்டு தொழில் வணிகத்துறையின் சார்பில் சென்னை இராசாசி மன்றத்தில் நடைபெற்ற இருவாரக் கண்காட்சியில் ஏராளமான அளவில் பீங்கான் பொருள்கள் விற்பனையாகின. இந்தப் பீங்கான் பொருள்களில் போர்வீரன் பொம்மை ஒன்று குறிப்பிடத்தக்கதாகஇருந்ததைச்சென்னை மக்கள் மறக்க முடியாது.

இந்தத் தொழிற்கூடத்தின் முக்கியத் தயாரிப்புகள் உப்பு மெருகிடப்பட்ட பீங்கான் குழாய்கள். 4 அங்குலம், 6 அங்குலம், 9 அங்குலம், 12 அங்குலம், 15 அங்குலம் ஆகிய அளவுகள் விட்டமுள்ள பீங்கான் குழாய்கள் இங்கே செய்யப்படுகின்றன.

இந்தியாவில் மற்ற மாநிலங்களில் உள்ள பீங்கான் தொழிற்சாலைகளில் 12 அங்குலம் வரைதான் குழாய்கள் செய்கிறார்கள். ஆனால் 15 அங்குலம் விட்டமுள்ள குழாய் இங்கேதான் செய்யப்படுகிறது.

சுகாதாரத் துறையில்—கழிவு நீர் அகற்றுவதற்கு—மற்றும் பல்வேறு வகைகளில் பயன்படும் இந்தக் குழாய்கள், விருத்தாசலம் பீங்கான் தொழிலுக்கே தனிப் பெருமை தரக் கூடியவை. இவை, உலைகளில் வைத்துத் தயாரிக்கப்படும்போது இறுதியில் சாதாரண உப்புத் தூவப்படுகின்றது. அதன் காரணமாக இந்தக் குழாய்களில் ஒரு தனி வண்ணம்—உருக்கு போன்ற வண்ணம் ஏற்படுகிறது. இந்த வண்ணம் அழிவதே கிடையாது. அது இந்தத் தொழிற்கூடத்தின் தனிச்சிறப்பு.

அதன் காரணமாகத்தான் 'இந்திய தரக் கட்டுப்பாடு' தனது முத்திரையைப் பதித்துக் கொள்ள அனுமதி அளித்திருக்கிறது. தமிழ் நாட்டில் பயன்படுத்தப் பெறும் குழாய்களில் பெரும்பாலும் இந்த நிறுவனத்தில் உருவாக்கப்பட்டவைதான்.

மைசூர், ஆந்திரம், கேரளம் முதலிய மாநிலங்களுக்கு இந்தக் குழாய்கள் அனுப்பப்படுகின்றன. வெளிநாடுகளுக்கும் விரைவில் ஏற்றுமதி செய்யப்பட ...

சத்துக்குரிய பீங்கான் குழாய்கள் தேவை என்று இலங்கை தெரிவித்திருக்கிறது.

இந்தத் தொழிற்சாலையில் பீங்கான் குழாய்கள் மட்டுமல்ல; வீட்டு உபயோகத்திற்குரிய துப்புரவுச் சாதனங்களும், சமையல் சாதனங்களும், கலைப் பொருட்களும் உருவாக்கப்படுகின்றன. அவை பல வண்ணங்களிலும் உருவாக்கப்பட்டு வருவது பாராட்டுக்குரியது. மக்களின் உள்ளங்களைக் கொள்ளை கொள்ளவல்லது. இதனைச் சென்ற ஆண்டு சென்னை இராசாசி மன்றத்தில் நடைபெற்ற பீங்கான் தொழிற்கண்காட்சியும், பீங்கான் பொருட்களின் விற்பனையும் மெய்ப்பிக்கின்றன.

### பயிற்சிப் பள்ளி

பீங்கான் தொழிலில் ஈடுபடக் கைத்திறன் மட்டும் போதாது; கலை நுணுக்க அறிவும் அவசியம் ஆகும். பீங்கான தொழிலின் செய் பொருள்கள் பெருமளவு அழகுப் பொருட்களாக இருக்கின்றன. அழகுப் பொருட்களின் பெருமை காலத்தை ஒட்டிய கண்ணோட்டத்தில் செய்வதில்தான் இருக்கிறது. இத் தொழில் சிறக்க, காலத்தால் அழிவு பெறாமல் இருக்கத் திறன் பெற்ற கைத்திறன், கலைநுணுக்க விற்பன்னர்கள் தேவை. இதற்காகப் பயிற்சிப் பள்ளி ஒன்றும் இயங்கி வருகிறது.

இப்பயிற்சிப் பள்ளியில் ஆண்டொன்றிற்கு 15 மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இங்குப் பயிலும் ஒவ்வொரு மாணவருக்கும் மாதம் ரூ. 50 உதவித் தொகையும் அளிக்கப்படுகிறது.

### தொழிற்பேட்டை

தனியார் துறையில் தனிப்பட்டவர்கள் பீங்கான் தொழிலில் ஈடுபடச் சில இயற்கையான இடர்ப்பாடுகள் உள்ளன. தொழில் அகங்கள் கட்டுவதற்கே ஏராளமான பணம் தேவைப்படுவது, தேவையான இயந்திரங்களின் உயர்ந்த விலை, தொழில் நுணுக்க அறிவுப் பற்றாக்குறை, தொடக்கக் காலத்தில் உள்ள இயற்கையான இடர்ப்பாடுகள் ஆகிய அனைத்தும் தனிப்பட்டவர்கள் இந்தத் தொழிலில் ஈடுபட முட்டுக் கட்டைகளாக இருக்கின்றன.



இக்குறைகளைக் களைய அரசே தொழிற்பேட்டை ஒன்றை விருத்தாசலத்தில் அமைத்துள்ளது. இங்குப் பலதரப்பட்ட தனியார்களின் தேவைகளுக்கு ஏற்ப ஏ., பி., சி., டி., என்று நான்கு வகைத் தொழிலகங்கள் கட்டப்பட்டுள்ளன. ஒவ்வொன்றும் தனிப்பட்டவர்களுக்கு வாடகை அல்லது குத்தகை அடிப்படையில் விடப்படுகின்றன. இந்தத் தொழிற் பேட்டையிலேயே பொது சர்வீஸ் நிலையம் ஒன்றுள்ளது. இங்கிருந்து எல்லாத் தொழிலகங்களுக்கும் தேவைப்படும் மூலப் பொருட்கள் பக்குவப் படுத்தி அளிக்கப்படுகின்றன. அதனால் பொருட்களை உருவமாக உருவாக்கும் இயந்திரங்களை மட்டும் தனியார்கள் வைத்துக் கொண்டால் போதும்.

மேலும் தொழில் தொடங்க விரும்பும் தனியார்களுக்குத் தொழில் நுட்பம், இயந்திரங்களை அமைக்கும் முறை போன்ற பல்வேறு வகைகளிலும் இங்கு உதவிகள் செய்து தரப்படுகின்றன.

தனியார்கள் மிகுந்த பொருட் செலவில் உலைகள் உருவாக்கிக் கொள்ள முடியாது. அதனால் அவர்கள் உலைகளைப் பயன்படுத்திக் கொள்வதற்குச் சதுர அடிக்கு 7 காசுகள் வீதம் வசூல் செய்து கொள்கிறது இந்தத் தொழிற்சாலை. இது ஓர் அரிய வாய்ப்பு.

படித்துவிட்டு, வேலையின்றித் தவிக்கும் ஒரு சில பட்டதாரிகள், இங்கேயுள்ள residence cum work shop திட்டத்தைப் பயன்படுத்தி முன்னேற்றம் அடைந்து வருகிறார்கள். டிப்ளமா பட்டம் பெற்ற சிலரும் இந்தத் திட்டத்தைப் பயன்படுத்தி வருகிறார்கள் என்பது குறிப்பிடத் தக்கது.

தமிழகத்தில் தென் ஆர்க்காடு இவ்வாறு, பீங்கான் தொழிலில் ஓங்கி நிற்கிறது.

## வெண்பாப் போட்டி 46

**'காற்று'** எனத் தொடங்கி 'மழை' என முடித்தல்.


**முடிவு நாள் :** 16—11—1972

பரிசு : **ஓராண்டு 'தமிழரசு'** அன்பளிப்பு

**வெண்பா அனுப்பவேண்டிய முகவரி:—**
**ஆசிரியர் (வெண்பாப் போட்டி),**
**"தமிழரசு" அலுவலகம்,**
**அரசினர் தோட்டம், சென்னை-2.**

**குறிப்பு :**
அஞ்சல் அட்டையில் வரும் வெண்பாக்களே ஏற்றுக் கொள்ளப்படும்.

# உழவர்களுக்குப் பயிற்சி தரும் ஒப்பற்ற நிலையம்



மாலையின் பெருமை மலர்களைத் தொடுப்பவனின் கைத்திறனில் உள்ளது. அதே போல் உழவின் பலன் உழவனின் திறமையில் உள்ளது.

எல்லாத் தொழில்களுக்கும் அச்சாணியாக விளங்குவது உழவு; அத்தொழிலில் வளர்ச்சியின்றி மற்றத் தொழில்களில் நிலையான-நிரந்தரமான நியாயமான வளர்ச்சி அடைவது இயலாத ஒன்று.

உழவுத் தொழிலின் மேன்மை, உழவர்களின் ஆக்கத் திறன், அறிவுத் திறன் ஆகியவைகளை ஒட்டிச் செல்வது. பழையன கழிதலும் புதியன புகுதலும் எல்லாத் தொழிலிலும் உண்டு. உழவுத் தொழிலும் இதற்கு விதி விலக்கல்ல.

இதைக் கண்ணுற்று உழவர்களின் கைத்திறனை, நுணுக்க அறிவுத் திறனை வளர்க்கத் தமிழக அரசு பலவகையான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளது. அவற்றில் ஒன்று மாநிலமெங்கும் பரவலாக ஆங்காங்கே உழவர்கள் பயிற்சி நிலையங்கள் அமைத்து, அந்தந்தப் பகுதி உழவர் பெருமக்களுக்கு ஆண், பெண் வேறுபாடின்றிப் பயிற்சி அளிப்பதாகும்.

இதுவரையிலும் தமிழகம் முழுவதும் தமிழக அரசு எட்டு உழவர்கள் பயிற்சி நிலையங்களை அமைத்துள்ளது. அவைகள் முறையே கோயம்புத்தூர் மாவட்டத்தில் பவானிசாகர், வட ஆர்க்காடு மாவட்டத்தில் ராணிப்பேட்டை, தஞ்சாவூர் மாவட்டத்தில் ஆடுதுறை, திருநெல்வேலி மாவட்டத்தில் கோவில்பட்டி, மதுரை மாவட்டத்தில் மதுரை, தென் ஆர்க்காடு மாவட்டத்தில் திண்டிவனம், திருச்சி மாவட்டத்தில் புத்தூர், உத்தமனூர் ஆகிய இடங்களில் தொடங்கப்பட்டுச் செயல்பட்டு வருகின்றன. இவை அனைத்தும் தமிழ்நாடு அரசின் வேளாண்மைத் துறையினரால் செயல்படுத்தப்பட்டுக் கண்காணிக்கப்படுகின்றன.

திண்டிவனம் உழவர்கள் பயிற்சி நிலையம் 1971-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்திலிருந்து செயல்பட்டு வருகிறது. இப்பயிற்சி நிலையம் திண்டிவனத்திலிருந்து 3 கி. மீ. தொலைவில் திண்டிவனம்-பாண்டிச்சேரிச் சாலையில் இருக்கிறது. திண்டிவனம் வட்டார வேளாண்மை ஆய்வு நிலையத்தின் ஓர் அங்கமாக இந்த நிலையம் செயல்பட்டு வருகிறது.

இப்பயிற்சி நிலையத்தில் உழவர் பெருமக்கள் ஆண் பெண் இருபாலரும் தேர்ந்தெடுக்கப்பட்டு அனுமதிக்கப்படுகின்றனர். தென் ஆர்க்காடு மாவட்டத்தில் உள்ள எல்லா ஊராட்சி ஒன்றியங்களிலிருந்தும் பயிற்சி பெற உழவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். இங்கு மைய அரசினரால் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.

1972-ஆம் ஆண்டு மார்ச்சு முடிய இதுவரையிலும் மொத்தம் இருபது பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டன. ஒவ்வொரு பயிற்சி வகுப்பிற்கும் ஆண், பெண் இருபாலரிலும் மொத்தம் இருபத்தைந்து பேர் தெரிந்தெடுக்கப்படுகின்றனர். ஒவ்வொரு பயிற்சி வகுப்பிற்காக இம்மாவட்டத்தில் உள்ள மூன்று ஊராட்சி ஒன்றியங்கள் தேர்ந்து எடுக்கப்பட்டு அவைகளிலிருந்து மட்டுமே பயிற்சி பெற உழவர்கள் தெரிந்து எடுக்கப்படுகின்றனர்.

1—4—1972 முதல் 31—3—1971 முடிய ஓராண்டுக்காலத்தில் ஆண்களுக்காக 10 பயிற்சி வகுப்புகளும், பெண்களுக்காக 10 பயிற்சி வகுப்புகளும், நடைபெற்றிருக்கின்றன. மொத்தம் 250 ஆண்களும், 250 பெண்களும் இதுவரையிலும் பயிற்சி பெற்றுள்ளனர்.

## பயிற்சி முறை

ஒவ்வொரு பயிற்சி வகுப்பிற்கும் உழவர்கள் தெரிந்து எடுக்கப்பட்டபின் எல்லாருக்கும் ஐந்து நாட்கள் உயர்ந்த வகை நெல், மற்றும் அந்தந்தப் பகுதியின் முக்கிய விளைபொருட்களான நிலக்கடலை, எள், கரும்பு பயிரினங்களைப் பயிரிடுவதில் ஆழமான விரிவான பயிற்சி அளிக்கப்படுகிறது.

அதற்குப் பின் பயிற்சி பெறும் ஆண், பெண்களிடையே இருந்து கருத்தரங்கிற்காக அமைப்பாளர் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். கருத்தரங்குக் குழுவின் அமைப்பாளர் தலைமையில் திருச்சி அகில இந்திய வானொலி நிலையத்தினரால் நாள்தோறும் மாலை 7-30 மணியிலிருந்து 8-00 மணி வரை ஒலி பரப்பப்படும் வேளாண்மைக் கருத்தரங்கு நிகழ்ச்சிகளைக் கேட்டுத் தங்களுக்குள் விவாதம் செய்து கொள்ளப் பயிற்சி அளிக்கப்படும். அத்தோடு அந்தப் பகுதியில் உள்ள பயிற்சி பெறாத முற்போக்கு எண்ணம் கொண்ட வேளாண்குடியினரிடையே நவீன வேளாண்மை முறையை எடுத்துச் சொல்லுதல் போன்ற பணிகளிலும் இவர்கள் ஈடுபடுத்தப்படுவர். இதுபோன்ற கருத்தரங்கு அமைப்பாளர்களுக்கான பயிற்சி வகுப்புகள் ஆண்டு ஒன்றிற்கு ஐந்து என்று நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. சென்ற ஆண்டு நடைபெற்ற ஐந்து கருத்தரங்கு அமைப்பாளர்கள் பயிற்சி வகுப்புகளில் மொத்தம் 125 பேர் பயிற்சி பெற்றுள்ளனர்.

## செய்முறைப் பயிற்சி

இவையன்றி உயர் ரக விதைத் தானியங்கள் பயிரிடும் முறையைப் பற்றிக் கிராமங்களிலேயே செய்முறைப் பயிற்சிகளும் நடத்தப்படுகின்றன. இதனால் கிராமப்புற வேளாண் குடியினர் பெரிதும் பயன் அடைகின்றனர். இம்முறைப் பயிற்சி 1971—72-ஆம் ஆண்டு 100 இடங்களில் நடத்தப்பட்டன. அவைகளின் மூலம் ஆண், பெண் இரு பாலரும் மொத்தம் 2,500 பேர் பயன் பெற்றுள்ளனர்.

## சுற்றுலா

பயிற்சி வகுப்புகளில் கலந்து கொள்ளும் பயிற்சியாளர்கள் கடலூர், பாலூர், விருத்தாசலம், திண்டிவனம் போன்ற இடங்களில் உள்ள வேளாண்மை ஆய்வு நிலையங்களுக்கும் அழைத்துச் செல்லப்படுவர். சென்ற ஆண்டு மட்டும் இதுபோன்று 20 சுற்றுலா ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

உயர்ரகத் தானியங்களிலிருந்து எப்படிச் சத்துள்ள உணவு வகைகள் தயாரிப்பது என்று செய்முறைப் பயிற்சிகளும் பெண்களுக்கு அளிக்கப்படுகின்றன.

சென்ற ஆண்டு இதுபோன்று செய்முறைப்பயிற்சிகள் பத்து நடத்தப்பட்டன.

### கருத்தரங்குக் குழுக்கள்

சென்ற ஆண்டு மட்டும் மொத்தம் 300 கருத்தரங்குக் குழுக்களின் கூட்டங்கள் நடத்தப்பட்டன. இதனால் 4,225 பேர் பயன் அடைந்துள்ளனர். கருத்தரங்குக் குழுக்களின் அமைப்பாளர்கள் தலைமையில் பயிற்சியாளர்கள் கூடி வானொலி வேளாண்மைத்துறை நிகழ்ச்சிகளைக் கேட்டுக் கருத்தரங்கு நடத்தி, அதன்மேல் ஏற்படும் ஐயங்களைத் தீர்த்துக் கொள்ளத் திருச்சி வானொலி நிலையத்தாரோடு கடிதப்போக்குவரத்து வைத்துக் கொள்ளுதல் போன்ற எல்லா வகைப் பயிற்சிகளும் பயிற்சியாளர் பெறுகின்றனர்.

இந்த உழவர்களின் பயிற்சி நிலைய முயற்சிகளுக்கு அகில இந்திய வானொலியினரும் பேருதவியாக இருந்து, நிலைய நிகழ்ச்சிகளை அவ்வப்போது பதிவு செய்து கொண்டு வானொலியில் ஒலிபரப்புகின்றனர்.

அமைப்பாளர்கள்வேளாண்மை அறிவு பெற அவர்களுக்குத் 'தமிழரசு' இதழ்கள் மற்றும் விவசாய விளக்கங்கள், வேளாண்மை உண்மைகளும் புள்ளி விவரங்களும் அவர்களுக்கு அளிக்கப்படுகின்றன.

இது போன்ற பயிற்சி நிலையங்கள் நாட்டில் கிராமப்புற வேளாண் குடியினரிடையே புதிய முறை வேளாண்மை முறைகளைத் தெரியப்படுத்தி அதன் மூலம் நாட்டின் உணவு உற்பத்தியைப் பெருக்கவே நடத்தப்படுகின்றன. இதற்காக இரண்டு செய்முறை விளக்கப் பண்ணைகளையும் இந்நிலையம் வைத்துள்ளது. அவைகளில் வேளாண் குடியினருக்குப் புதிய முறையில் எப்படி நாற்றுப் பயிரிடுவது, எப்படி நாற்று நடுவது, வளரும் பயிரை எப்படிப் பாதுகாப்பது, எப்படி அறுவடை செய்வது போன்றவைகள் கற்றுத்தரப்படுகின்றன.

இப்பயிற்சி நிலையம் மாவட்ட வேளாண்மை அலுவலர் தகுதியுள்ள சிறப்புத் துணை வேளாண்மை இயக்குநர் தலைமையில் இயங்குகிறது. அவருக்கு உதவியாக வானொலித் தொடர்பிற்காக ஒரு மாவட்ட வேளாண்மை அலுவலர், செய்முறைப் பயிற்சிக்காக ஒரு மாவட்ட வேளாண்மை அலுவலர், ஒரு பெண்கள் பயிற்சி அலுவலர், ஒரு துணை வேளாண்மை அலுவலர் மற்றும் பலர் இந்நிலையத்தில்பணிபுரிகின்றனர்.

### எதிர்காலத் திட்டம்

இப்பயிற்சி நிலையத்தின் பணி இப்பகுதி வேளாண் குடியினருக்குப் பெரும் பலன் அளித்து வருகிறது. இதனால் எல்லா வகை உயர் ரக வித்துக்களையும் பயன்படுத்தி வேளாண்மை முறையைச் சிறக்கச் செய்யும் பணியிலே இந்தப் பயிற்சி நிலையம் சிறப்பான திட்டங்களைத் தீட்டிச் செயல்பட முனைந்துள்ளது. இப்பயிற்சி நிலையத்தின் பணி சிறக்க இப்பகுதி வேளாண் குடியினரும் பேருதவியாக இருந்து செயல்பட வேண்டும் என்பதே இதன் விருப்பமும், வேண்டுகோளும் ஆகும்.

## தமிழகத் தொழில் அமைதி

தமிழகத்தில், 1957-ஆம் ஆண்டில் இருந்த தொழிற்சாலைகளின் எண்ணிக்கை 4,318. அப்போது நடந்த வேலை நிறுத்தங்களின் எண்ணிக்கை 248.

1958-ல் தொழிற்சாலைகளின் எண்ணிக்கை 4,250; வேலை நிறுத்தங்களின் எண்ணிக்கை 261.

1959-ல் தொழிற்சாலைகளின் எண்ணிக்கை 4,359; வேலை நிறுத்தங்களின் எண்ணிக்கை 214.

1960-ல் தொழிற்சாலைகளின் எண்ணிக்கை 4,361; வேலை நிறுத்தங்களின் எண்ணிக்கை 331.

1971-ல் தொழிற்சாலைகளின் எண்ணிக்கை 6,419 வேலை நிறுத்தங்களின் எண்ணிக்கை 308.



# நீர்த்தேக்கங்கள் நிறைந்த மாவட்டம்

தென் ஆர்க்காடு மாவட்டம், பல நீர்த்தேக்கங்களை உருவாக்கி அவற்றின் மூலமாகப் பாசன வசதிகளைச் செய்திருக்கிறது. ஏற்கெனவே இங்கு வெலிங்டன் நீர்த்தேக்கம், வீடூர் நீர்த் தேக்கம், மணி முக்தா நீர்த்தேக்கம், கோமுகி நீர்த்தேக்கம் போன்ற நீர்த்தேக்கங்கள் உள்ளன. புதிய நீர்த்தேக்கங்களை உருவாக்கத் தமிழக அரசு திட்டமிட்டுச் செயலாற்றி வருகிறது. அவற்றின் விவரத்தைப் பார்ப்போம்.

### வராக நதி அணைக்கட்டுத் திட்டம்

தென் ஆர்க்காடு மாவட்டத்தில் செஞ்சி வட்டத்தில் செவலபுரி கிராம எல்லையில் வராக நதியின் குறுக்கே ஓர் அணை கட்டுவதற்குத் தமிழக அரசு அனுமதி வழங்கியுள்ளது.

400 அடி நீளமுள்ள கல்லணை கட்டுவதற்கும், 13 கிலோ மீட்டர் நீளத்திற்குப் பிரதான கால்வாய் வெட்டுவதற்கும், கிளைக் கால்வாய்கள் வெட்டுவதற்கும் இத்திட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளன. இந்தத் திட்டத்திற்கு ரூ. 18.75 இலட்சம் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தால் செஞ்சி வட்டத்திலுள்ள 15 கிராமங்கள் பயனடையும். இதனல், 565 ஏக்கர் புன்செய் நிலங்களை, நன்செய் நிலங்களாக மாற்றவும், 215 ஏக்கர் தரிசு நிலங்களுக்குப் பாசன வசதி அளிக்கவும், மேலும், 1,254 ஏக்கர் பதிவு செய்யப்பட்ட நிலங்களுக்கு நிரந்தரப் பாசன வசதிகள் கிடைக்கவும் வழி வகை செய்யப்பட்டுள்ளன. இதன் வாயிலாகக் கிடைக்கப் போகும் அதிகப்படி உணவு உற்பத்தி ஆண்டு ஒன்றுக்கு —1,190 டன் என எதிர்பார்க்கப்படுகிறது.

### இராமராஜபுரம் அணைக்கட்டுத் திட்டம்

கள்ளக்குறிச்சி வட்டத்தில் உள்ள மணி நதியின் குறுக்கே கட்டப்பட்டிருந்த பழைய இராமராஜபுரம் அணைக்கட்டைப் புதுப்பித்து அந்த அணையில் இருந்து 12 மைலுக்குப் புதியதொரு வாய்க்கால் வெட்டி, 12 சிறு பாசன ஏரிகளுக்கு நீர்ப்பாசனம் அளிக்கும் பொருட்டு, ரூ. 16·08 இலட்சத்திற்கு 1960—61-ல் அரசினரால் திட்டமிடப்பட்டது. 1962—63-ல் வேலை துவக்கப்பட்டது. வாய்க்கால் வெட்டும்போது கடினமான பாறைகளை உடைக்க வேண்டிய நிலை ஏற்பட்டதால் ஒப்பந்ததாரர்களும், வேலையாட்களும் முன் வரவில்லை. மேலும், இவ்வாய்க்கால் வெட்டும் வேலைக்கு அதிக விகிதம் கோரப்பட்டதால் நடுநடுவே இவ்வேலை நின்று விட்டது. தமிழக அரசின் பெருமுயற்சியின் காரணமாக இந்த ஆண்டு சனவரி மாதத்தில் இந்தப் பணி மீண்டும் துவக்கப் பெற்றது. தற்போது முடிவடையும் தறுவாயில் உள்ளது.

12 மைல் நீளமுள்ள இந்த வாய்க்காலில் 1,25,000 கனஅடிப் பாறையை உடைக்கும் வேலையும், 15,84,000 கன அடி மண் வெட்டும் வேலையும் முடிந்துள்ளன. இவ்வாய்க்காலின் குறுக்கே கட்டவேண்டிய குறுக்குக் கட்டட வேலைகளும் பெரும் பகுதி முடிவுற்றுவிட்டன. விரைவில் வாய்க்கால் திறப்பு விழா கொண்டாடப்பட விருக்கிறது. இந்தத் திட்டத்திற்கு இதுவரை செலவு செய்யப்பட்ட தொகை ரூ. 15,41,000 ஆகும். இந்தத் திட்டத்தால் பயன்பெறும் நிலங்கள் சுமார் 1,400 ஏக்கர்கள்.

### தீவளூர் அணைக்கட்டுத் திட்டம்


விருத்தாசலம் வட்டத்தில் உள்ளபெரிய ஓடையின் குறுக்கே தீவளூர் கிராமத்தில் ஓர் அணையைக் கட்டி, அதன் வாயிலாக நீரைத் திருப்பிச் சுமார் 1,822 ஏக்கர் நிலங்களுக்குப் பாசன வசதி அளிப்பது இந்தத் திட்டத்தின் நோக்கம்.

இதன் மொத்த மதிப்பு ரூ. 7·60 இலட்சம். இத்திட்டம் 1965—66—ல் துவங்கப்பட்டது. தற்போதுதான் முடியும் தறுவாயில் உள்ளது. அணையின் தலைப்பு மதகு கட்டும் வேலைகள் முடிவடைந்துவிட்டன. வாய்க்கால் வெட்டும் வேலையும் பெரும்பகுதி முடிவடைந்துவிட்டது. இது வரை செலவான தொகை ரூ. 7,55,000 ஆகும்.

### இளைஞர் அணி

படித்துப் பட்டம்பெற்ற இளைஞர்கள் வேலைவாய்ப்புப் பெறுகிற வரையில் ஓரளவுக்காவது அவர்கள் சமுதாயத்திற்குப் பயன்பட்டிட அவர்களுக்கு அரசின் சார்பிலே மாதந்தோறும் 175 ரூபாய் அளிக்கலாம் என்ற திட்டத்தின் கீழ் உள்ள இளைஞர் அணியினர், 185 பேர் தென் ஆர்க்காடு மாவட்டத்தில் 16 ஊராட்சி ஒன்றியங்களில் தங்கள் பணியை நடத்தி வருகின்றனர்.


# தைமெட் 10-ஜி



## அடிவரை ஊடுருவிச் செயல் புரிகிறது.

[illegible]





# தென் ஆர்க்காடு வரலாற்றுக் கண்ணோட்டம்

நா. அமிர்தலிங்கம்

இன்றைய தென் ஆர்க்காடு மாவட்டத்தை அடக்கியுள்ள பகுதி தமிழகத்தின் தொன்மையான பகுதிகளில் ஒன்றாகும். வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலேயே அதாவது கற்காலம், உலோக காலம் ஆகிய காலங்களிலேயே இப்பகுதிகளில் ஆதிகுடிகள் வாழ்ந்ததற்கான சான்றுகள் பல கிடைத்துள்ளன. இப்பழங்குடி மக்கள் பயன்படுத்திய மட்பாண்டங்கள், உலோகக் கருவிகள் பல இம்மாவட்டப் பகுதிகளில் உள்ள தாவனூர், சத்தியமங்கலம், சித்தம்பூடி, சம்படை, கொங்கராயப்பாளையம், குகையூர், குண்டலூர் ஆகிய இடங்களில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. மாவட்டத்தின் மேற்குப் பகுதியில் அமைந்துள்ள கல்ராயன் மலைப்பகுதிகளில் பழங்குடி மக்கள் பலர் இன்றும் வாழ்ந்து வருகின்றனர்.

### சங்க காலம்

சங்க காலத்தில் தமிழகம் சேர, சோழ, பாண்டிய மூவேந்தர்களின் ஆட்சிக்குட்பட்டிருந்தது. தென் ஆர்க்காடு மாவட்டம் சோழ நாட்டின் பகுதியாக இருந்துள்ளது. காவியப் புகழ் பெற்ற கரிகாலன் இப்பகுதியை வென்று காடு திருத்தி நாடாக்கினான் என்பர். தென்ஆர்க்காடு, வடஆர்க்காடு, செங்கற்பட்டு மாவட்டங்கள் அடங்கிய சோழ நாட்டின் வடபகுதி, தொண்டை மண்டலம்என்ற பெயர் பெற்றது.

### பல்லவர் ஆட்சி

பல்லவர்கள் தென் இந்தியாவில் கி.பி. ஆறாம் நூற்றாண்டு முதல் பத்தாம் நூற்றாண்டு வரை சிறப்பாக அரசு புரிந்தனர். அவர்களுடைய தலை நகரம் காஞ்சி எனப்படும் காஞ்சிபுரம் ஆகும். இந்தப் பல்லவ ஆட்சிக் காலத்தில் தென் ஆர்க்காடு மாவட்டம் பல்லவ நாட்டின் சிறப்புமிக்க ஒரு பகுதியாக அமைந்திருந்தது. சிம்ம விஷ்ணு, சேரர்களையும், பாண்டியர்களையும் வென்றார். அவர் புதல்வர் மகேந்திரவர்மர் முதலில் சமண சமயத்தைச் சார்ந்திருந்து பின்னர் திருநாவுக்கரசரின் முயற்சியால் சைவரானார். நரசிம்ம பல்லவர் காலத்தில் தமிழகம் முழுதும் பல்லவ அரசின் கீழ் வந்தது. அவர்களின் ஆட்சிக்காலத்தில் சமயம், கலை, இலக்கியம் ஆகியவை சிறப்புற்று விளங்கின. சீயமங்கலம், தளவனூர் ஆகிய இடங்களில் பல்லவர் காலத்து மலைக்கோயில்கள் காணப்படுகின்றன.

பிற்காலத்தில் தென் ஆர்க்காடு மாவட்டத்திலுள்ள சேந்தமங்கலத்தைத் தலைநகராகக் கொண்டு கோப்பெருஞ்சிங்கர் என்ற பல்லவ மன்னர் ஒருவர் ஆண்டதாகத் தெரிகிறது. அவர் காலத்தில் சிதம்பரம் கோயிலின் மேற்குக் கோபுரம் கட்டப்பட்டது.

### சோழப் பேரரசு

கி. பி. பத்தாம் நூற்றாண்டில் பல்லவர் ஆட்சி பலவீனமடைந்ததும் தஞ்சைச் சோழ மன்னர்கள் எழுச்சியுற்றனர். சோழ அரசு விரிவடைந்ததும் தென் ஆர்க்காடு மீண்டும் சோழப் பேரரசின் ஒரு பகுதியாக அமைந்தது. கல்வி, சமயம், கலை, ஊராட்சி முறைகள் வளர்ந்தன.

சோழர்கள் இப்பகுதியிலிருந்து பல கோயில்களைப் புதுப்பித்தார்கள். பராந்தகச் சோழன் சிதம்பரம் நடராசர் கோயிலின் கூரையைப் பொன் ஓடுகளால் வேய்ந்தார். அதனால் அவருக்குத் தில்லைக்குப் பொன்வேய்ந்த பராந்தகன் என்ற சிறப்புப்பெயர் ஏற்பட்டது. மேலும் விக்கிரமச் சோழன், குலோத்துங்கன் ஆகியவர்களும் இக்கோயிலுக்குப் பல திருப்பணிகளைச் செய்துள்ளனர். மன்னர் மன்னர்களான இராசராசன், இராசேந்திரன் ஆகியவர்கள் காலத்தில் சோழ அரசர்கள் கால்வாய்களை வெட்டியும், ஏரிகளை அமைத்தும், நீர்ப்பாசன வசதிகளைப் பெருக்கினார்கள். அவர்கள் காலத்தில் வீராணம் ஏரி அமைக்கப்பட்டது. தென்

# தென் ஆர்க்காடு மாவட்டம்



ஆர்க்காடு மாவட்டம் அடங்கிய பகுதி சோழப் பேரரசில், செயங்கொண்ட சோழபுரம் என்று அழைக்கப்பட்டது.

### பாண்டியர் ஆட்சி

சோழப் பேரரசு நலிவடைந்த போது கி. பி. பதின்மூன்றாம் நூற்றாண்டில் பிற்காலப் பாண்டியர் வலிமை பெற்றார்கள். சடையவர்மன் சுந்தர பாண்டியனும் சடையவர்மன் குலசேகர பாண்டியனும் இவர்களில் குறிப்பிடத் தக்கவர்கள். தென் ஆர்க்காடு மாவட்டம் உள்ளிட்ட தமிழகம் இவர்களது ஆட்சிக்குள் வந்தது. சோழர்களைப் போன்றே இம்மாவட்டத்தில் பல கோயில்களை இம் மன்னர்கள் புதுப்பித்தனர். சுந்தர பாண்டியன் சிதம்பரம், திருவரங்கம் கோயில்களின் கூரைகளைப் புதுப்பித்துப் பொன்னால் வேய்ந்தார். அதனால் இப்பாண்டியன் பொன்வேய்ந்த பெருமாள் என்று சிறப்பிக்கப்பட்டார். இப்பிற்காலப் பாண்டிய மன்னர்கள் காலத்தில்தான் சிதம்பரம் கோயிலின் கிழக்குக் கோபுரம் கட்டப்பட்டது.

### சுல்தான் படையெடுப்பு

பாண்டியர் ஆட்சி வெகு காலம் நீடிக்கவில்லை. உள்நாட்டுப் போராட்டமும், வெளிப்பகையும் பாண்டியர்களை வலுவிழக்கச் செய்தன. இக்காலத்தில் டெல்லியில் பழம்பெரும் அரசுகள் மறைந்து ஆப்கானிய சுல்தான்களின் ஆட்சி ஏற்பட்டது. பாண்டிய அரசுரிமைப் போரில் கலந்து கொள்ளும் வாய்ப்பில் ஆப்கானிஸ்தான் தளபதி மாலிக்காபூர் என்பவன் படையெடுத்து வந்தான். அப்படையெடுப்பில் தென்ஆர்க்காடு மாவட்டமும் தப்பவில்லை. அவன், பழந்தமிழ் நகரங்களையும், புகழ்பெற்ற கோயில்களையும் கொள்ளையிட்டுச் சென்றான். இப்படையெடுப்பால் மதுரையில் சுல்தான்கள் ஆட்சி ஏற்பட்டது. அப்போது தென் ஆர்க்காடு மாவட்டத்தில் பழைய சோழ அரசின் தளபதிகளான சம்புவரையர்கள் ஒரு சிற்றரசை நிறுவ முயன்றனர். ஆனால் அது நீடித்து நிற்கவில்லை.

### நாயக்க ஆட்சியும் செஞ்சிநாடு உதயமும்

விஜயநகர நாயக்கர்களின் ஆட்சி தென்னாட்டில் வலுப்பெற்றதும் சுல்தான்களின் ஆட்சி முடிவுக்கு வந்தது. மதுரை, தஞ்சை அரசுகள் நாயக்க அரசுகளாக மாறின. விஜயநகரப் பேரரசு தென்னாட்டை நன்கு கண்காணிக்க வேலூரிலும், செஞ்சியிலும், கோட்டைகளை அமைத்துப் படைகளை வைத்தனர். செஞ்சிக்கோட்டையைத் தலைமையிடமாகக்கொண்ட நாயக்க அரசு தென் ஆர்க்காடு மாவட்டப் பகுதிகளைச் செஞ்சி நாடாக உருவாக்கியது. நாயக்கப் பிரதிநிதிகளில் குறிப்பிடத் தகுந்தவர் கிருஷ்ணப்ப நாயக்கர். இவர் செஞ்சிக்கோட்டையை வலுவானதாக அமைத்தார். செஞ்சியில் கல்யாண மகால் என்னும் அழகான கட்டடத்தையும் இவர் கட்டினார். திருக்கோவலூர், ஸ்ரீ முஷ்ணம் ஆகிய இடங்களிலுள்ள கோயில்களையும் அவர் கட்டினார். விஜயநகரப் பேரரசர்களில் புகழ் மிக்க கிருஷ்ணதேவராயர் சிதம்பரம் நடராசர் கோயிலின் வடக்குக் கோபுரத்தை அமைத்தார். வட ஆர்க்காட்டில் உள்ள திருவண்ணாமலைக் கோயிலின் ஆயிரக்கால் மண்டபத்தைக் கட்டியவரும் அவரே. செஞ்சியில் நாயக்கர் ஆட்சி சுமார் ஒரு நூற்றாண்டுக் காலம் நீடித்தது.

### பீஜப்பூர் சுல்தான் ஆட்சி

தலைக்காட்டுப்போரில் விஜய நகரப் பேரரசு வீழ்ச்சியடைந்தது. வெற்றிபெற்ற பீஜப்பூர் சுல்தானின் படைகள் தெற்கே பாய்ந்து வந்தன. கி.பி. 1648-ல் செஞ்சியைப் பீஜப்பூர் படைகள் பிடித்துக்கொண்டு, அங்கு சுல்தான்கள் ஆட்சியை நிறுவினார்கள். பீஜப்பூர் பிரதிநிதியாகச் செஞ்சியின் கில்லாதார்களாக ஆட்சி செய்தவர்களில் குறிப்பிடத் தகுந்தவர்கள் சய்யது நாசிர்கான், நாசிர்முகம்மதுகான்.

இவர்கள் காலத்தில் செஞ்சிக்கோட்டைக்குப் 'பாட்சாபாத்' என்று புதுப் பெயரிட்டனர். ஆனால் இவர்கள் ஆட்சியும் நீடிக்கவில்லை. இவர்கள் வைத்த பெயரும் நிற்கவில்லை.

### மராத்திய ஆட்சி

சத்திரபதி சிவாஜி, தக்காணத்தில் நிலையான அரசை நிறுவியதும், கி.பி. 1677-ல் ஒரு பெரும் படையுடன் தென்னாட்டின்மீது படையெடுத்து வந்து செஞ்சிக்கோட்டையைக் கைப்பற்றிக்கொண்டார். செஞ்சிப் பகுதிக்கு சாந்தாஜி, மராத்தியப் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டார். சிவாஜி இறந்த பிறகு அவர் மகன் சாம்பாஜி, மொகலாயச்சக்கரவர்த்தி ஔரங்கசீப்பிடம் கைதியாக ஆனார். சாம்பாஜியின் தம்பி இராசாராம், மொகலாயர் படைக்குத் தப்பிச் செஞ்சிக்கு வந்து சேர்ந்தார். ஆனால் மராத்திய ஆட்சியும் செஞ்சியில் வெகுகாலம் நீடிக்கவில்லை.

### மொகலாயர் ஆட்சி

ஔரங்கசீப்பின் படைகள் கி.பி. 1698-ல் செஞ்சியைத் தாக்கிப் பிடித்துக் கொண்டன. செஞ்சி நாடு இப்போது மொகலாயர் ஆட்சிக்குள் வந்தது. தென்னாட்டின் மொகலாயப் பிரதிநிதியாக தாவுத்கான் என்பவர் ஆர்க்காட்டில் பவுஜ்தாராக நியமிக்கப்பட்டார். இந்த ஆர்க்காட்டு பவுஜ்தார்கள்தான் பின்னர் ஆர்க்காட்டு நவாப் என்று அழைக்கப்பட்டவர்கள். இதுதவிர, செஞ்சிக் கோட்டையின் கில்லாதாராக மொகலாயப் படையில் ஒரு தளபதியாகப் பணிபுரிந்த சரூப்சிங் என்ற இராஜபுத்திரர் நியமிக்கப்பட்டார். சரூப் சிங்குக்குப் பின்னர் அவர் மகன் தேஜ்சிங் பட்டத்திற்கு வந்தார். தென் ஆர்க்காட்டு நாடோடிப் பாடல்களிலும், தெருக்கூத்துக்களிலும் அழியா இடம் பெற்றுவிட்ட தேசிங்கு ராஜன் என்கிற 'வெள்ளிக் கிழமை இராஜா' இவரே! ஔரங்கசீப்



இறந்த பிறகு தேசிங்கு ராஜன் சுதந்தரமடைந்து ஆர்க்காட்டு நவாபுக்கு வரி கொடுக்க மறுத்தார். இதனல் ஏற்பட்ட போரில் தேசிங்கு ராஜனும் அவரது தளபதி முகமத்கானும் வீரமாகப் போரிட்டு உயிர் துறந்தனர். செஞ்சிக்கோட்டை, ஆர்க்காட்டு நவாபின் நேரடி ஆட்சிக்குள் வந்தது. அப்போது ஆர்க்காட்டு நவாபாக இருந்த சைதுல்லாகான் தன் தலைநகரத்தை நான்கு ஆண்டுக் காலம் செஞ்சியில் வைத்திருந்தார். பின்னர் ஆர்க்காட்டுக்கு மாற்றிக் கொண்டார். நவாபின் பிரதிநிதிகள் அங்கு நியமிக்கப்பெற்றனர்.

## ஐரோப்பியர் குடியேற்றம்

நாயக்கப் பிரதிநிதிகள் செஞ்சியை ஆண்ட காலத்திலேயே தென் ஆர்க்காடு மாவட்டக் கடற்கரையோரப் பகுதிகளில் ஐரோப்பியர் பலர் வந்து குடியேறி வணிக நிலையங்களை அமைக்க ஆரம்பித்தனர். பதினாவது நூற்றாண்டின் இறுதியில், செஞ்சி கிருஷ்ணப்ப நாயக்கரின் அனுமதிபெற்றுப் போர்த்துகீசியர்கள் போர்ட் நோவோ எனப்படும் பரங்கிப்பேட்டையில் வந்து குடியேறினார்கள். டச்சுக்காரர்கள் பரங்கிப்பேட்டையிலும், தேவனாம்பட்டணத்திலும் வணிக நிலையங்களை அமைத்தனர். டேனிஷ்காரர் சிலரும் பரங்கிப்பேட்டையில் வந்து வாணிகம் செய்தார்கள்.

செஞ்சியில் ஆண்ட பீஜப்பூர் சுல்தானின் பிரதிநிதியிடம் பிராங்காயிஸ் மார்ட்டின் என்ற பிரெஞ்சுஅதிகாரி கி.பி.1674-ஆம் ஆண்டில் புதுச்சேரியைப் பெற்றார். இந்தியாவிலிருந்த பிரெஞ்சு ஆட்சிப் பகுதிகளின் தலைமையிடமாகப் புதுச்சேரி பின்னர் அமைந்தது. தென்னிந்தியாவில் நடந்த ஆதிக்கப் போட்டிக்கும், புதுச்சேரியைப் பிரெஞ்சுக்காரர்கள் தங்கள் இராணுவத் தளமாகப் பயன்படுத்தினர்.

செஞ்சியில் மராத்தியப் பிரதிநிதியாகவிருந்த இராசாராமிடமிருந்து ஆங்கிலேயர்கள் கி.பி. 1690-ல் கடலூரில் ஓர் இடத்தை வாங்கி ஒரு கோட்டையைக் கட்டிக் கொண்டார்கள். அந்தக் கோட்டைதான் புகழ்பெற்ற செயின்ட் டேவிட் கோட்டை எனப்படுவது. சென்னைக்கு அடுத்தபடியாகத் தென்னாட்டில் ஆங்கிலேயரின் இரண்டாவது கேந்திர இடமாக இக்கோட்டை அமைந்திருந்தது.

### வெற்றித் தூண்

செஞ்சிக் கோட்டை, பிரெஞ்சுக்காரர் வசமிருந்த போது அங்கிருந்த வெங்கடரமண ஆலயத்திலிருந்த சிற்ப வேலைப்பாடமைந்த கல் தூண்கள் பலவற்றைப் பெயர்த்துக் கொண்டு போய், புதுச்சேரியில் வெற்றித் தூண்களாகக் கட்டினர். அவற்றை இப்போதும் புதுச்சேரித் துறைமுகத்தின் வாயிலில் நாம் பார்க்கலாம். அதுபோலவே செஞ்சியிலிருந்து வேறு சில கல்தூண்களைச் சென்னைக்குக் கொண்டுவர ஆங்கிலேயர் 1858-ல் தீவிர முயற்சி செய்தனர். ஆனால் அது கைகூடவில்லை.

அப்போது நவாபு பதவிக்காக முகமதலியும், சந்தா சாகிபும் சண்டையிட்டார்கள். முகமதலிக்கு உதவியாக ஆங்கிலேயரும், சந்தாசாகிபுக்கு ஆதரவாக பிரெஞ்சுக்காரரும் போரில் ஈடுபட்டார்கள். இதன் காரணமாக எழுந்தபோர்களுக்குக் கர்நாடகப் போர்கள் என்று பெயர். அவற்றில் திருவண்ணாமலை, பெருமுக்கல், சிதம்பரம், புவனகிரி, பண்ணுருட்டி, விருத்தாசலம், வில்லியனூர், அரியான்குப்பம், செஞ்சி, கடலூர், புதுச்சேரி ஆகிய இடங்களில் நடைபெற்ற போர்கள் குறிப்பிடத்தக்கன.

பிரெஞ்சுக்காரர் கடலூரையும், ஆங்கிலேயர் புதுச்சேரியையும் பலமுறை தாக்கிக் கொண்டார்கள். கி.பி. 1750-ல் செஞ்சிக் கோட்டையைப் பிரெஞ்சுத் தளபதி புஸ்ஸி பிடித்துக் கொண்டார். கி.பி. 1758-ல் செயின்ட் டேவிட் கோட்டையைப் பிரெஞ்சுத் தளபதி லாலி பிடித்துக் கொண்டார். பிரெஞ்சுச் செல்வாக்கு தென்னாட்டில் அப்போது வெகுவாக உயர்ந்து வந்தது. ஆனால் வாய்ப்பு ஆங்கிலேயர்களின் பக்கமே இருந்தது. கி.பி. 1760-ல் சர் அயர் கூட் என்ற ஆங்கிலத் தளபதி வந்தவாசியில் நடந்த பெரும் போரில் பிரெஞ்சுக்காரரை நன்கு தோற்கடித்தார். 1761-ல் புதுச்சேரியையும் அவர் பிடித்து விட்டார். 1761-ல் புதுச்சேரியும் பிரெஞ்சுக்காரரிடமிருந்து ஆங்கிலேயர் வசம் வந்தது.

கருநாடகப் போர்கள் மட்டுமல்லாமல் மைசூர்ப் போர்களின் காரணமாக எழுந்த ' சில சண்டைகளும் இம்மாவட்ட எல்லைக்குள் நடைபெற்றன.

கி.பி. 1780-ல் ஐதர் அலி, செங்கம் கணவாய் வழியே புகுந்து வந்து திருவண்ணாமலையைத் தாக்கினார். அங்கு நடந்த சண்டையில் ஆங்கிலேயர் தோற்றனர். ஆனால் அதைத் தொடர்ந்து பரங்கிப்பேட்டை அருகே நடந்த போரில் ஐதர் அலி தோற்றுத் தப்பி ஓடும்படியாயிற்று. ஐதர் அலியின் மகன் திப்பு சுல்தான் பிரெஞ்சுக்காரர்களின் உதவியுடன் கி.பி. 1782-ல் கடலூரைத் தாக்கிப் பிடித்துக் கொண்டார். ஜெனரல் ஸ்டூவர்ட் என்ற ஆங்கிலத் தளபதி மீண்டும் கடலூரை மீட்டுவிட்டார். கடைசியாக மைசூர்ப் போர்களின் முடிவில் திப்பு சுல்தான் கொல்லப்பட்டார். அத்துடன் ஆங்கில ஆட்சியை எதிர்க்கும் எல்லாப் பெரிய சக்திகளும் தென் இந்தியாவில் அழிந்து போயிற்று. ஆங்கிலேயரின் ஆதரவுபெற்ற ஆர்க்காட்டு நவாபான முகமதலியின் ஆட்சி கருநாடகத்தில் நிலைநிறுத்தப் பட்டது. முகமதலிக்கு இருந்த போட்டிகள் யாவும் ஒழிந்து விட்டன. ஆனால் நடந்த போர்களினால் முகமதலி பெருங் கடன்காரர் ஆனார்.

கி.பி. 1774-ல் புவனகிரியில் வாழ்ந்த ராயோஜி என்பவருக்குப் பதின்மூன்றரை இலட்சம் பணத்திற்கு (பகோடா) தென் ஆர்க்காடு மாவட்டத்தைக் குத்தகைக்கு முகமதலி கொடுத்தார். இதனால் அவருக்குப் பணமுடை தீரவில்லை. பின்னர் ஆங்கிலேயரிடம் பட்டுள்ள கடனுக்கு ஈடாகத் தென் ஆர்க்காடு மாவட்டம் 1781-ல் ஆங்கிலேயரிடமே குத்தகைக்கு விடப்பட்டது. ஆனால் இந்த ஏற்பாட்டாலும் நிலைமை சீர்படவில்லை.

வெல்லெஸ்லி பிரபு ஆங்கிலக் கவர்னர் ஜெனரலாக இருந்தபோது கருநாடகம் முழுவதையும் தங்களுடைய நேரடி ஆட்சியில் ஆங்கிலேயர் எடுத்துக் கொண்டனர். ஆங்கில ஆட்சி அமைந்ததும் கி.பி. 1801-ல் தென் ஆர்க்காட்டுப் பகுதிகள் ஓர் மாவட்டமாக அமைக்கப்பட்டன. அதற்குத் தனியாக ஓர் ஆட்சித் தலைவர் நியமிக்கப்பட்டார். மாவட்டத்தின் தலைநகரமாகக் கடலூர் ஆக்கப்பட்டது. அப்படி அமைந்த மாவட்டத்தின் முதல் ஆட்சித் தலைவராக காப்டன் கிரஹாம் என்பவர் நியமிக்கப்பட்டார். இப்படித் தொடர்ந்த ஆங்கில ஆட்சி 1947-ஆம் ஆண்டு ஆகஸ்டு 15-ல்தான் முடிவுக்கு வந்தது.




## 12. உயிருக்கோரு விலை

கொல்லைக் கதவு தட்டப்படும் சத்தம் கேட்டு, முகத்தைத் துடைத்துக் கொண்டு, பரபரப் போடு சென்று கதவைத் திறந்தாள் அரசி. கொல்லைப் பக்கம் ஐம்பது தென்னைகளுக்கு மேலிருக்கும். பாதுகாப்பான வேலியென்று ஒன்றும் இல்லை.

கதவோரமாக டெய்சி நின்று கொண்டிருந்தாள்.

அரசிக்கு மேல்மூச்சு வாங்கியது.

"அவங்கதான் வந்திட்டாங்களாக்கும்னு பரபரத்துப் போயிட்டேன்'' என்றாள், குனிந்து முகத்தைத் துடைத்துக் கொண்டே.

"நீ எப்படி இருக்கியோன்னு பாத்திட்டுப் போக வந்தேன்'' என்றவாறு உள்ளே காலடி வைத்து, அரசியை ஏறிட்டுப் பார்த்தாள் டெய்சி.

"கொஞ்ச நேரத்துக்கு முன்னாலே கூட நினைச்சேன். நீயே வந்து நிக்கறே''.

"வேறே என்னமும் தகவல் வந்திச்சா?''

"எதுக்காகவும் கவலைப்பட வேண்டாம். பின்னாலேயே வாரோம்னு கன்னையா கிட்டச் சொல்லி அனுப்பிச்சாங்க. அதுவும் ரெண்டு நாளாகப் போகுதே'' என்றாள் அரசி கவலையுடன்.

"ஏன் கண்ணெல்லாம் சிவந்து போயிருக்கு?'' என்று கேட்டுப் பரிவோடு அரசியின் கரங்களைப் பற்றிக் கொண்டாள் டெய்சி.

"இந்த ஒரு வாரத்திலே நான் எவ்வளவோ தேறிட்டேன் டெய்சி; யாரை நினைச்சு, அவங்க செய்யிறதிலே எதை நினைச்சு நான் கலங்கணும்? கண்ணீரே வறண்டு போச்சு எனக்கு'' என்றாள் அரசி.

"விழுந்திருக்கிற முடிச்சு அழுதா மட்டும் விடுபடப் போகுதா? நம்ம தைரியமும் அவங்களுக்குத் துணை இருக்கணும்'' என்ற டெய்சி, அரசியின் தோளின்மீது கையை வைத்து, "உங்கண்ணு ஊருக்குள்ளே இருந்தாருன்னா, மனசுக்குள்ளே ஒரு தைரியம் வருது— இல்லையா?'' என்று கேட்டாள்.

"இதை இவரேகூட அடிக்கடி சொல்லுரு. சின்ன வயசிலே யிருந்தே அண்ணனுக்கு எதுக்காகவும் கவலைப் படவே தெரியாது'' என்றாள் அரசி.

"அன்னைக்கு அத்தனை கூட்டத்துக்குள்ளே சிரிச்சுக்கிட்டேதான் போனரு'' என்றாள் டெய்சி.

"அதையும் பார்த்தியா?''

"நானெங்கே பார்க்க முடிந்திச்சு? பீட்டர் வந்து கதையாச் சொன்னன். அவர்ன்னா அவன் உயிராயிருக்கான்'' என்றாள் டெய்சி.

"உன்னை விடவா?''

டெய்சி பதில் சொல்லாமல் அரசியின் கன்னத்தைக் கிள்ளினாள்.

"உங்கப்பா பஞ்சாயத்து ஆபீசுக்கே வந்து கோபமாப் பேசினராமே! நீயும் தயாராத் தானே அம்மா காலிலே விழுந்தியாம்'' என்று கேட்டபோது, அவளையும் அறியாமல் அரசியின் கண்கள் நீரை உகுத்தன.

அரசியின் கழுத்தைக் கட்டிக் கொண்டு, முகத்தோடு முகம் வைத்து, "என்ன அரசி— ஏன் அழறே?'' என்று கேட்டாள் டெய்சி.

அரசி அவளை அணைத்துக் கொண்டாள்.

"அம்மான்னு சொல்லும் போதே, கைக்கெட்டிய தூரத்திலிருந்தும், அம்மாவைக் காண முடியாத மகளுக்குத் தன்னலே கண்ணீர் வருது. அம்மா எப்படி இருக்காங்க? உங்கூடப் பேசினங்களா? என்ன சொன்னங்க?'' என்று அடுக்கடுக்காகக் கேள்விகளைக் கேட்டாள்.

"அந்த நேரத்திலே வேறே யாருக்குப் பேச முடிஞ்சது? அழறவங்களைச் சிரிக்க வைக்கிறதும், சிரிக்கிறவங்களை அழ வைக்கிறதும் அவருக்கு ரொம்ப லேசானது. யாரும் இடையிலே வாயைத் திறக்க முடியாது'' என்றாள் டெய்சி.

"கழுத்திலே முடிச்சு விழட்டும்—நீ வாயைத் திறக்காம இருக்கிறதைப் பாக்கலாம்'' என்று சொல்லிச் சிரித்தாள் அரசி.

அதற்குள் "யாரம்மா வந்திருக்கிறது?'' என்று குரல் பின் கட்டிலிருந்து கேட்டது.

அப்போதுதான் கொல்லைக் கதவோரமாகவே நின்று தங்களையே மறந்து, பேசிக் கொண்டிருப்பதை உணர்ந்து, இருவருமே திடுக்கிட்டுத் திரும்பினர்.

"டெய்சி வந்திருக்கு பாட்டி'' என்றாள் அரசி.

"கொல்லைப் பக்கமா வந்து நின்னுதான் பேசணுமா?'' என்றாள் பாட்டி கோபமாக.

டெய்சிக்கு நாக்கு வறண்டு விட்டது.

"இப்பத்தான் வந்தேன் பாட்டி'' என்று பதட்டத்துடன் சொன்னவள், அரசியின் கையைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டாள்.

"சிறுசுகளாச் சேர்ந்துதானே கூத்து நடத்துறிங்க? எதையும் சுமக்கத் தக்கனே நினைக்கணும்! அப்பத்தான் எப்பவும் கொண்டு செலுத்த முடியும்.'' என்றாள் பாட்டி மேலும்.

நினைத்து நினைத்துப் பார்த்தாலும், பாட்டிக்கு, இவர்களால் என்ன பதில் சொல்ல முடியும்?

'உள்ளே போவதா அல்லது இப்படியே திரும்பி விடுவதா?' என்ற குழப்பத்தில் நின்றாள் டெய்சி.

அப்போது, தலைவாசல் பக்கமிருந்து ஆளரவம் கேட்டது. தொடர்ந்து "பாட்டி", என்றழைக்கும் லிங்கத்தின் குரலும் கேட்டது.

அவர்கள் வந்து விட்டார்கள்; பாட்டியை முந்திக் கொண்டு குழந்தையைப் போல் முன் பக்கம் ஓடினாள் அரசி.

டெய்சியும், பரபரப்புடன் குனிந்து வேர்த்துப் போயிருந்த முகத்தைத் துடைத்துக் கொண்டு, உள்ளே செல்ல அடியெடுத்து வைத்த போது, பின்னால் கொல்லைப் பக்கமிருந்து குழந்தையொன்று அழும் குரல் கேட்டுத் தயங்கினாள். கதவை முழுவதுமாகத் திறந்து வெளியே எட்டிப் பார்த்தாள்.

கொல்லைத் தோப்பின் தென் கோடியில், சில்லாம்பட்டிக்குச் செல்லும் பாதையோரமாக, அழுகின்ற குழந்தையை இடுப்பிலே வைத்தவாறு நின்று, இங்கேயே பார்த்துக் கொண்டிருந்த பெண்ணொருத்தி, டெய்சி எட்டிப் பார்ப்பதைக் கண்டு, சற்று முன்னால் வந்து, கையசைத்துக் கூப்பிட்டாள்.

டெய்சிக்குத் திகைப்பாக இருந்தது.

இங்கிருந்து பார்க்கும் போது யாரென்று புரியவில்லை.

அவள் தெரிந்துதான் அழைக்கிறாளா? எதற்காக?

குழந்தைக்கு ஏதாவது வேண்டுமென்று கேட்பாளோ!

டெய்சி மறுபடியும் திரும்பிப் பார்த்தாள்.

அவள் தோப்புக்குள்ளேயே வந்து விட்டாள். குழந்தை மீண்டும் அழுதது. "இங்கே வாம்மா" என்று அவள் அவசரத்துடன் அழைப்பதும் அரைகுறையாகக் கேட்டது.

டெய்சி படிகளில் இறங்கி, அவளை நோக்கிச் சென்றவள், அவள், யாரென்று தெரிந்த போது திகைத்து நின்றுவிட்டாள்.

பொன்னையாவின் மனைவி சிவந்தி ......

இவள் இங்கே எதற்காகத் தனிமையில் வந்து நிற்கிறாள்?

சிவந்தியின் கண்கள் இரத்தம் போலச் சிவந்திருந்தன. டெய்சியை ஏறிட்டுப் பார்த்துப் படபடப்புடன் சொன்னாள்.

"அவரைத்தான், தலைவரைப் பாக்கணுமம்மா. யாரு கண்ணிலேயாவதுபட்டா கொன்னு போடுவாங்க. இந்தப் பக்கமா வரச் சொல்றியா?" என்றாள் அவள்.

திகைத்தாலும், "இருங்க— உள்ளே போய்ச் சொல்றேன்" என்று சொல்லிவிட்டுத் திரும்பினாள் டெய்சி.

### குடிநீர் வசதி

தென் ஆர்க்காடு மாவட்டத்தில் உள்ள மொத்த கிராமங்களின் எண்ணிக்கை 3,450; இவற்றில் 1967 வரையுள்ள 20 ஆண்டுகளில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி பெற்ற கிராமங்கள் 1,467; அதன் பின் கடந்த ஐந்தாண்டுகளில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி பெற்ற கிராமங்கள் 1803. எஞ்சியுள்ள 180 கிராமங்களுக்கு 41 இலட்ச ரூபாய் மதிப்பீட்டில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

வீட்டிற்குள் நுழைந்தபோது, முன்கூடம் நிறைய ஆள் இருப்பது தெரிந்தது.

எப்படியும் அவரிடமே தகவல் சொல்லியாக வேண்டுமே!

பின்கட்டைக் கடந்து முன்னால் வந்தாள் டெய்சி.

அதே சமயத்தில், இவளைத் தேடிக் கொண்டு அரசி முன்னால் வந்ததும் நல்லதாயிற்று.

அரசியை ஒரு பக்கமாக இழுத்துச் சென்று, "உங்கண்ணை உடனே பாக்கணுமாம். அந்தப் பொன்னையாவோட பெண்சாதி சிவந்தி கொல்லைப்பக்கமா வந்து நிக்கிறா?" என்று அவசரத்துடன் சொன்னாள் டெய்சி.

"சிவந்தியா—இங்கேயா?" அரசிக்கும் வியப்பாகவே இருந்தது.

அரசியைத் தொடர்ந்து, முன் பக்கமிருந்து பாண்டியனும் அங்கே வந்து விட்டான். இது வரையிலும் இங்கு டெய்சி வந்திருப்பது அவனுக்குத் தெரியாது. கண்டதும் முகம் மலர்ந்தது.

"நீயும் இங்கேதானா டெய்சி? ஒருத்தருக்கொருத்தர் ஆறுதல் சொல்லிக் கொண்டே இருந்திங்களாக்கும்" என்று கேட்டான் பாண்டியன்—அந்த வற்றாத புன்னகையுடன்.

டெய்சி அரசியைப் பார்த்தாள்.

அரசி சொன்னாள்.

"அண்ணா, கொல்லைப்பக்கமா அந்தப் பொண்ணு சிவந்தி வந்து நிக்கிறாளாம். உங்களைப் பாக்கணுமாம்." என்றாள்.

"இங்கேயா?" என்று வியப்போடு கேட்ட பாண்டியன் பரபரப்படைந்தவனாய், வேறு ஒன்றும் சொல்லாது பின்கட்டை நோக்கி நடந்தான்.

அரசியும் டெய்சியும் அவனைப் பின் தொடர்ந்து வந்தவர்கள் கொல்லைக் கதவோரமாகவே நின்று விட்டனர்.

பாண்டியன் அருகில் சென்ற போது, சிவந்தியின் இடுப்பிலிருந்த குழந்தையின் அழுகையும் அடங்கி விட்டது.

சிவந்தி தென்னையின் மறைவிலே நின்று கொண்டிருந்தாள்.

அருகில் நெருங்கி வந்த பாண்டியன், "என்ன சிவந்தி?" என்று பதட்டத்துடனே கேட்டான்.

சிவந்தி ஏறிட்டுப் பார்த்தாள்!

"உங்க சொல்லிலே நியாயம் இருக்குன்னு நினைச்சு, வெட்டினது யாருன்னு என் புருஷன் கிட்ட கேட்டதே.....இப்ப என் தலைக்கிக் கல்லா வந்து நிக்கிது" என்று சற்று ஆவேசத்துடன் சொன்னாள்.

என்ன நடந்திச்சு?''

''ரெண்டு நாளைக்குமுன்னாலே வந்து பேசினாரு. ''நான் செத்துப் போக மாட்டேன். கவலைப்படாதேன்னு சொன்னாரு. நானும், உங்களை அடிச்சது யாரு, எங்கிட்டச் சொல்லுங்கன்னு கேட்டேன். அவரும் யோசிச்சுக் கிட்டே இருந்தாரு. அதுக்குள்ளே அந்தக் கிழவன் வந்திட்டாரு. பொசுக்குன்னு பழம் வாங்கியாரச் சொல்லி என்னை வெளியே அனுப்பிச்சுப் போட்டு, அவருகிட்ட என்னத்தைச் சொன்னாரோ?''

பாண்டியன் சற்று நிதானித்துச் சொன்னான்.

''இருக்கிற நிலைமையிலே, எப்படியோ உனக்கும் பொன்னையாவுக்கும் மத்தியிலே அணை போடலைன்னா உண்மை வெளியாகிப்போகும் இல்லையா? சுருக்கத்திலே உருட்டி முத்தையாவோட மூளை பக்குவமா வேலை செய்திருக்கு; என்ன சொல்றிங்க?'

''படுக்கையிலே, நகர முடியாமக் கிடக்கிறவன் நெஞ்சிலே நஞ்சைக் கலந்தா, பொன்னையா உங்கூடப் பேசவும் மாட்டான், சீக்கிரமா செத்தும் போவான்னு அவங்க எதிர்பார்க்கிறாங்க.



படுக்கையிலே கிடக்கிறவன் கிட்ட, ஏற்கெனவே உனக்கும் எனக்கும் தொடர்பு உண்டுன்னு சொல்லி யிருக்காங்க. உனக்குப் புரியலையா?'' என்று அமைதியாகவே கேட்டான் பாண்டியன்.

கேட்டதும் சிவந்தி திகைத்துத்தான் போய்விட்டாள்.

''நாலு நாளா அவரு காலடியிலே உட்காந்து முகம் பார்க்க மாட்டாரான்னு அழுதுக்கிட்டிருந்தேனே. இந்தப் பாவிங்க செய்த மதிமோசம் எனக்குத் தெரியாமப் போச்சே. இல்லாததை இந்த நேரத்திலே இட்டுக் கட்டிச் சொல்றவங்க விளங்கு வாங்களா?'' என்றாள் குமுறலோடு.

''நீ கொடுக்கிற சாபம் அவங்களை எதுவும் செய்யாது. உயரத்தான் தூக்கிவைக்கும். நீயோ நானோ மனசாலே கூட நினைக்காததை இட்டுக்கட்டிச் சொல்லும் போது, பொன்னையாவுக்கு இந்தத் தீங்கைச் செய்தவங்க அவங்கதான்னு உனக்கு இப்ப நல்லாப்புரியும்'' என்று மேலும் சொன்னான் பாண்டியன்.

''அந்த மொட்டைத்தலைக் கிழவன் ஆஸ்பத்திரியைத்தானே சுத்தி வாராரு. இன்னிக்கி அவரும் இங்கே வரத்தானே நானும் புறப்பட்டு வந்திருக்கேன்'' என்றாள் சிவந்தி.

''பொன்னையாவோட உயிருக்கு ஒரு விலைபேசி வாயைக் கட்டி வச்சிருக்காங்க. அவங்களே காவலுக்கும் உட்கார்ந்திருக்காங்க. எப்படியும் உண்மையைத் தெரிஞ்சுக்கணும். நீயும் பக்கத்திலேயே இரு. அவன் பேசலேன்னாலும் நீ பேசு. உடனே போய்ச்சேரு. நாளைக்கி நானும் உனக்குத் துணையா இன்னொரு ஆளை அனுப்பி வைக்கிறேன்'' என்றான் பாண்டியன்.

''இத்தனை காலமாச்சே; எந்தலையிலே இப்படியொரு சொல்லு விழுந்தது இல்லையே'' என்றாள் சிவந்தி கண்களில் நீர் பொங்கி வர.

''அவங்க சொல்றதைப் பத்திக் கவலைப்பட்டுக் கிட்டே இருந்தா எந்தக் காரியமும் நடக்காது. நாம குற்றமற்றவங்களா இருக்கிறப்ப அதுக்கு அவசியமுமில்லை. எப்படியும் பொன்னையா பிழைச்சுக்கணும். நினைக்கிறது நடக்கணுங்கிறதுக்காக அவங்க எந்தப் பாவத்தையும் செய்யத் தயங்க மாட்டாங்க. அவங்களுக்கு மத்தியிலே, தைரியத்தோட, உண்மைவெல்லும்ங்கிற நம்பிக்கையோட இரு. இது போதும்'' என்றான் பாண்டியன்.

சிவந்தி, கீழே குனிந்து, தரையில் தவழ்ந்திருந்த மகனைத் தூக்கி இடுப்பிலே வைத்துக் கொண்டாள். அந்தக் குழந்தை, பொக்கை வாயைத் திறந்து, பாண்டியனைப் 'பார்த்துச் சிறித்தது.

''நானும் மறத்தி பெத்த மகதான். இந்த மட்டுக்கும் நடந்தது இன்னதுன்னு தெரிஞ்சுக்காம விடப்போறதில்லே.'' என்று ஆவேசத்தோடு சொன்னவள்—கண்கலங்கிக் குனிந்து மகனை அணைத்து முத்தமிட்டாள்.

''ஆத்திரப்படும் போது, காரியம் சிதறிப்போகும். அமைதியாவே இரு. சீக்கிரமாப் போ!'' என்றான் பாண்டியன்.

''இப்படியே நடந்து போயி— அணைப்பட்டியிலே வண்டி ஏறிக்கிறேன். வாரேங்க.'' என்று சொல்லிவிட்டுச் சிவந்தி திரும்பி நடந்தாள்.

அவள் நடையிலே ஒரு ஆவேசம் நிறைந்து விட்டதைப் பார்த்தவாறு நின்றான் பாண்டியன்.

வாழ்நாளில், உழைப்பைத் தவிர வேறு ஒன்றையுமே கண்டறியாத அந்தக் குடும்பத்தையே, பகடைக் காய்களாக உருட்டுகிறார்கள் பாவிகள்; இவள் நிமிர்ந்து விட்டாள். அந்த உறக்கத்திலிருந்து பொன்னையா தெளிந்து எழுவானா?

அங்கேயே நின்ற பாண்டியன், அந்தக் காட்சியையும் காண நேர்ந்தது.

சிவந்தி தோப்பைக் கடந்த போது, எதிரே பாதையோரமாக நாச்சிமுத்து நின்றுகொண்டிருப்பது தெரிந்தது. அவள் அருகிலே நெருங்கிய போது, அவளுக்கு முன்னால் காறி உமிழ்ந்து விட்டு, ஊரை நோக்கி நாச்சிமுத்து நடப்பது தெரிந்தது.

சிவந்தி அங்கேயே நின்று, திரும்பிப் பாண்டியனைப் பார்த்தாள்.

பாண்டியன், இங்கிருந்தே தலைக்குமேல் கையைத் தூக்கிப் பக்கவாட்டத்தில் அசைத்தான்.

சிவந்தி தயங்கவில்லை. நாச்சிமுத்து நடந்த தடத்திலேயே அவளும் நடந்தாள்.

கொல்லைக் கதவின் உட்புறமாகவும், படிகளிலும், எல்லாருமே நின்று, நடைபெற்ற இந்த நாடகத்தையேதான் ரசித்துக் கொண்டிருந்தார்கள்.

''இடையிலே .. இது என்னடா பெருங்கூத்தா இருக்கு ..?'' என்று வேகத்தோடு கேட்டாள் முன்னால் நின்ற பாட்டி.

நெருங்கி வந்த பாண்டியனின் கண்கள் டெய்சியைத் தேடின.

அவள் மட்டும் அங்கே இல்லை!

(வளரும்)

## பாய் நெசவுப் பயிற்சி நிலையம்

சிதம்பரம் வட்டத்தில் காட்டுமன்னார் கோயில் அருகில் உள்ளது செட்டித் தாங்கல் என்னும் கிராமம். இங்கே தமிழக அரசின் தொழில் வணிகத்துறை இந்த ஆண்டு சூலைத் திங்கள் முதல் நாளில் 'அரிசன மகளிர் பாய் நெசவுப் பயிற்சி நிலையம்' ஒன்றினை உருவாக்கியிருக்கிறது.

20 பெண்கள் இங்கே பயிற்சி பெறுகின்றார்கள். ஓராண்டுப் பயிற்சி இது. பயிற்சியாளர்களுக்கு மாதம் ரூபாய் 40 உதவிப்பணம் கொடுக்கப்படுகிறது. பயிற்சி முடிந்ததும் அவர்கள் சொந்தத்தில் இந்தத் தொழிலைத் துவக்குவதற்காக ரூபாய் 400 கடனைத் தருகிறது தமிழக அரசு.

இங்கே பயிற்சி பெறுபவர்களுக்குப் படிப்பு அதிகம் தேவை இல்லை என்றாலும் தற்போது பள்ளி இறுதிவரை படித்த பெண்கள் நால்வர், பயிற்சி பெறுகின்றனர்.

இரண்டு நாட்களில் ஒரு பாயை நெய்து முடிக்கிறார்கள். பாய்களுக்குத் தேவையான கோரை வணிகத் துறையின் வாயிலாகக் கரூரிலிருந்து வரவழைக்கப்படுகிறது.

தற்போது 10 தறிகள் உள்ள இந்தப் பயிற்சி நிலையத்தில் ஒரு பெண் பயிற்றுவிப்பாளர் பொறுப் பேற்றுப் பணிபுரிகின்றார்.

தென் ஆர்க்காடு மாவட்டம் தொழில் வளர்ச்சியில் பின் தங்கிய பகுதி என்று ஒரு சமயம் கருதப்பட்டது. அந்தக் கருத்து இன்று பழங் கதையாகி விட்டது. நெய்வேலியினால் தொழிற்பெருமை பெற்று விளங்கும் இம்மாவட்டத்தில் பொதுத் துறையின் கீழும், தனியார்துறையின் கீழும் பரவலான தொழில் வளர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. குறிப்பாகக் குடிசைத் தொழில் வளர்ச்சி போற்றத்தக்க தன்மையிலுள்ளது.




## இரசாயனத் தொழிற்சாலைகள்

கடலூர் பழைய நகரில் பாக்ட் நிறுவனத்தாரால் ஓர் உரத் தொழிற்சாலை நிறுவப்பட்டு வருகிறது. மேலும் ஏற்கெனவே இங்குப் பிரிமியர் உரத் தொழிற்சாலை 1 கோடி ரூபாய் அங்கீகரிக்கப்பட்ட மூலதனத்துடன் செயல் பட்டுவருகிறது. இங்கு சல்ப்யூரிக் ஆசிடும், சூப்பர் பாஸ்பேட்டும் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன. கடலூரில் பாரி நிறுவனத்தார் ஆண்டு தோறும் 1,000 டன் வீதத்தில் கலப்பு உரங்களைத் தயாரித்து வருகின்றனர். நெய்வேலியில் உரத் தொழிற்சாலை ஒன்று சீரிய முறையில் இயங்கி வருகின்றது. இவ்வாறு வாடிப் போன நிலங்களை உரமிட்டு வளர்த்து, விளைச்சலை அதிகமாக்க இத் தொழிற்சாலைகள் மூலம் அரசு நமக்கு உதவுகிறது.

## பொறியியல் தொழில்

வடலூரில் சேஷசாயி தொழில் நிறுவனத்தார் மின்சாரச் சாதனங்களைத் தயாரிக்கும் தொழிற்சாலையை நடத்தி வருகின்றனர். இத்தொழிற்சாலையில் ஆண்டு தோறும் சுமார் 1,200 டன் அதிக சக்தி தாங்கக் கூடிய இன்சுலேட்டர்களையும் (Insulators) 2,000 டன் காஸ்டிங்குகளையும், 120 டன் நான்பெரஸ் உலோக காஸ்டிங்குகளையும், 12,000 டன் போர்ஜின்களையும் தயாரித்து வருகிறது. இதன் மூலதனம் ரூ. 1 கோடியாகும். இத்தொழிற்சாலையில் சுமார் 700 பேர் வேலை செய்கின்றனர்.

மாநில அரசின் தொழில் துறைத் திட்டங்கள் இம்மாவட்டத்தில் சிறப்பாக நிறைவேற்றப்பட்டு வருகின்றன. அவற்றுள் விருத்தாசலத்தில் உள்ள மெருகிட்ட குழாய்த் தயாரிப்புத் தொழிற்சாலை, பீங்கான் பாண்டத் தொழிற்சாலை, பீங்கான் பாண்டத் தொழிற் பள்ளி, தொழிற்பண்ணை, குறிப்பிடத் தக்கவை. பீங்கான் பாண்டத் தொழிற்சாலையின் மொத்த மூலதனம் ரூபாய் 15 இலட்சமாகும். இந்தத்தொழிற்சாலைக்கு வேண்டிய முக்கிய மூலப் பொருள்கள் விருத்தாசலத்திலிருந்து 100 மைல் சுற்றளவில் கிடைக்கின்றன. இங்குத் துப்புரவுப் பாண்டங்கள், அலங்காரப் பாண்டங்கள், கோப்பைகள் முதலியவை செய்யப்படுகின்றன.

விருத்தாசலத்திலுள்ள மெருகிட்ட குழாய்த் தயாரிப்புத் தொழிற்சாலை ரூ 12 இலட்சம் மூலதனத்தோடு தொடங்கியது. இத்தொழிற்சாலை ஆண்டு தோறும் 6,000 டன் மெருகிட்ட குழாய்களைத் தயாரிக்கும் திறனுடையது. இங்குள்ள அலங்காரப் பாண்டத் தொழிற் பிரிவு உற்பத்தி செய்வதோடு ஆண்டு தோறும் 15 பேர்களுக்கு அலங்காரப் பாண்டத் தயாரிப்பில் பயிற்சியும் அளித்து வருகிறது. ஒவ்வொருவருக்கும் மாதம் ரூபாய் 50 உதவித் தொகை அளிக்கப்படுகிறது. பீங்கான் பாண்டத் தொழில் வளர்ச்சிக்காக 32½ இலட்சம் ரூபாய் செலவில் தொழிற்பேட்டை கட்டப்பட்டுள்ளது.

விருத்தாசலத்தில் தமிழக அரசின் அச்சகம் ஒன்று இயங்கி வருகிறது. இங்கு அரசு சம்பந்தப்பட்ட வெளியீடுகள், அச்சடிக்கப்படுகின்றன.

கூட்டுறவு முறையில் ஓர் அச்சகம் கடலூரில் இயங்கி வருகிறது.

## எண்ணெய்த் தொழிற்சாலை

விழுப்புரம் வனஸ்பதி எண்ணெய் தயாரிக்கும் ஆலை ஒன்று தமிழக அரசினரால் நிறுவப்பட்டு வெற்றிகரமாக இயங்கி வருகிறது. நெடுங்காலமாக முடங்கிக்கிடந்த இத் தொழிற்சாலையை இவ்வரசு திறந்து பல பேருக்கு வாழ்வளித்து வருகிறது. மேலும் கடலூரில் 'ஆயில் புராடக்ட்ஸ் கார்ப்பரேஷன்' என்ற ஓர் எண்ணெய்த் தொழிற்சாலையும் இயங்கி வருகிறது.

## அரிசி ஆலை

சிதம்பரத்தில் இந்திய உணவுக் கார்ப்பரேஷன் ஓர் அரிசி ஆலையை பிரம்மாண்டமான முறையில் கட்டியிருக்கிறது. இங்கு விஞ்ஞான முறையில் அரிசியை வேகவைத்து, உலர்த்தி, அறைக்கப்பட்டுச் சேமித்து வைக்கப்படுகின்றது. மேலும் கள்ளக் குறிச்சியில் உலகம் காத்தான் என்னுமிடத்தில் ஓர் அரிசி ஆலை இயங்கி வருகிறது.

அண்மையில் தனியாரின் முயற்சியில் பண்ணுருட்டிக்குப் பக்கத்தில் சாராயத் தொழிற்சாலை ஒன்று 50 இலட்ச ரூபாய் மூலதனத்தில் தொடங்கப்பெற்றிருக்கிறது.

தனியாரின் முயற்சியில் முந்திரித் தொழிற்சாலை ஒன்றும் பண்ணுருட்டிக்கு அருகில் இயங்கி வருகிறது.

### சர்க்கரை ஆலை

இந்த மாவட்டத்தில் கரும்பு விளைச்சல் அதிகமாக இருப்பதனால் நான்கு சர்க்கரை ஆலைகள் இயங்கி வருகின்றன. இவை கூட்டுறவுத் துறையின் வாயிலாக நடைபெறுகிறது. தனியாரின் நிருவாகத்தில் இயங்கும் சர்க்கரை ஆலைகளும் இந்த மாவட்டத்தில் உள்ளன.

### தொழிற்பேட்டைகள்

1967—ஆம் ஆண்டு ரூ. 3.79 இலட்சம் செலவில் 29.03 பரப்பளவில் வடலூரில் 4 தொழிற்கூடங்கள் கொண்ட ஒரு தொழிற்பேட்டை கட்டப்பட்டு 1969-ல் முடிவு பெற்றது. இந்தத் தொழிற்பேட்டையில் தயாராகும் உபரி சாதனங்கள் நெய்வேலி, வடலூர் பீங்கான் தொழிற்சாலை போன்றவற்றிற்குப் பயன்படுகின்றன.

கடலூர்-திருக்கோவலூர் செல்லும் பாதையில் கோண்டூர் என்னுமிடத்தில் 5.782 இலட்சம் செலவில் 15.60 ஏக்கர் பரப்பளவில் 6 தொழிற் கூடங்கள் கொண்ட ஒரு தொழிற்பேட்டை 1968-ல் தொடங்கப் பெற்றுள்ளது.

கடலூரில் எரிபொருள் தொழிற்கூடம் ஒன்று 4.6 இலட்சம் செலவில் 2.81 ஏக்கர் பரப்பளவில் 1968-ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டுச் சிறந்த முறையில் செயல்பட்டு வருகிறது.

மரக்காணத்தில் சுண்ணாம்புத் தொழிற்சாலை ஒன்று நிறுவப்பட்டுள்ளது. இம்மாவட்டத்திலுள்ள சர்க்கரைத் தொழிற்சாலைகளுக்கு இத் தொழிற்சாலை சுண்ணாம்பு விநியோகம் செய்து வருகிறது.

இவ்வாறு, தொழிற்கூடங்கள் இந்த மாவட்டத்தில் அதிகரிப்பதன் வாயிலாக, இந்த மாவட்டம் எழில் மிகுந்து விளங்குகிறது

### நிலப் பட்டா மனைப் பட்டா

தென் ஆர்க்காடு மாவட்டத்தில் கடந்த இருபதாண்டுகளில் 1947 முதல் 1967 வரை நிலங்கள் ஏழை எளியவர்களுக்கு உரிமையாக்கப்பட்டுப் பட்டா வழங்கப்பட்ட வகையில் மொத்தம் வழங்கப் பட்டுள்ள பட்டாக்களின் எண்ணிக்கை 15,813.

அதே காலத்தில் வழங்கப்பட்டுள்ள வீட்டுமனைப் பட்டாக்களின் எண்ணிக்கை 3,228.

அதன் பின்னுள்ள ஐந்தாண்டுகளில் தமிழக அரசு வழங்கியுள்ள நிலப்பட்டாக்களின் எண்ணிக்கை 34,188; வீட்டு மனைப் பட்டாக்களின் எண்ணிக்கை 85,476.


# காலக் கண்ணாடி

கட்டடங்கள். காலம் பதித்துச் சென்ற ... அவற்றைக் கண்டதும் எளிதாக அறியமுடிவதில்லை. வனப்பு மிகுந்திருப்பினும் வாய் திறவாதவை, அந்தச் சின்னங்கள். அவற்றைவிட சாஸனங்களும் சரித்திரமுமே கால ஓட்டத்தைக் கண்ணாடிபோலத் தெளிவாகக் காட்டுகின்றன. நூல்கள் அனைவருடனும் அளவளாவுகின்றன. கடந்த காலத்தை மெய்யாகப் பேணிப் பாதுகாப்பவை, புத்தகங்களும், பிற தஸ்தாவேஜுக்களுமே; சரித்திரம் எங்கு, எப்படிச் சாகாவரம் பெறுகிறது என்பதை வருங்காலத்துக்கு விளக்கிக் கூறி, வழி காட்டுகின்றன, அவை.

...த்தான நிகழ்ச்சிகள் பற்றியும், வரலாற்றை வகுக்கும் வல்லவர் குறித்தும் எழுதுவதையும் படிப்பதையும் முன்னிலும் எளிதாக்கியுள்ளது நவீனமுறைக் காகிதத் தயாரிப்பு. சேஷசாயி பேப்பர் அண்ட் போர்ட்ஸ் நிறுவனம் தற்போது தயாரித்துவரும் தரமான காகிதம் அமரநிலைக்குரிய 'அந்த சாஸ' ஆச்சர்யத்தரியப் பேருதவி புரிகிறது என்பதைக் கூறவும் வேண்டுமோ!

**சேஷசாயி பேப்பர் அண்ட் போர்ட்ஸ் லிமிடெட்**
பள்ளிப்பாளையம், சேலம் ஜில்லா, தென்னிந்தியா

SPB




# சுற்றுலாப் பெருமை கொண்ட பிச்சாவரம் காடுகள்

பரங்கிப் பேட்டை ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த கிள்ளை என்னும் கிராமத்தின் அருகே உள்ள பிச்சாவரம் காடு சுற்றுலாப் பெருமை படைத்தது.

இங்கே கடல்போன்ற நீர்ப் பரப்பு உள்ளது. அந்த நீர்ப் பரப்பில்வனப்பகுதியும் உள்ளது. அந்த வனப்பகுதிதான் பிச்சாவரம் காடு என்று சொல்லப்படுகிறது. படகின் துணைகொண்டுதான் அங்கே செல்ல முடியும்.

இந்தக் காடுகளில் சுர புன்னை என்ற மரங்கள் இருக்கின்றன. இதே போன்ற மரங்கள் உலகத்திலேயே ஆறு இடங்களில்தான் இருக்கின்றனவாம். இந்தியாவில் தண்டகாரண்யத்தில் உள்ளது. இந்த மரத்திலுள்ள காய்கள் வெடித்து, விதைகள் தண்ணீருக்குள் விழுகின்றன. அவை தாமாகவே முளைத்து மரங்களாகிவிடுகின்றன. இந்தக் காடுகளில்—பல வருடங்களுக்கு முன்பு அண்ணா அவர்கள் ஒரு முறை வந்து சென்றிருக்கிறார்; தனிமையில் அமர்ந்து சிந்தனை செய்திருக்கிறார்.


காடுகளும், நீர்ப்பரப்பும் கண்களுக்கு விருந்தாக அமைந்துள்ளன. மதுரை மாவட்டத்தில் தேக்கடியை அனைவரும் சிறப்பித்துச் சொல்வதுண்டு. 10 தேக்கடிகள் ஒன்று சேர்ந்தது, இந்தக் கிள்ளை என்று சொல்லலாம். சில பகுதிகளில் ஐந்து பக்கங்களில் வாய்க்கால்கள் பிரிகின்றன. நடுப்பகுதியில்—படகில் இருந்து பார்த்தால் கால்வாய்கள் பிரியும் பகுதிகளும்—மையப் பகுதியும் நம்மைப் பரவசப்படுத்தும்.

சின்ன வாய்க்கால், பெரிய வாய்க்கால், நண்டு வாய்க்கால், நரி வாய்க்கால் என்று பல வாய்க்கால்கள் உள்ளன. இவற்றை இங்குள்ள மீனவர்கள், தங்களது நாடோடிப் பாடல்களில் குறிப்பிடுகிறார்கள்.

இங்கே சின்ன வாய்க்கால், பில்லுமோடை, முழுக்குத்துறை, முடச ஓடை என்று பல கிராமங்கள் உள்ளன. இவை தீவு போல் காட்சி தருகின்றன.

இவற்றிற்குப் படகின் வாயிலாகத்தான் செல்ல வேண்டும். செல்லும் பாதை இந்த மீனவர்களுக்குத்தான் தெரியும்.

கிள்ளையிலிருந்து 2 மைல் தொலைவில் சின்னவாய்க்கால் இருக்கிறது. இங்கு 150 குடும்பங்கள் உள்ளன. இவர்கள் அனைவரும் மீன்பிடி தொழிலில் ஈடுபட்டுள்ளனர்; கிள்ளையிலிருந்து இங்கு வந்து குடியேறியுள்ளவர்கள். வருடத்தில் தை மாதம் முதல் புரட்டாசி மாதம் முடிய இவர்கள் இங்கேதான் தங்கியிருப்பார்கள். அதன்பிறகு கிள்ளைக்குச் சென்று விடுவார்கள். மழைக் காலத்தில் இங்கே இருப்பதில்லை. ஒரு சிலர், துணிவுடன் மழைக் காலத்தில்கூட இந்தச் சின்னவாய்க்கால் கிராமத்திலேயே இருப்பதுண்டு. ஒரு சமயம் பலத்த மழையினால் இங்குள்ள குடிசைகள் சீர்குலைந்து கடல் தண்ணீரில் சென்றதுண்டு.



சின்ன வாய்க்காலில் உள்ள குழந்தைகள் நாள்தோறும் படகில் கிள்ளைக்குச் சென்று படித்துத் திரும்புகிறார்கள்.

சின்ன வாய்க்காலில் உள்ள மீனவ மக்கள் ஆவணி மாதத்தில்தான் திருமண விழா நடத்துகிறார்கள். அதுவும் கிள்ளைக்கு வந்துதான் நடத்துகிறார்கள். தீவுப் பகுதிகளில் திருமண விழா நடத்துவதில்லை. அது போலவே, எவரும் மடிந்துவிட்டால், இறுதிச் சடங்குகளை நடத்துவதற்கும் கிள்ளைக்கே வந்து விடுகிறார்கள். இந்தப் பகுதிக்குப் பல வருடங்களுக்கு முன்பு இந்தியக் குடியரசுத் தலைவர் ஜாகீர் உசேன் வந்து சென்றிருக்கிறார். அறிஞர் அண்ணா அவர்களும் இங்கு வந்து சென்றிருக்கிறார்கள்.

இந்தப் பகுதி — ஏறக்குறைய காஷ்மீர் போன்ற நீர்நிலையை உடையது. இதனை அபிவிருத்தி செய்வதற்கும், இதனைச் சுற்றுலாத் தலமாக்குவதற்கும் ஒரு திட்டம் தமிழக அரசின் ஆய்வில் உள்ளது. இந்தப் பகுதி சுற்றுலாத் தலமாக ஆக்கப்பட்டால்—பறவைகளுக்கு வேடந்தாங்கல் ஏரி சரணாலயமாக அமைந்திருப்பது போல—மனித இனத்துக்கு—இந்தப் பகுதி மகிழ்ச்சி தரும் இடமாக மாறுவது உறுதி.

கிள்ளை ரெவின்யூ கிராமம். 16 குக்கிராமங்கள் கொண்டது. 8 ஆயிரம் மக்கள் இங்கே வாழ்கிறார்கள். இவர்களில் பாதிப் பேர் மீனவர்கள்.

கிள்ளையில் மீனவர் கூட்டுறவுச் சங்கம் இருக்கிறது. இவர்களுக்கு அரசு வலை விநியோகம் செய்கிறது. ஏறக்குறைய 1,500 படகுகள் இங்கே உள்ளன.

மீனவர்களுக்கு வீடு கட்டிக் கொள்ள அரசு 1,000 ரூபாய் பணம் தருகிறது. இதில் 75 சதவீதம் உதவித் தொகையாகவும், 25 சதவீதம் வட்டியில்லாக் கடனாகவும் தரப்படுகின்றது.

இதுவரை 80 வீடுகள் இந்த முறையில் உருவாகியுள்ளன. இன்னும் 40 வீடுகளுக்கு அனுமதி கொடுத்துள்ளது அரசு. இந்த ரூபாய் 1,000 தவிர மேற்கொண்டு பணம் செலவு செய்து வீடு கட்டிக்கொள்ள மீனவர்களுக்கு அனுமதி தந்துள்ளது அரசு.

# BHEL OFFERS

## MEDIUM AND HIGH PRESSURE VALVES FOR OIL, STEAM & NON AGGRESSIVE FLUIDS

Quality-built from high class pore-free, fine and uniform grained cast/forged/carbon alloy and stainless steel. All valves are subjected to hydraulic, air, steam and radiographic (X-ray) tests besides exhaustive manufacturing stage inspections.

Standardised spares for minimum and economical stocking.

| Pressure ranges: 10—250 kg./sq. cm. |
|---|
| Temperature ranges: Upto 550°C. |
| Sizes: 10—800 mm |

Also to A.P.I. Standards in 150, 300, 600 and 800 lbs. ratings

BHEL valves conform to Indian Boiler Regulations and are certified by the Chief Inspector of Boilers or by Lloyds Surveyor, on special request.

BHEL assures prompt deliveries of supplies. BHEL valves are backed by efficient after-sales service by their highly trained engineers and technicians.

SLIDE VALVES



NON-RETURN VALVES
(Piston lift and Swing check)



GLOBE VALVES




**BHEL VALVES**

**Foremost in fluid flow control**

*For Complete details, Contact:*
Commercial Manager,
BHARAT HEAVY ELECTRICALS LTD.
(A Govt. of India Undertaking)
**Unit:** High Pressure Boiler Plant, TIRUCHIRAPALLI-14.
*Regd. Office:* 5, Parliament St., New Delhi-1

# நிலம் புகழும் நெய்வேலி



ஒரு காலத்தில் கவனிப்பா ரற்றுக் காட்டு நிலமாகக்கிடந்த பகுதி இன்று தொழில் வளம் பெருக்கும் உன்னத நகரமாக உருவெடுத்திருக்கிறது. இந்த அதிசயம் நடைபெற்றிருக்கும் இடம்தான் வளம் சுரக்கும் நெய்வேலி. வீட்டுக்கு உதவும் 'லீக்கோ', நாட்டின் தொழில் வளம் பெருக்கிட மின்சாரம், ஏர்முனை செழிக்க உரம், இப்படி இங்குக் கிடைக்கும் இயற்கை வளம் மனித சமுதாயத்தை வாழ வைக்கும் அமுத சுரபி யாகத் திகழ்வதை வியப்புற்று வாழ்த்தாதார் இல்லை.

## நெய்வேலி வரலாறு

நாட்டின் தொழில் வளர உயிர்நாடி மின்சாரம். தொழில் வளர்ச்சி பெருகுவதற்கு ஏற்ப மின்சாரத்தின் தேவையும் பெரு குகிறது. தமிழகத்திலுள்ள நீர் நிலைகளில் எல்லாம் மின் சக்தி யைப் பெற்ற பிறகு பெறுவ தற்கு ஒன்றுமில்லை. அந்நீர் நிலைகளில் ஏற்ற முடிவுக்கு வந்த பிறகு அனல் மின்சார நிலையங்கள் நமது கவனத்தை ஈர்த்தன. அவற்றை இயக்க நிலக்கரி, வாயுக்கள், எண்ணெய் முதலியன தேவைப்பட்டன. அண்டை மாநிலங்களிலிருந்து நிலக்கரி கொண்டுவந்து அனல் மின்சார நிலையங்கள் உருவாக் கப்பட்டாலும் அது நமது மாநிலத் தொழில் வளர்ச்சிக் குப் போதாது என்ற நிலை ஏற் பட்ட போது, நெய்வேலியில் மாபெரும் அளவில் கிடைக்கும் பழுப்பு நிலக்கரி, நிபுணர்களின் கவனத்தைக் கவர்ந்தது. தோண் டத் தோண்டக் குறையாத இந்தக் கரிச் செல்வத்தைப் பயன்படுத்தி அனல் மின்சார நிலையம் உருவாக்கும் எண்ணம் பிறந்தது. அதன் விளைவே இன்றைய நெய்வேலி.

தமிழக அரசும் மத்திய அரசும் நடத்திய ஆராய்ச்சி களின் வாயிலாக இப்பகுதியில் இருநூறு கோடி டன்னுக்கு மேலான நிலக்கரியுள்ள நூறுசதுர மைல் பரப்பளவு, அதிகமான கரி உள்ள பகுதி என்று தேர்ந் தெடுக்கப்பட்டுள்ளது. இது அயல் நாடுகளில் கிடைக்கும் நிலக்கரிகளுடன் போட்டி போடக் கூடியது என்பது குறிப் பிடத்தக்கது.

## நிலக்கரிச் சுரங்கம்

சுமார் 180 அடி உயரத்துக்கு மேல் மண்; மேல் பாகத்தை அமுத்தக் கீழ் இருந்து மிகச்சக்தி வாய்ந்த நீர் ஊற்றுப் பகுதி, இரண்டுக்கும் இடையே தான். 55 அடியுள்ளகரிப்படிவம் ஒளிந்து கொண்டிருப்பது; அந்தச் செல் வத்தை அடைய வேண்டுமானால் மேல் மண்ணை அகற்ற வேண்டும்; அடியில் உள்ள சக்தி வாய்ந்த ஊற்று நீர் வெடித்து மேல் நோக்கிப் பாய்ந்து சுரங்கம் வெள்ளத்தினால் மூழ்காமலும் பார்த்துக் கொள்ள வேண்டும். இந்த இயற்கை விளையாட்டில் வெற்றி காணவே குகைச் சுரங்க முறையைக் கையாளாமல் திறந்த வெளிச் சுரங்க முறை பின்பற்றப்பட்டது.

சுரங்கவேலை ஆரம்பிக்கப்பட் டதும், சுமார் 50 பம்புசெட்டுகள் இடைவிடாது வேலை செய்து நிமிடத்திற்கு 50,000 காலன் வீதம் தண்ணீரை வெளியேற் றியது. இதன் காரணமாக நீர் ஊற்றின் சக்தி குறைந்தது. சுரங்க வேலை எவ்வித ஆபத்து மின்றி நடைபெற்று வருகிறது. இவ்விதம் வெளியேற்றப்படும் நீரில் ஒரு பகுதி மின் நிலையத் திற்கு அருகே ஓர் ஏரியில் தேக் கப்படுகிறது. இதுவே மின்சார நிலையம்; மற்றத் தொழில் நிலையங்களின் தேவைகளுக்கும் நகரத்தின் குடி தண்ணீர்த் தேவைக்கும் இது உதவுகிறது.

இம் மாபெரும் திட்டத்தைச் செயல்படுத்தும் பொறுப்பை 1955-ஆம் ஆண்டிலிருந்து மத்திய அரசு மேற்கொண்டு வருகிறது. இத்திட்டத்திற்கான மூலதனச் செலவு சுமார் ரூ.160கோடியாகும். இத்திட்டத் தின்கீழ் வெட்டியுள்ள முதற் சுரங்கத்தில் ஆண்டொன்றுக்கு 35 இலட்சம் டன் பழுப்பு நிலக் கரி கிடைத்தது. இந்த உற்பத் தியின் அளவு முதல் விரிவாக்க நிலையில் 55 இலட்சம் டன்னாக வும் பின்னர் 63 இலட்சம் டன் னாகவும் உயர்த்தப்படும். இங் குள்ள சுரங்கத்தில் 1962 மே மாதம் முதற் கொண்டு பழுப்பு நிலக்கரி வெட்டி யெடுக்கப்படு கிறது.

## அனல் மின்சார நிலையம்

சோவியத் ரஷ்யாவின் உதவியுடன் முதல் நிலையாக 250 மெகாவாட் மின்சார உற் பத்தியுள்ள அனல் மின்சார நிலை யம் நிறுவப்பட்டது. 1962 மே மாதத்தில் 50 மெகாவாட் உற் பத்தித் திறனுள்ள முதற் பிரிவு வேலை தொடங்கியது. ஐந்தா வது பிரிவு 1964 ஏப்ரலில் வேலை செய்யத் தொடங்கியது. இரண்டாவது நிலையாக 50 மெகா வாட் உற்பத்தித் திறனுள்ள 6-வது பிரிவு 1965 ஆகஸ்டு மாதத்தில் வேலை தொடங்கியது. இதனால் இந்த மின்சார நிலையத்தின் உற்பத்தித் திறன் 300 மெகா வாட்டாக உயர்ந் தது. 100 மெகா வாட் உற் பத்தித் திறனுள்ள 7-வது பிரிவு ஒன்று தற்போது இயங்கி வருகிறது. இதோடு ஒவ்வொன் றும் 100 மெகாவாட் உற்பத்தி செய்யக்கூடிய இரண்டு பிரிவுகளை நிறுவியுள்ளனர். தற்போது இதன் மொத்த உற்பத்தித்திறன் 600 மெகாவாட்டாகும். மேலும், நெய்வேலி அனல் மின்சார நிலையம் தமிழக மின்சார இணைப் பிற்கு மின்சாரம் அளிக்கிறது.

## உணவு உற்பத்தி பெருக

நெய்வேலியில் ரூ. 36 கோடி செலவில் நிறுவப்பட்டிருக்கும் இரசாயன உர உற்பத்தித் தொழிற்சாலை இந்தியாவிலேயே மிகப் பெரிய தொழிற்சாலை யாகும். நிலக்கரியை மூலப்பொரு ளாகக் கொண்டு இயங்கும் தொழிற்சாலை இந்தியாவிலேயே இது ஒன்றுதான். இது ஆண்டு ஒன்றுக்கு 70,000 டன் நைட் ரஜன் சத்துடன் கூடிய 1.52 இலட்சம் டன் யூரியா உரம் உற்பத்தி செய்யக்கூடிய திறனு

டபது. உணவுப் பொருள்கள் இறக்குமதி செய்யவும், இரசாயன உரங்களை இறக்குமதி செய்யவும் கணிசமான தொகை செலவிடப்படுகிறது. இந்த உரத் தொழிற்சாலையில் ஆண்டு தோறும் உற்பத்தியாகும் உரங்களை வயல்களில் பயன்படுத்துவதன் மூலம் 7 இலட்சம் டன் அதிக உணவு உற்பத்தி பெறலாம். இதனால் ரூ. 30 கோடி அந்நியச் செலாவணியில் மீதப்படுத்த முடியும். அது மட்டுமல்லாமல் ஆண்டு தோறும் ரூ. 10 கோடி மதிப்புள்ள இரசாயன உரங்களை இறக்குமதி செய்யாமல் தவிர்க்கலாம். இங்ஙனம் 40 கோடி ரூபாயை அந்நியச் செலாவணியில் மீதப்படுத்த இத் தொழிற்சாலை வழி வகுக்கிறது.

## தென் ஆர்க்காடு மாவட்டம்
## சில அடிப்படை விவரங்கள்

| | |
|---|---|
| மக்கள் தொகை | 36,17,723 |
| ஆண்கள் | 18,36,950 |
| பெண்கள் | 17,80,773 |
| பரப்பளவு | 10,762 (ச.கி. மீட்டர்) |
| வட்டங்கள் | 8 |
| கோட்டங்கள் | 4 |


### மனை வளம் ஓங்கிட...

வீட்டு உபயோகத்திற்காக ஆண்டு தோறும் 3.8 இலட்சம் டன் சுட்ட அச்சுக்கரி தயாரிக்கக் கூடிய தொழிற்சாலை ரூ. 28 இலட்சம் செலவில் நிறுவப்பட்டிருக்கிறது. முதன் முதலாக 1965 ஜூலை மாதத்தில் இங்குச் சுட்ட அச்சுக்கரி தயாரிக்கும் இயந்திரம் இயங்கத் தொடங்கியது. இத் தொழிற்சாலையில் உற்பத்தியாகும் 3.8 இலட்சம் டன் சுட்ட அச்சுக்கரிகளை வீட்டு உபயோகத்திற்குப் பயன்படுத்துவதன் மூலம் ஆண்டுதோறும் 15 இலட்சம் டன் மரங்கள் காப்பாற்றப்படுகின்றன என்கிற உண்மையையும் மறந்து விட முடியாது. இந்த நிலையத்தில் சுட்ட அச்சுக்கரிகள் தவிர தார், தாரின் துணைப் பொருள்கள், வண்ணங்கள் போன்றவையும் உற்பத்தி செய்யப்படுகின்றன.

இங்குள்ள வெள்ளைக் களிமண் சுத்தம் செய்யும் தொழிற்சாலை ரூ. 14 இலட்சம் செலவில் நிறுவப்பட்டது. இந்நிலையம் 1961-ல் வேலை தொடங்கியது. இது ஆண்டு ஒன்றுக்கு 6,000 டன் களிமண் சுத்தம் செய்யக் கூடியது. பீங்கான் பாண்டத் தொழிலுக்கு இந்தக் களிமண் பெரிதும் பயன்படுகிறது.

### தொழில் நகரம்

நெய்வேலி நிலக்கரியை மின்சார ஒளியாகவும், வயலுக்கு உரமாகவும், வீட்டுக்கு எரி பொருளாகவும், மாற்றிடும் உன்னதப் பணிகளில் ஏறக்குறைய 20,000-க்கு மேற்பட்டவர்கள் ஈடுபட்டுள்ளனர். இங்குச் சுமார் 12½ சதுர மைல் பரப்பில் மாபெரும் தொழில் நகரம் உருவாகியிருக்கிறது. ஏறக்குறைய 10,000-க்கு மேற்பட்ட வீடுகள் கட்டப்பட்டிருக்கின்றன. புதிது புதிதாக வீடுகள் தொடர்ந்து கட்டப்பட்டு வருகின்றன. தொழில்களால் எத்தனையோ பேருக்கு வேலை வாய்ப்பு; அதுபோல் இந்தத் தொழில் நகரத்தால் கிளைத்து வளர்ந்திருக்கும் தொழில் வாய்ப்புகள் எத்தனையோ! அங்காடிகள், திரைப்பட அரங்கு, பள்ளிகள், பூங்காக்கள், மருத்துவமனை, அஞ்சலகங்கள், சின்னஞ்சிறு கடைகள் கூட்டுறவு மாளிகைகள், விளையாட்டுத் திடல்கள், இப்படி எல்லாவிதமான வசதிகளும் இங்குப் பெருகி இருக்கின்றன. இங்குள்ள மருத்துவமனை 158 படுக்கை வசதிகள் கொண்டது. நவீன மருத்துவச் சாதனங்கள் அனைத்தையும் பெற்றுச் சிறந்த மருத்துவமனையாக விளங்குகின்றது. இயந்திரங்களின் பேரிரைச்சல், தொழில் நிலையங்களில் கேட்கிறது. ஆனாலும் இந்நகரம் அமைதி தவழும் நகரமே! அழகாக அமைக்கப்பட்டிருக்கும் இந்த நகரம் நம் தொழில் வளர்ச்சிக்கு ஒரு சின்னமாகத் திகழ்கிறது.



சேலத்தில் இரும்புத் தொழிற்சாலை வளர்ந்துவிட்டால் அங்கு எடுக்கப்படும் இரும்பை உருக்கத் தேவையான நிலக்கரி நெய்வேலியிலிருந்து கிடைக்கும். மேலும், மற்ற ஆக்க வேலைகளுக்காக மின்சாரமும் இங்கிருந்து பெற்றுக் கொள்ளலாம். எனவே சேலமும், நெய்வேலியும் வருங்காலத்தில் நமது தமிழகத்தை ஒரு வளம் சுரக்கும் தொழிற்சாலையாக மாற்றப் போவது உறுதி.

# சிறு நிலக் கிழார்களின் முன்னேற்றத் திட்டம்

வேளாண்மைக்கு முதன்மையான இடம் கொடுத்து வரும் தமிழக அரசு, சிறு நிலக்கிழார்களின் முன்னேற்றத்தில் மிகுந்த அக்கறை கொண்டிருக்கிறது. நான்கு அல்லது ஐந்து ஏக்கர் வைத்துள்ள சிறு விவசாயிகளின் முன்னேற்றத்திற்காகத் தென் ஆர்க்காடு மாவட்டத்தில் 1971-ஆம் ஆண்டு மார்ச்சு முதல் நாள் முதல் அரசினல் உருவாக்கப்பட்ட ஒரு தனித்துறை இயங்கி வருகிறது. இம் மாவட்டத்திலுள்ள 50,000 சிறு விவசாயிகளை உயர்த்த இத்துறையினர் பாடுபட்டு வருகின்றனர்.

12 ஊராட்சி ஒன்றியங்களில் இது செயல் பட்டு வருகின்றது. சுமார் 9,618 சிறு விவசாயிகள் 1971-ஆம் ஆண்டு வரை பலனடைந்துள்ளனர். 1972–73-ஆம் ஆண்டில் மேலும் பல ஊராட்சி ஒன்றியங்களில் இத்துறை செயல்படும்.

இத்துறையினர் இம்மாவட்டத்திலுள்ள சிறு விவசாயிகளுக்குக் கிணறு தோண்டுவதற்கும். கிணற்றை ஆழப்படுத்துவதற்கும் பண உதவி செய்கின்றனர். இத்திட்டத்தின்கீழ் 1,500 புதிய கிணறுகள் கட்டவும், 1,000 கிணறுகளை ஆழப்படுத்தவும் 85 இலட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டது. சுமார் 45 இலட்ச ரூபாயில், மின்சார மோட்டார்களும் ஏனைய வேளாண்மைக் கருவிகளும், எண்ணெய் இயந்திரங்களும் சிறு விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டிருக்கின்றன. ஏறத்தாழ 4 இலட்ச ரூபாய் செலவில் பூச்சி மருந்து தெளிக்கும் கருவிகள் வழங்கல், நிலச் சீர்திருத்தம் செய்தல், நிலத்தை உழுவதற்கு மாடுகள் வாங்குதல், உரம் வாங்குதல் ஆகியவற்றிற்காகச் சிறு விவசாயிகளுக்கு 1971–ஆம் ஆண்டு முதல் கடனுதவி வழங்கப்படுகிறது. இத்துடன் 2,000 ஏக்கர் நிலங்களை வளப்படுத்த, ரூ. 580.50 இலட்சம் கடனுதவிக் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ், சிறுவிவசாயிகள் மத்தியக் கூட்டுறவு வங்கியிலிருந்து கடன் பெற்றுப் பயனடைகிறார்கள்.

இத்துறையினர், சிறு விவசாயிகள் பயனடையும் பொருட்டு மாதிரி நிலங்களை உருவாக்கி எப்படிப் பயிரிட்டு நெல் விளைச்சலை அதிகப்படுத்துவது என்பதை அறிவுறுத்துகின்றனர். இந்தத் துறையில் விவசாயிகளுக்கு நிலம் பற்றிய கல்வியும் பயிற்சியும் அளிக்கப்படுகிறது. இத்துடன் பயிரைப் பாதுகாப்பது எப்படி என்றும், விற்பனை செய்வது எப்படி என்றும் அவர்களுக்குச் சொல்லித்தரப்படுகின்றது.

இம்மாவட்டத்தில், கடலூர், நெல்லிக்குப்பம், திருநாவலூர், உளுந்தூர்ப்பேட்டை, சங்கராபுரம், ரிஷிவந்தியம் ஆகிய நான்கு ஊராட்சி ஒன்றியங்களிலும் உள்ள சிறு விவசாயிகள் தங்கள் நிலத்தை உழ, சமன் செய்ய, அக்ரோ தொழில் துறையினர் 6 டிராக்டர்களை வழங்க முன் வந்துள்ளனர்.

800 மாதிரி நிலங்களை இத்துறையினர் ரூ. 80 ஆயிரத்துக்கு வாங்கி அவற்றில் உரமிடுவது எப்படி என்றும் மண்ணைப் பாதுகாப்பது எப்படி என்றும் விளைச்சலை அதிகப்படுத்துவது எப்படி என்றும் நடைமுறையாகக் கற்பிக்கின்றனர்.

இத்திட்டத்தால் ஏற்பட்ட பயனைப் புள்ளி விவரங்கள் கூறும்.

புதிய கிணறு தோண்டுதல் — 441—ரூபாய் 22,95,600

எண்ணெய் இயந்திரம், மின்சார மோட்டார்குழாய்களுக்காக 144—ரூபாய் 21,35,000

நிலச் சீர்திருத்தம்—110 ரூபாய் 1,02,000


விவசாயக் கருவிகள் வாங்க— 127—ரூபாய் 2,28,600

காளைகள், உரங்கள் வாங்க— 171—1,96,500


குறுகிய காலக் கடன், விதைகள், உரங்கள் வாங்க—938— ரூபாய் 3,61,215

குறுகிய காலக் கடன்கள் வழங்குவதோடு நீண்ட காலக் கடன்களும் வழங்கும் வகையில் ரூ. 771 இலட்சம் 1971–72-ல் வழங்கப்பட்டிருக்கிறது.

பதிவு செய்யப்படாத கரும்பு நிலங்களுக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் வாயிலாகச் சிறு விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ. 300 கடனுதவி வழங்கப்பட்டு வருகிறது. ஆனல், அதே சமயத்தில் பதிவு செய்யப்பட்ட கரும்பு வகைகளுக்காக-ஏக்கருக்கு ரூ. 1,000 வழங்கப்படுகிறது.



# குறளோவியம்





அழகு சுமந்து வரும் பெண்ணைப் பருவச் சுமையால் கனத்துப் போன இருதயம் படைத்த ஒரு வாலிபன் பார்க்கிறான். பார்த்தவன் தன் பாதையில் போவது தானே நியாயம்! அந்த அழகியின் மீது பழி கூறி விட்டுப் போகாவிட்டால் அவனுக்குத் தூக்கம் வராது போலும். மனித வழக்கமே அப்படித்தான் ஆகி விட்டது. வானத்தில் தவழும் நிலவைப் பார்த்து ''ஏ, நிலவே—ஏன் என்னை இப்படித் தகிக்கிறாய்?'' என்று கோபித்துக் கொள்வான். சலசலவெனப் பாயும் நீரோடை நிலங்கிழித்துச் செல்வதைப் பொறுமைக் கண்களோடு மனிதன் பார்த்து வயிற்றெரிச்சலை வெளியிடு வான். நான் வருந்தும்போது நீரோடை இப்படி இசைபாடிச் செல்வதா? என்று கவிதா உள்ளத்தோடு வசைபொழிவான். அத்தகைய ஓர் இளைஞனைத்தான் இதோ நம் கண் முன்னே— மன்னிக்கவும்— ஒரு மங்கையின் கண் முன்னே—நிற்கவைத்துக் கதற வைக்கிறார் வள்ளுவப் பெருந் தகையார்.

''கொடுமை பொருந்திய புருவங்கள் கோணுதல் இல்லாமல் தடுக்குமானால், இவளுடைய கண்கள் என்னை நடுங்க வைக்கும் அளவுக்கு என் மீது பாய மாட்டா!''

அவளது பார்வையில் பட்டுத் தெறிக் கிறதாம் அவனது பருவ நெஞ்சம்! அந்த இன்ப வேதனையில் புலம்புகிறான். அய் யகோ— அணை சரியாகப் போடப்பட்டுத் தடுக்கப்பட்டிருந்தால் விரகதாப வெள் ளம் என்னை மூழ்கடித்திருக்காதே! என்ற கருத்திலே கூறுகிறான்; அவள் சுந்தர விழிகளை—அவள் புருவங்கள் சுவர் போலத் தடுத்திருக்கக் கூடாதா என்று! வள்ளுவர் நடையில் அதைப் படியுங்கள்.

''கொடும்புருவம் கோடா
மறைப்பின் நடுங்கஞர்
செய்யல மன்இவள் கண்''

நடுங்கு அஞர் செய்யல—நடுக்கம் தரும் துன்பத்தைச் செய்யமாட்டா என்பது பொருள்.

களங்கம் இருக்கிறது என்பதற்காக நிலவைப் பழிப்பாரில்லை.

முள் உண்டு என்பதற்காக ரோஜா மலரை வெறுப்பாரில்லை.

இப்படித்தான் உதாரணங்கள் கேள்விப் பட்டிருக்கிறோம்.


முதல்வர் கலைஞர்
இதோ ஒரு புதிய உதாரணம் கேளுங்
கள். பழையதுதான்; ஆனாலும் புதுமை
நிறைந்தது. யசோதர காவியம் என்னும்
நூலில் உள்ள அவையடக்கத்தில் காணப்
படும் உவமையிது! அனலுக்குள்ளே
புகையொடுங்கி இருக்கிறது என்ற கார
ணத்திற்காக விளக்கை வெறுப்பா
ருண்டோ?
விளக்கு எரியும்போது அந்தச் சுடரில்
புகையும் மறைந்திருக்கிறது. அதற்காக
விளக்கை வெறுத்தலாகாது. அதை
இதோ அழகாகக் கூறுகிறான் புலவன்.
"உள் விரிந்த புகைக்கொடியுண்டென
எள்ளுகின்றன ரில்லை விளக்கினை"
பெயர் தெரியாத புலவரின் பெருமை
மிகு உவமை எப்படியிருக்கிறது பார்த்
தீர்களா?

# உயர்ந்து வரும் உழவுத் தொழில்

"உழுதுண்டு வாழ்வாரே
வாழ்வார் மற்றெல்லாம்
தொழுதுண்டு பின்செல்பவர்"

என்று உறுதியுடன் எடுத்துரைத்தார் திருவள்ளுவர். அந்த மொழிக்கேற்ப, உழவர் பெருமக்களின் வாழ்வு உயர்வதற்கும், உழவுத் தொழில் சிறப்பதற்கும் தமிழக அரசு அரும்பாடு பட்டு வருகிறது. உழவர்களுக்குப் பல வகைகளிலும் உதவி புரிந்து வருகிறது.

தஞ்சை மாவட்டத்திற்கு அடுத்தபடியாக வேளாண்மைக்குத் தகுந்த சாகுபடி நிலத்தின் பரப்பளவு தென் ஆர்க்காடு மாவட்டத்தில்தான் அதிகமாக உள்ளது.

இந்த மாவட்டத்தின் மொத்த நிலப்பரப்பு 27 இலட்சம் ஏக்கர். இதில் 17,43,817 ஏக்கர் நிலம், பயிர்த் தொழிலுக்குப் பயன்படுத்தப் பெறுகிறது. இதில் ஒரு போகத்திற்கு மேல் சாகுபடி செய்யப்படும் நிலம் சுமார் 3 இலட்சம் ஏக்கராகும்.

தரிசாகவும், பயன்படுத்தப்படாமலும், காடு மேடுகளாகவும் இருந்த நிலங்களைச் சீர்திருத்தி விளைச்சலைப் பன் மடங்கு உயர்த்தத் தமிழக அரசு பாடுபட்டுவருகிறது. மற்றத் துறைகளின் ஒத்துழைப்பின் வாயிலாகவும், சீரிய முறையில் செயல்பட்டு வருகிறது. இந்த மாவட்டத்தில் சாகுபடிக்குத் தகுந்த நன்செய் புன்செய் நிலங்கள் கடந்த 4 ஆண்டுகளில் கணிசமான அளவில் சீர்திருத்தப்பட்டுள்ளன.

### பீம கிராமம்

கள்ளக்குறிச்சிக்கு 5 கிலோமீட்டர் தொலைவில் உள்ள அரிய பெருமானூர் கிராமத்திற்குப் பீம கிராமம் என்ற பட்டம் ஆயுள் காப்பீடு நிறுவனத்தினால் அண்மையில் சூட்டப்பட்டிருக்கிறது. ஏன் தெரியுமா? அந்தக் கிராமத்தில் ஆயுள் காப்பீடு செய்யத் தகுதியுள்ள நூறு குடும்பங்களில் 77 ஈட்டுறுதிப் பத்திரங்கள் வாங்கியுள்ளனர். இது அருஞ்செயல் என்பதால் இந்த ஊருக்குப் பீம கிராமம் என்று பெயர் சூட்டப்பட்டது. இந்த விழாவில் போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ். இராமச்சந்திரன் அவர்கள் கலந்துகொண்டார்கள்.

### நீர்ப்பாசனம்

நிலத்துக்குப் போதுமான நீர்ப்பாசன வசதி இல்லாமையினால் நொடிந்து கிடந்த இம்மாவட்டக் கிராம வேளாண் பெருமக்களின் நல்வாழ்வுக்காக நீர்ப்பாசன வசதிகள் கடந்த 4 ஆண்டுகளில் அதிகரிக்கப்பட்டுள்ளன.

1967-68-ல், 1,03,776 கிணறுகள் கிராமங்களில் இருந்தன. 1969—70-ல், 1,43,725 கிணறுகளாக உயர்ந்தன. மேலும் நீர்ப் பாசனத்திற்குப் பயன்படும் குளங்கள், ஏரிகளின் எண்ணிக்கை 1967—68 ல் 5,505. அதுவே 1969—70 ல் 9,482 ஆக உயர்ந்துள்ளது.

வேளாண்மை வளர்ச்சியினை உயர்த்தத் தமிழக அரசு, தென் ஆர்க்காடு மாவட்டத்திற்கு 1969—70 ல் 6,55,777 ரூபாய் செலவிட்டிருக்கிறது.

### நீர்ப்பாசன வசதிகள்

இம்மாவட்டத்தில் அழகுற ஓடும் பெண்ணையாறு, கெடிலம், கொள்ளிடம், வெள்ளாறு, மணிமுத்தாறு, கோமுகி நதி, மயூர நதி, பம்பையாறு, பரணி, துரிஞ்சலாறு, சங்கராபரணி, தொண்டியாறு போன்ற ஆறுகள் இம்மாவட்டத்தினை நெற் கொழிக்கும் சோலையாக மாற்றுகின்றன.

இம்மாவட்டத்தில் வீராணம் ஏரி, பெருமாள் ஏரி, வாலாசா ஏரி ஆகியவை வேளாண்மைக்கு வழி புரிகின்றன.

சீரான நிர்வாகம் நடந்தேறப் பொதுப் பணித்துறை பல பகுதிகளாகப் பிரிந்து இம்மாவட்டத்தில் செயலாற்றி வருகின்றது. 1966-ஆம் ஆண்டு இறுதியில் ஏற்பட்ட கடும்வெள்ளம் காரணமாகத் திண்டிவனம், செஞ்சி ஆகிய வட்டங்கள் மிகவும் பாதிக்கப்பட்டன. நீர்ப்பாசனக் கால்வாய்கள், ஏரிகள் பல பாதிக்கப்பட்டன. கடும் வெள்ளத்தினால் நீர்ப்பாசனத் திட்டங்களுக்கு ஏற்படும் ஆபத்தினைக் கண்காணிக்க ஒரு புதிய பகுதியை அரசு இம்மாவட்டத்தில் ஏற்படுத்தியது. அப்பகுதி இன்றும் திண்டிவனத்தைத் தலைமை அலுவலகமாகக் கொண்டு செயல்பட்டு வருகின்றது. நந்தன் கால்வாயைச் சீர்திருத்தி அமைத்து விழுப்புரம் வட்டத்தை வளமாக்க இத்துறையினர் பெரு முயற்சி எடுத்து வருகின்றனர். இம்மாவட்டத்திலுள்ள ஏரிகளும், அணைகளும், ஆறுகளும் இவர்களின் கண்காணிப்பில் இருந்து வருகின்றன. இத்துறையினர் இம்மாவட்டத்தில் நீர்ப்பாசன வசதிக்கென அணைகள் கட்டுதல், குளங்கள் வெட்டுதல், கால்வாய் வெட்டுதல் வடிகால்வாயை அமைத்தல் போன்ற திட்டங்களை இவற்றின் பராமரிப்பினையும் ஏற்று நடத்துகின்றனர். இத்துறையினராலேயே இம்மாவட்டத்தில் வேளாண்மை வளம் பெற வழி பிறக்கின்றது.

### நீர் உயர நிலம் உயரும்

இம்மாவட்டத்தில் உள்ள முக்கியமான நீர்ப்பாசனத் திட்டங்களாவன : சிதம்பரம் வட்டத்திற்குக் கொள்ளிடமும், கடலூர், விருத்தாசலம், சிதம்பரம் ஆகிய வட்டங்களுக்கு வெள்ளாறும், விருத்தாசலம் கள்ளக்குறிச்சி ஆகிய வட்டங்களுக்கு மணி முத்தாறு நதியும், கள்ளக்குறிச்சி வட்டத்திற்கு கோமுகி நதியும், திருக்கோவலூர் விழுப்புரம், கடலூர் வட்டங்களுக்குப் பொன்னியாறும், செஞ்சி, திண்டிவனம் ஆகிய வட்டங்களுக்கு வராக நதியும், திண்டிவனம் வட்டத்திற்கு ஏடாண்டியாறு மாகும். இத்துடன் வீடூர் நீர்த் தேக்கத் திட்டம் என்ற ஒன்றும் செயல்பட்டு வருகிறது. வீடூர் நீர்த் தேக்கத்திலிருந்து தமிழ் நாட்டிலுள்ள இரண்டாயிரத்து இரு நூறு ஏக்கர் நிலத்

திற்கும் புதுவை மாநிலத்திலுள்ள 1,000 ஏக்கர் நிலங்களுக்கும் நீர்ப்பாசன வசதி அளிக்கப்படுகின்றன. மணிமுத்தாறு நதியைத் தடுத்து நீரைத் தேக்கி அதன் மூலம் 400 ஏக்கர் நிலங்களுக்கு நீர்ப்பாசன வசதி அளிக்கப்படுகிறது. கோமுகி நதித் திட்டத்தின் மூலம் 5,000 ஏக்கர் நிலங்கள் பாசனவசதி பெறுகின்றன.

### சிறப்புப் பாசனத் திட்டம்

இம்மாவட்டத்திலுள்ள ஆறுகளையும், குளங்களையும், சீர்திருத்தி நீர்ப்பாசன வசதிக்குத் தகுந்தவாறு மாற்றி அமைப்பதற்கு அரசு கோடிக் கணக்கான ரூபாயைச் செலவிட்டிருக்கிறது.

இம்மாவட்டத்திலுள்ள சிதம்பரம் வட்டத்திலுள்ள குளங்களைச் சீர் படுத்தி மதகுகள் அமைத்து நீர்ப்பாசன வசதியை அதிகப்படுத்தி விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த ரூ. 20,19,200 அரசு செலவிட்டிடிருக்கிறது.

இம்மாவட்டத்தில் உள்ள கடலூர் வட்டத்தில் செம்மங்குப்பம் கிராமம் போன்ற பல கிராமங்களுக்கு நீர்ப்பாசன வசதி செய்து தருவதற்கு ரூ. 3,06,000 அரசு செலவிட்டிருக்கிறது. திருக்கோவலூர் வட்டத்திலுள்ள முகையூர் ஊற்று வாய்க்காலுக்கு மதகு அமைப்பது போன்ற மற்றும் பல வேலைகளுக்கும் அரசு ரூ. 2,83,600 செலவிட்டிருக்கிறது.

வரலாற்றுப் புகழ் பெற்ற செஞ்சி வட்டத்திற்குச் செல்வபுரி கிராமத்தில் வராகநதியைத் தடுத்து ஓர் அணையை அரசு கட்டியுள்ளது. இதற்கு ரூபாய் 1,29,00,000 செலவிட்டிருக்கிறது. இம்மாவட்டத்திற்கென அரசு ரூபாய் 2,45,08,000 நீர்ப்பாசன வசதிக் கெனச் செலவிட்டிருக்கிறது. விருத்தாசலம்,விழுப்புரம் வட்டங்களில் புலியூர் அணைக்கட்டுக் கால்வாய்க்கும் நீர்த்தேக்கத்திற்கும் சிறப்பு மராமத்து வேலைகள் செய்வதற்கும் மற்றும் பல திட்டங்களுக்காகவும், ரூ.2,47,500 அரசு செலவிட்டிருக்கிறது.


### புனரமைப்புத் திட்டம்

நீர்ப்பாசன வசதியை அதிகப்படுத்தும் பொருட்டு இம்மாவட்டத்திலுள்ள ஏரி, குளங்கள் ஆகியவற்றினைத் தூர் எடுத்துத் தேக்கியுள்ள நீரை வெளியேற்றி அதிக நீரும் சுத்தமான நீரும் கிடைக்க வழி செய்யும் பொருட்டு அரசு இம்மாவட்டத்திற்குப் பெரும் தொகையைச் செலவிட்டிருக்கிறது. இம்மாவட்டத்திலுள்ள திருக்கோவலூர் வட்டத்திலுள்ள மட்டிகை நீர்த் தேக்கத்தில் தூர் எடுப்பதற்காக ரூ. 9,900 அரசு செலவிட்டிருக்கிறது. இதனோடு, இவ்வட்டத்திற்கும் அரசு ரூ. 2,59,200 செலவிட்டிருக்கிறது.

திண்டிவனம் வட்டத்திற்கென ரூ. 7,800 கள்ளக்குறிச்சி வட்டத்திற்கெனரூ.72,000 விருத்தாசலம் வட்டத்திற்கென ரூ. 56,200; விழுப்புரம் வட்டத்திற்கென ரூ. 7,500 கடந்த நான்கு ஆண்டுகளில் அரசு செலவிட்டிருக்கிறது.

### வடிகால் வசதி

நெல் விளைச்சலுக்கு, நிலத்தில் பாய்ந்த நீர் வடிவதற்கு வாய்க்கால் வெட்டும் திட்டத்திற்காகச் சிதம்பரம் வட்டத்தில் அரசு ரூ. 1,45,600 செலவிட்டிருக்கிறது. இதில் ரூ. 9,300 குறியாமங்கலம், கீழ் மூங்கிலடி கிராமங்களுக்கு வடிகால் வசதி செய்து தரச் செலவிடப்பட்டிருக்கிறது.



திருக்கோவலூர் வட்டத்திலுள்ள வீ.புத்தூர் கிராமத்திலுள்ள நிலங்களுக்கு வடிகால் வசதி செய்து தர ரூ. 88,500 செலவிடப்பட்டுள்ளது. திண்டிவனம் வட்டத்தில் ரூ. 15,550 அரசு செலவிட்டிருக்கிறது.

இவை மட்டுமல்லாமல் இம்மாவட்டத்திலுள்ள குளங்களும், அரசினரின் ஆதரவினால் கட்டப்பட்ட கிணறுகளும், வடிகுழாய்க் கிணறுகளும் வடிமுனைக் குழாய் கிணறுகளும் வயலை வளப்படுத்தி விளைச்சலை அதிகமாக்குகின்றன. இம் மாவட்டத்தில் அணைக்கட்டுகள் மூலம் பாசன வசதி சுமார் 3,43,979 ஏக்கர் நிலங்களுக்குக் கிடைக்கின்றன. குளம் ஆகியவற்றின் மூலம் சுமார் 1,57,830 ஏக்கர் பயனடைகின்றன. கிணறுகள் மூலம் 63,297 ஏக்கராவும் எண்ணெய் இயந்திரக் குழாய், மோட்டார் இயந்திரக் குழாய் மூலம் 45,008 ஏக்கராவும் நீர்ப்பாசன வசதி பெறுகின்றன.

### நிலச் சீர்திருத்தம்

இந்த மாவட்டத்தில் வேளாண்மை வளர்ச்சியின் பொருட்டுப் பல சிறிய திட்டங்களை அரசு செயல்படுத்தி வருகிறது. இந்த முறையில் வேளாண்மைப் பொறியாளர் துறை இந்த மாவட்டத்தில் பல வியக்கத் தக்க முன்னேற்றங்களைக் கடந்த ஐந்தாண்டுகளில் செய்திருக்கிறது.

இத் துறையினர் மூலம் தமிழக அரசு குழாய்க் கிணறுத் திட்டம், வடிமுனைக் குழாய்த் திட்டம், பாறை உடைக்கும் கருவியால் கிணற்றை ஆழப்படுத்தும் திட்டம், நிலச் சீர்திருத்தம், நில நீர்வரப்புப் பாதுகாத்தல்,வரப்பு அமைத்தலும் சமன்படுத்துதலும், புல்டோசர் மூலம் நிலத்தைச் சமப்படுத்துதல்,இயந்திரக் கலப்பை மூலம் நிலம் உழுதல், டிராக்டர் தவணை முறையில் வழங்கும் திட்டம், வறட்சி நிவாரணத் திட்டம், ஆர்டிசியன் குழாய்க் கிணறு செப்பனிடுதல், பம்பு செட், ஷெட்டு அமைத்தல், நீர்த் தொட்டி கட்டுதல் எண்ணெய் இயந்திரம் அமைத்தல், முள்வேலி போடுதல், மின்சார மோட்டார் வைத்தல், வடிகால் குளம் வெட்டுதல்,போன்ற திட்டங்களைத் தென்ஆர்க்காடு மாவட்டம் முழுமையும் உள்ள ஒவ்வொரு கிராமங்களிலும் அரசு குறிப்பிடும் இலக்கினைவிட அதிகமான அளவில் திட்டங்களைச் செயல்படுத்தி, மிகத் திறமையான முறையில் பணிபுரிந்து வருகின்றது. 'உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோர்' என்ற பழமொழிக்கேற்ப உயிர் கொடுத்தவருக்கு உயர்வளிக்கும் வகையில் அரசு இத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

இத் திட்டங்களில் கடந்த 4 ஆண்டுகளாக அரசு செய்த முன்னேற்றங்களைக் கீழ்க்கண்ட புள்ளி விவரங்கள் விளக்கும்:

### குழாய்க் கிணறுத் திட்டம்

| ஆண்டு. | தோண்டப்பட்ட கிணறுகளின் எண்ணிக்கை. |
|---|---|
| 1967–68 | 333 |
| 1968–69 | 537 |
| 1969–70 | 605 |
| 1970–71 | 770 |

நவீன விஞ்ஞான முறைகளைக் கடைப்பிடித்து விளைச்சலை அதிகப்படுத்தும் நோக்கத்துடன் அகல உழுவதைவிட ஆழமாக உழுதல் சிறந்தது என்ற சொல்லுக்கேற்பப் பழங்கால மரக் கலப்பை

களைத் தவிர்த்து இயந்திரக் கலப்பை மூலம் நிலத்தை உழுவதற்கு விவசாயப் பெருமக்களுக்கு இத்துறையினர் இயந்திரக் கலப்பைகளைக் கடந்த ஐந்து ஆண்டுகளில் வழங்கியதன் மூலம் உழுத நிலங்களின் பரப்பளவு விவரம்.

| ஆண்டு. | உழுத நிலத்தின் பரப்பு. ஏக்கர். |
|---|---|
| 1967—68 | 3,616 |
| 1968—69 | 3,845 |
| 1969—70 | 3,266.50 |
| 1970—71 | 3,628.75 |

**டிராக்டர் தவணை முறையில் வழங்கும் திட்டம்**

நிலங்களை வைத்துக் கொண்டு சீராக உழ வசதியில்லாத விவசாயப் பெருமக்களுக்கு அரசு தவணை முறையில் பணம்பெற்று, டிராக்டர்களினால் நிலங்களை உழுது, நிலங்களைச் சீர்படுத்த உதவி செய்கிறது. அந்நிலையில் பயன் பெற்றவர்களின் எண்ணிக்கை கடந்த 4 ஆண்டுகளில்:

| ஆண்டு. | பயனடைந்தோர் எண்ணிக்கை. |
|---|---|
| 1967—68 | 27 |
| 1968—69 | 21 |
| 1969—70 | 25 |
| 1970—71 | 22 |

**வறட்சி நிவாரணத் திட்டம்**

இந்த மாவட்டத்தில் பருவ மழை பெய்யாததால் வறட்சி ஏற்பட்டு, உண்ண உணவின்றி ஏங்கித் தவிக்கும் உழவர் பெருமக்களுக்குப் பணி கொடுக்கவும், விவசாயத்தரத்தினை உயர்த்தவும் பயன்படக் கூடிய நிவாரண வேலைகள் ஒவ்வொரு துறையினாலும் மேற்கொள்ளப்படுகின்றன. இந்தத் திட்டத்தின் கீழ் இத்துறையில் 1969—70-ல் இம்மாவட்டத்தில் உழவர் பெருமக்களின் உதவியால் இந்த வறட்சி ஆண்டில் 62 ஆர்டிசியன் கிணறுகள் செப்பனிடப்பட்டன. 37 செட்டுகளோடு அமைந்த பம்ப் செட்டுகள் அமைக்கப்பட்டன. 22 நீர்த் தொட்டிகள் கட்டப்பட்டன. 27 எண்ணெய் இயந்திரங்கள் நிறுவப்பட்டன. 76 இடங்களில் பயிர்ப் பாதுகாப்பிற்கு முள்வேலி அமைக்கப்பட்டன. 5 மின்சார மோட்டார்களை நிறுவினர். 14 வடிகால் குளங்களை வெட்டினர்.

# சீரணியின் தொண்டு

தென் ஆர்க்காடுமாவட்டத்தில் 17—11—1967 அன்று பேரறிஞர் அண்ணா அவர்கள் சீரணித் திட்டத்தைத் துவக்கி வைத்தார்கள். இரண்டாயிரம் தொண்டர்கள் இந்தத்திட்டத்தில் பங்கு பெற்றார்கள்.

இந்த மாவட்டத்திலுள்ள 34 ஊராட்சி ஒன்றியங்களிலும், வட்டாரச் சீரணிக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. கோட்ட அளவில் 4 சீரணிக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. மாவட்ட அளவில் ஒரு சீரணிக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு ஒன்றியத்திலும் சீரணி அறிவகம் ஒன்று அமைக்கப் பட்டுள்ளது. மாவட்டத் தலைமையிடத்தில், மாதத்திற்கொருநாள் 300 சீரணித் தொண்டர்களுக்குப் பயிற்சி அளிக்கப் படுகிறது. இந்தப் பயிற்சி, காவல் துறையைச் சார்ந்த அதிகாரிகளால் கொடுக்கப்படுகிறது.

சீரணி, இந்த மாவட்டத்தில் பல்வேறு பணிகளைச் செய்கிறது. வானொலி மன்றம் கட்டுதல், பள்ளிக் கட்டடங்களைக் பராமரித்தல், ஊராட்சி கால்நடை கிளை நிலையக் கட்டடங்கள் கட்டுதல், இணைப்புச் சாலைகள் போடுதல், போன்ற வேலைகள் சீரணித் தொண்டர்களின் பங்குடன் செயல்படுத்தப்பட்டுள்ளன.

சீரணித் திட்டத்தின் கீழ், தென் ஆர்க்காடு மாவட்டத்தில் செய்யப்பட்ட சாதனைகள் வருமாறு :

1967—68-ல் 49 வேலைகள் ரூபாய் 1,02,000 மதிப்பிலும், 1968—69-ல் 105 வேலைகள், ரூபாய் 1,45,600 மதிப்பிலும், 1969—70-ல் 235 வேலைகள், ரூபாய் 1,85,700 மதிப்பிலும், 1970—71-ல் 499 வேலைகள் ரூபாய் 2,73,000 மதிப்பிலும், 1971—72-ல் 76 வேலைகள், ரூபாய் 2,76,000 மதிப்பிலும், நடைபெற்றிருக்கின்றன.

இவ்வாறு—சீரணித் திட்டத்தினால் தென் ஆர்க்காடு மாவட்டத்தில் உருவாகும் நன்மைகள் ஆண்டுதோறும் பெருகிக் கொண்டே வருகிறது. 'சீரணிப் பெருமை செப்பவும் பெரிதே' என்று சொல்லப்படும் வாசகம்—பொருள் நிறைந்தது தான் என்பது உறுதியாகின்றதல்லவா?

இவ்வாருக இத்துறையினர் ஆற்றுப் பாசனம், ஏரிப் பாசனம் இல்லாத இடங்களில் நீர்ப்பாசன வசதிசெய்து கொடுத்துக் காடு மேடுகளைச் சீர்திருத்தி, நெல் கொழிக்கும் நிலங்களாக மாற்றி, இம்மாவட்ட விவசாயத் துறையில் ஒரு மாபெரும் முன்னேற்றத்தினை அடைய அரும் பாடுபட்டு வருகின்றனர். அது மட்டுமல்லாமல் நமது அரசு செயல்படுத்தி வரும் அரும்பெரும் திட்டங்களையும் இம்மாவட்ட விவசாயப் பெருங்குடி மக்களுக்காகச் சீரிய முறையில் செயல்படுத்த இத்துறையினர் ஆவலுடன் உள்ளனர்.

# பிணி நீக்கும் பெரும் பணி



ஒரு நாடு நலமுடன் திகழ நாட்டு மக்கள் உடல் நலத்துடனும் நோய் நொடியில்லாமலும் வாழ்தல் அவசியம். நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்ற சொல்லுக்கேற்ப நோயற்ற வாழ்வுக்காக அரசு தென் ஆர்க்காடு மாவட்டத்தில் பல புதிய திட்டங்களைச் செயல்படுத்திச் சுகாதாரமான வாழ்வு அமையப் பாடுபட்டு வருகிறது. எனவேதான் அரசு, இத்துறைக்குத் தலையாய முக்கியத்துவம் கொடுத்து வருகிறது. இம்மாவட்டத்தில் ஒவ்வொரு மனிதனுக்கும் மருத்துவ வசதி கிடைக்கப் புதிய மருத்துவமனை தோற்றுவித்தும், இருக்கின்ற மருத்துவ மனைகளை விரிவு படுத்தியும், பல புதிய மருத்துவப் பிரிவுகளை ஏற்படுத்தியும் வருகிறது. இம்மாவட்டத்தில் அரசினர் மருத்துவமனைகளின் மொத்தப் படுக்கைகள் 795; தனியார் துறையினரின் மருத்துவமனைகளில் படுக்கைகள் 503.

தென் ஆர்க்காடு மாவட்டத்தில் ஒரு மாவட்டத் தலைமை மருத்துவ மனையும் 14 அரசினர் மருத்துவ மனைகளும், இரண்டு அரசினர் மருந்தகமும், பல்வேறு நகராண்மைக் கழகம் மற்றும் ஊராட்சி ஒன்றிய மருந்தகங்களும், 34 முதன்மைச் சுகாதார நிலையங்களும் பொது மக்களுக்கு மருத்துவ வசதியளித்து வருகின்றன.

கடலூரில் உள்ள தலைமை மருத்துவமனையில் கீழ்க்காணும் மருத்துவப் பகுதிகள் இயங்கி வருகின்றன.

1. பல் சிகிச்சை.
2. கண் பகுதி.
3. பால்வினை நோய்ப் பகுதி.
4. காது, மூக்கு, தொண்டைப் பகுதி.
5. மார்பு வைத்தியம்.
6. குருதிச் சேமிப்பு நிலையம்.
7. எக்ஸ் கதிர் பிரிவு.
8. குழந்தைகள் பகுதி.

இம்மருத்துவ மனையில் 172 படுக்கைகள் இருந்தன. அத்துடன் புதிதாகக் கடந்த 4 ஆண்டுகளில் சுமார் 100 படுக்கைகள் கொண்ட ஒரு புதிய பகுதியினைத் தமிழக அரசு கட்டியுள்ளது. தொழிலாளர் நலனுக்காகத் தொழிலாளர் ஈட்டுறுதித் திட்டத்தின் கீழ் 8 படுக்கைகள் கூடுதலாக அரசு அமைத்துள்ளது. இம்மருத்துவ மனையில் அரசு ஊழியர்களின் சிகிச்சை வசதிக்காகத் தனியாக ஒரு மருந்தகம் திறக்கப்பட்டுச் செயல்பட்டு வருகிறது. இதில் அரசு ஊழியர்களுக்கு மட்டும் சிகிச்சை அளித்து வருகின்றனர்.

கடந்த 1—4—1970 அன்று இம்மாவட்ட மருத்துவ மனையில் தாய்மார்கள் பகுதி ஒன்றினை மாண்புமிகு அமைச்சர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் திறந்து வைத்தார்கள். 13—3—1971 முதல் இம்மருத்துவ மனையில் சித்த வைத்தியத் துறையின் சிறப்புப்பகுதி திறக்கப்பட்டுச் சித்த வைத்திய முறையில் சிகிச்சை அளிக்கப் பட்டு வருகிறது.

இம்மாவட்டத்திலுள்ள வைத்திய நிபுணர்கள் இம்மாவட்டத்திலுள்ள மருத்துவமனைகளுக்கு நேரில் சென்று சிகிச்சையளிக்க யூனிசெப் (Unicef) நிறுவனத்தினர் ஊர்தி வழங்கியுள்ளனர்.

சிதம்பரத்திலுள்ள அரசினர் மருத்துவ மனையில் 70 படுக்கைகள் கொண்ட புதிய மருத்துவமனை கட்டத் தகுந்த திட்டம் அரசின் ஆய்வில் உள்ளது.

திண்டிவனம் அரசினர் மருத்துவ மனையில் தற்போது உள்ள 44 படுக்கைகள் தவிர மேலும் 32 படுக்கைகள் கொண்ட புதிய பகுதி 28,700 ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ளது.

வளவனூர் அரசினர் மருத்துவ மனையில் ரூ. 35,000 செலவில் 10 படுக்கைகள் கொண்ட மகப்பேறு இல்லம் ஒன்றும், விழுப்புரம் அரசினர் மருத்துவ மனையில் மகப்பேற்றுப் பகுதியும், அறுவைச் சிகிச்சை அரங்கு ஒன்றும் கட்ட அனுமதி வழங்கப்பட்டு, கட்டடங்கள் முடியும் தறுவாயில் உள்ளன. கள்ளக்குறிச்சி அரசினர் மருத்துவமனையில் கூடுதலாக 8 படுக்கைகள் பகுதி ஒன்றைத் துவங்க ரூ. 45,000 அரசு அனுமதி அளித்திருக்கிறது.

## தொழுநோய்ச் சிகிச்சை

திருக்கோவலூரில் தொழுநோய்க்கான சிகிச்சை ஆய்வு நிலையம் ஒன்று நல்ல முறையில் சேவை செய்து தொழுநோயாளிகளின் துன்பத்தைப் போக்கி வருகின்றது. சிதம்பரம், கள்ளக்குறிச்சி, விருத்தாசலம், ஆகிய ஊர்களில் தொழுநோய்க் கட்டுப்பாடு நிலையங்கள் செவ்வனே பணியாற்றி வருகின்றன. அதோடு இப்பகுதிகளில் உள்ள கிராமப் புறங்களில் உள்ள துணைநிலையங்கள் தொழு நோயாளிகளுக்குச் சிறந்த சேவை செய்து வருகின்றன. வீரப்பெருமாள் நல்லூரில் தொழுநோய்ச் சிகிச்சை நிலையம் ஒன்று நிறுவப்பட்டுள்ளது. கடலூர், உளுந்தூர்ப் பேட்டை, விழுப்புரம், வளவனூர், திட்டக்குடி ஆகிய இடங்களில் உள்ள அரசினர் மருத்

துவ மனைகளிலும் நெல்லிக்குப்பம், குறிஞ்சிப்பாடி ஆகிய ஊராட்சி ஒன்றிய மருந்தகங்களிலும் மங்களம் பேட்டை முதன்மைச் சுகாதார நிலையத்திலும் ஆய்வுக் கல்விச் சிகிச்சைப் பிரிவுகள் ஏற்படுத்தப் பட்டுத் தொழு நோயாளிகளுக்குச் சேவை செய்து வருகின்றன. அண்ணல் காந்தியடிகள் அனுதாபப்பட்டுக் கண்ணீர் சிந்திய தொழு நோயாளிகளுக்கு—சமூகத்தால் வெறுத்து ஒதுக்கப்பட்ட மக்களுக்கு-அரசு சீரிய முறையில் சிகிச்சை நிலையங்களைத் துவக்கி அவர்களின் துயர் துடைத்து வருகின்றது.

### காசநோய்

காசநோய் கண்டவர்கள் உயிர் வாழ்தல் கடினம், என்ற எண்ணத்தைப் போக்கி அவர்களையும் குணப்படுத்தி இவ்வுலகில் வாழ வழி செய்யும் வகையில் இம்மாவட்டத்தில் கடலூர் கேப்பர் மலையில் காசநோய்ச் சிகிச்சை நிலையம் நமது அரசினரால் நடத்தப்பட்டு வருகிறது. அங்கு நோயாளிகள் துயர் மறந்து பொழுது போக்கவும், அவர் தம் அறிவு வளரவும் நூலகம் ஒன்று நிறுவப்பட்டுள்ளது. அதோடு மற்ற இன்றியமையாத தேவைகள் நிறைவேற்றப் பட்டு நல்ல நிலையில் இயங்கி வருகின்றது.

இம்மாவட்டத்தில் பி.சி.ஜி. குழுவினர் ஒவ்வொரு கோட்டத் தலைநகரிலும் ஓராண்டு முகாம் இட்டு அந்தக் கோட்டத்திலுள்ள எல்லா ஊர்களிலும் காசநோய்த் தடுப்பு ஊசி போட்டுக் காசநோய் வராமல் தடுக்கவும், மேலும் பரவாமல் தடுக்கவும் அறிவுரைகள் வழங்கி வருகின்றனர்.

### நல்வாழ்வு ஆய்வுக்கூடம்

மாவட்ட நல்வாழ்வு ஆய்வுக் கூடம் கடலூரில் அரசினர் தலைமை மருத்துவ மனையில் இயங்கி வருகிறது. இங்கு இரத்தம், சிறுநீர், மலம் மற்றும் பல பரிசோதனைகளும் மக்களுக்கு இலவசமாக நடத்தப்பட்டு வருகின்றன.

இம்மாவட்டத்திலுள்ள அரசினர் மருத்துவ மனைகளிலும், ஆரம்ப நல்வாழ்வு நிலையங்களிலும், மருந்தகங்களிலும் 184 மருத்துவர்களும், 131 செவிலியர்களும், 87 பேறு கால உதவியாளர்களும் பணி புரிந்து வருகின்றனர்.

### நல்வாழ்வு

எவ்வளவு பணம் படைத்திருந்தாலும், அதிகம் படித்திருந்தாலும் சுகாதாரமான வாழ்க்கை நடத்தத் தெரியாதவனுக்கு இவ்வுலகம் கசக்கத்தான் செய்யும். வறுமையிலும் இன்பம் காண வழி வகுக்கும் வாழ்க்கை, நோயற்ற வாழ்க்கையே. இதனைக் கருத்தில் கொண்டுதான் அரசு மலேரியா ஒழிப்புத் திட்டம், அம்மை யொழிப்புத் திட்டம், காலரா ஒழிப்புத் திட்டம் ஆகியவற்றை ஒவ்வொரு மாவட்டத்திலும் மத்திய அரசின் கூட்டோடும், உலகச் சுகாதார நிறுவனங்களின் ஒத்துழைப்போடும் மிகத் தீவிரமாகச் செயல்படுத்தி வருகிறது. கிராமம் கிராமமாகச் சென்று மருத்துவர்கள் சுகாதாரமான வாழ்க்கையின் அவசியத்தை மக்களுக்கு எடுத்துக் கூறியும், படக் காட்சி மூலம் விளக்கியும் வருகின்றனர்.

இம்மாவட்டத்தில் தற்போது 34 இளநிலை நல்வாழ்வு நிலையங்கள் ஒவ்வோர் ஊராட்சி ஒன்றியத்திலும் உள்ளன.

உளுந்தூர்ப்பேட்டையில் அரசு உருவாக்கியுள்ள பிச்சைக்காரர் மறு வாழ்வு இல்லத்தில் விடுதலை நாள் விழா 15—8—1972 அன்று கொண்டாடப்பட்டிருக்கிறது. தொழு நோய்ப் பிச்சைக்காரர்கள், அன்று அதிகாலையிலேயே புத்தாடை அணிந்து தேசியக் கொடி ஏற்றும் நிகழ்ச்சியில் கலந்து கொண்டார்கள். இல்லத்தில் வாழ்பவர்களுக்கு விளையாட்டுப் போட்டியும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஐம்பதுக்கு மேற்பட்டவர்கள் இதில் கலந்து கொண்டார்கள். போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகள் கொடுக்கப்பட்டன.

அது மட்டுமல்ல இருப்பிடத்தைச் சுத்தமாகவும் ஒழுங்காகவும், வைத்திருந்தவர்களுக்கும் நல்லொழுக்கத்தைக் கடைப்பிடித்தவர்களுக்கும் பரிசுகள் வழங்கப்பட்டன. விடுதலைத் திருநாளையொட்டி, இந்த மறு வாழ்வு இல்லத்தில் வாழ்பவர்களுக்குச் சிறப்பு உணவுகளும் வழங்கப்பட்டன.

இதில் 12 நிலையங்கள் கடந்த 3 ஆண்டுகளில் புதியதாகக் கட்டப்பட்டவை ஆகும். அதில் 33 இளநிலை நல்வாழ்வு நிலையங்களில் ஒவ்வொரு நல்வாழ்வு நிலையத்திலும் 6 படுக்கைகள் நோயாளிகளுக்காக ஏற்படுத்தப் பட்டுள்ளன. ஓர் இளநிலை நல்வாழ்வுநிலையத்தில் மட்டும் 20 படுக்கைகள் உள்ளன. ஒரு நாளைக்கு ஓர் இளநிலை நல்வாழ்வு நிலையத்தில் மட்டும் சுமார் 75 நோயாளிகள் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

10 இளநிலை நல்வாழ்வு நிலையங்கள் அரசாங்கக் கட்டடத்தில் இயங்கி வருகின்றன. அவற்றோடு 4 புதிய கட்டடங்கள் தமிழக அரசினரால் கட்டப்பட்டு வருகின்றன. மருத்துவ ஊழியர்கள் வசதியான வாழ்க்கை நடத்தவும் மருத்துவமனைகளின் அருகேயே இருந்து பணியாற்றவும் 32 இளநிலை நல்வாழ்வு நிலையங்களில் மருத்துவ ஊழியர்களுக்கான குடியிருப்புகள் கட்டப்படுகின்றன.

### கேர்

கேர் நிறுவனத்தாரின் உதவி கொண்டு இம்மாவட்டத்தில் 33 இளநிலை நல்வாழ்வு நிலையங்களில் பால், பால்பவுடர், சாலட் எண்ணெய் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு இளநிலை நல்வாழ்வு நிலையத்திலும் 30பேர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு ஒவ்வொருவருக்கும் 80 கிராம் சி.எஸ். எம். பவுடரும், 8 கிராம் சாலட் எண்ணெய்யும் வழங்கப்படுகின்றது.

### அளவான குடும்பம்

தென்ஆர்க்காடு மாவட்டத்தில் இரண்டாவது காலத்திட்டத்தில் கடலூரில் மாவட்டத் தலைமைக் குடும்பக் கட்டுப்பாடு நிலையம் நிறுவப்பட்டுப் பின்னர் முழுநேர நிலையாக மாற்றப்பட்டது. அளவான குடும்பமே ஆனந்தமான குடும்பம் என்பதனை நமது மக்கள் உணர மாவட்டத்தில் அரசாங்க மருத்துவ மனைகளிலும், திருக்கோவலூர் அரசாங்கத் தொழுநோய்ச் சிகிச்சை ஆய்வு நிலையங்களிலும் கட்டுப்பாட்டுப் பிரிவுகள் அரசினரால் ஏற்படுத்தப்பட்டு நல்ல முறையில் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின் கீழ் செயல்பட்டுவரும் மத்திய அரசுத் துறை ஒவ்வொரு கிராமத்திற்கும் சென்று மருத்துவர்

கள் மூலமாகவும், படக்காட்சி மூலமாகவும் மக்கட் பெருக்கத்தின் ஆபத்தினை எடுத்துக் கூறியும், அறுவைச் சிகிச்சை, லூப் முறை, மாத்திரைகள் மூலம் தடுத்தல் மற்றும் பல குடும்பக் கட்டுப்பாட்டு முறைகளை விளக்கிச் செயல்படுத்தி வருகின்றது. கல்வி அறிவு இல்லாத கிராமங்களிடையே இதைப் பரப்புவது எளிதான முயற்சியாக இல்லாமல் இருந்தாலும் பெருமையுடனும், பொறுப்புடனும் இத்துறையினர் எடுத்துக் கூறிவருகின்றனர். கடந்த 4 ஆண்டுகளில் இத்துறையினர் செய்த சாதனை போற்றுதற்குரிய முறையில் அமைந்துள்ளது.

குடும்பக் கட்டுப்பாட்டிற்குப் பயன்படுத்தப்பட்ட முறைகள்.

அறுவைச் சிகிச்சை—

| ஆண்டு. | பயன் அடைந்தவர் எண்ணிக்கை. |
|---|---|
| 1967—68 | 7,944 |
| 1968—69 | 7,595 |
| 1969—70 | 12,392 |
| 1967—68 | 234 |
| 1968—69 | 673 |
| 1970—71 | 1,014 |
| 1971—72 | 3,007 |

சூன் மாதம் வரை.

ஐயூ. சி. டி. முறை

இம்மாவட்டத்தில் 30 வட்டாரங்களில் 119 குடும்பக் கட்டுப்பாட்டு நிலையங்கள் திறக்க அரசு முடிவு செய்துள்ளது. துணை நிலையங்கள் ஒன்றுக்கு ரூ. 12,000 வீதம் மொத்தம் ரூ. 14,28,000 அரசு ஒதுக்கீடு அளித்துள்ளது.

**பிச்சைக்காரர் மறுவாழ்வு இல்லம்**

'இரந்தும் உயிர்வாழ்தல்
வேண்டின் பரந்து
கெடுக உலகியற்றி யான்'

என்கிறது குறள். பிச்சைக்காரர் இல்லாத நாடுதான் நாகரிக நாடு என்னும் கருத்து விரைவாக வளர்ச்சி பெற்று வருகிறது. தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் 1945-ஆம் ஆண்டில் பிச்சையெடுப்புச் சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது. பிச்சையெடுப்போருக்கு உரிய தண்டனைகளும் இச்சட்டத்தில் விதிக்கப்பட்டுள்ளன. ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காணும் அரசு தற்போது பிச்சைக்காரர்களுக்கெனக் காப்பு இல்லங்களை நடத்தி வருகின்றது. சிதம்பரத்தில் ஒரு பிச்சைக்காரர் இல்லத்தினை நகராட்சியினர் நடத்துகின்றனர். இதற்கு அரசு உதவித் தொகை அளித்து வருகிறது.

1961—ஆம் ஆண்டின் மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி தமிழ்நாட்டில் 40,000 பிச்சைக்காரர்கள் இருந்தனர். ஆனால் தற்போது சுமார் 60,0000 பிச்சைக்காரர்கள் தமிழ்நாட்டில் உலவி வருகின்றனர். 1969—70—ஆம் ஆண்டின் மதிப்பீட்டுக் குழு, பிச்சைக்காரர்கள் பிரச்சினையை நன்கு ஆராய்ந்து அறிக்கை அனுப்பி உள்ளது. 1970—ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 23-ஆம் தேதியன்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் பிச்சைக்காரர் மறுவாழ்வு பற்றி முடிவு செய்யப்பட்டது. அதன்படி நோயுற்றோர்களை முதலாவதாகக் கவனிக்க வேண்டும். அவர்களில், தொழுநோயால் துன்புறுவோரை உடனடியாகக் கவனித்து அவர்களுக்கு வாழ்வளிக்க வேண்டுமென்பதனைக் கருத்தில் கொண்டு தொழுநோய் வந்து வருந்துவோர், தங்கி மருத்துவச்சிகிச்சை பெற்று மறுவாழ்வு பெற வழி செய்யும் வகையில் சிறப்பு இல்லங்களை அரசு திறக்க முடிவு செய்துள்ளது. இவற்றில் 3 இல்லங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. அவ்வாறு கட்டப்பெற்ற மூன்று இடங்களில் ஒன்று தென் பிராந்திய நெடுஞ்சாலையில் இம்மாவட்டத்தில் உள்ள உளுந்தூர்ப்பேட்டையும் ஒன்றாகும். இக்கட்டடம் 20 ஏக்கர் பரப்பில் 7 இலட்ச ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ளது.

பிச்சைக்காரர் பிரச்சினை பெரும் பிரச்சினையாகும். அரசால் மட்டும் அப்பிரச்சினையைத் தீர்த்துவிட முடியாது. பொது மக்களின் ஒத்துழைப்பு மிகவும் தேவை; பொருள் வசதி படைத்தோர் அனைவரும் ஆதரவு காட்ட வேண்டும்; எனவே பிச்சைக்காரர் நலம்பேணப் பொது மக்களிடமிருந்து அரசு நிதி திரட்டி வருகிறது. அவ்வகையில் இம்மாவட்ட மக்கள் பிச்சைக்காரர் மறு வாழ்வு நிதிக்கென ஆகஸ்டு 1971 முடிய ரூ. 2,67,323·76 வாரி வழங்கியுள்ளனர். இவ்வாறு 'பிச்சையெடுத்தேனும் பிச்சையை நீக்குவோம்' என்ற கொள்கையினைத் தமிழக அரசு மிகத் தீவிரமாகச் செயல்படுத்தி வருகிறது.

## தென்ஆர்க்காடு செங்கற்பட்டு இணைப்புப் பாலம்

தொண்டை நாட்டில் தோன்றிச் சைவத்தமிழ் உலகம் போற்றிப் பாராட்டும் திருத் தொண்டர் புராணம் என்னும் பெரிய புராணத்தை இயற்றிய செந்தமிழ்ச் சேக்கிழார், தமது பெரு நூலைத் தென் ஆர்க்காடு மாவட்டத்தில் உள்ள சிதம்பரத்தில் அரங்கேற்றியதன் வாயிலாக இரண்டு மாவட்டங்களுக்கு மிடையே பல நூற்றாண்டுகளுக்கு முன்பே ஒரு நல்ல 'உறவுப் பாலம்' இருப்பதை உணரலாம்.

அண்மையில் இரு மாவட்டங்களுக்குமிடையே வாணிகம், வேளாண்மை முதலிய பல துறைகளிலும் மேலும் வளர்ச்சி காண உதவும் வகையில், கிழக் கடற்கரைச் சாலையில் செங்கை மாவட்டத்தைச் சேர்ந்த தென் பாக்கம் கிராமத்தையும், தென் ஆர்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்த மரக்காணம் கிராமத்தையும் இணைக்கும் பாலம் ஒன்றை 23 இலட்சம் ரூபாய் செலவில் தமிழக அரசு கட்டி முடிக்க முடிவு செய்து, இந்தப் பால வேலைக்கான அடிக்கல் நாட்டு விழாவை 25—9—1972-ல் நடத்தியுள்ளது. தமிழக அரசு, மத்திய அரசிடமிருந்து, ரூ. 23 இலட்சத்தைக் கடனாகப் பெற்று இப்பாலத்தை எழுப்புகிறது. அடுத்த ஓராண்டில் கட்டி முடிக்கப் பெற இருக்கிற இந்தப் பால அமைப்புக்குக் கால்கோள் செய்த தமிழ் நாட்டு அறநிலையத் துறை அமைச்சர் இந்தப் பாலம் அமைவது இப்பகுதி மக்களின் வாழ்க்கையை முன்னேற்றப் பெரிதும் பயன் படும் என்றார்.





நாட்டின்
முன்னேற்றத்திலும்
வளமையிலும்
எமது பங்கு



TANSI
டான்ஸி



தொழில் நுட்பத் துறைகளில் உங்கள்
தேவைகளை பணிவுடன் பூர்த்தி செய்கிறது

- மலிவானது
- உத்திரவாதமானது
- வார்ப்பட வேலைகளுக்கும், கட்டுமானகட்டமைப்புகளுக்கும், கருவிமற்றும் உருமாற்றத்திற்கும் மர சாமான்களுக்கும் ''டான்ஸி''

விவரங்களுக்கு அணுகவும்: தொழிற் பட்டறைகளுடன் தொடர்பு கொள்ளுங்கள்

TANSI

நிருவாக இயக்குனர்
தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம்
(தமிழ்நாடு அரசு நிறுவனம்)
35/2, உட்ஸ் ரோடு, சென்னை-2

# வெண்பாப் போட்டி

## 43. கொலுவிருக்கும் அன்றே குவிந்து

காவிரி யோடுநதி கங்கையைச் சேர்த்திடுவோம்
வாவிகளில் நீர்நிறைப்போம் வான்மரங்கள்—காவில்
நிலைத்துவிடும் ; காய்கனியும் ; நெல்விளையும் ; இன்பம்
கொலுவிருக்கும் அன்றே குவிந்து.

—சி. சி. தங்கஅரசு, கீழ்க்குளம்.

ஓட்டைக் குடிசையை உப்பரிகை யாய்மாற்றிக்
காட்டைக் கழனியாக்கும் ஆட்சியிடம்—நாட்டின்
வலுமிகுந்த பாட்டாளி வாழ்த்தும், பரிவும்,
கொலுவிருக்கும் அன்றே குவிந்து.

—ச. கந்தசாமி, மேலூர்.

அடுத்தடுத்துப் பிள்ளைகள் ஆறேழைப் பெற்றால்
இடுக்கணில்தான் வீழ்வாய், என்தோழா—மிடுக்காய்
வலுவான ''ஒன்றிரண்டில்'' வாழ்வமைப்பின், இன்பம்
கொலுவிருக்கும் அன்றே குவிந்து.

—முல்லை நடவரசு, தும்மலப்பட்டி.

சக்கரமும் வேலும் சரிந்த சிறுபிறையும்
மெக்காவும் காசித் திருத்தலமும்—தக்க
சிலுவையும் ஒன்றென்று தேர்ந்தால் அமைதி
கொலுவிருக்கும் அன்றே குவிந்து.

—சு. கிருட்டிணன், திருப்பூர்.

சாதிச் சமயச் சகதிக ளில்லாத
மேதினியில் மக்களினம் மேலோங்கும்—சூது
நிலவாத நாட்டில் நெறிமுறைக ளெல்லாம்
கொலுவிருக்கும் அன்றே குவிந்து.

—கி. ஆதிமூலம், உடையார்பாளையம்.

மல்லிகை முல்லையென மக்கள் இரண்டுபெற்றே
இல்லறம் பேணின் இளநங்காய்—கொல்லும்
நலிவனைத்தும் நீங்கிப்போய் நல்வாழ்வில் இன்பம்
கொலுவிருக்கும் அன்றே குவிந்து.

—த. ச. தவசிமணி, அருப்புக்கோட்டை.

சாதிமதப் பூசலெலாம் சாய்த்துச் சமதருமச்
சோதியொளி எங்கும் சுடர்பரப்ப—நீதி
நிலைநிறுத்தி விட்டால்இந் நீணிலத்தில் இன்பம்
கொலுவிருக்கும் அன்றே குவிந்து.

—சி. மு. சிவலிங்கம், மதுரை-21.

காவிரிக்கே கங்கைத்தாய் காலால் நடந்துவரும்
ஓவியத்திற் குண்மை உருக்கொடுத்தால்—பாவில்
சொலும்கனவு நாடெல்லாம் தோற்கவிங்கே செல்வம்
கொலுவிருக்கும் அன்றே குவிந்து.

—புலவர் கரு. சுப்பையா, அருப்புக்கோட்டை.

வெள்ளையரின் ஆதிக்கம் வீழ்த்தி, விடுதலையைக்
கள்ளமிலா உள்ளத்துக் காந்திதந்தார்—உள்ள
வலுவிருக்கும் கைகளினால் நம்நாட்டிற் செல்வம்
கொலுவிருக்கும் அன்றே குவிந்து.

—புலவர் விசயவீரப்பன், சோழமாதேவி.

பரிசு பெற்ற வெண்பா எழுதியவர் :
திரு சி. சி. தங்கஅரசு,
கீழ்க் குளம் அஞ்சல்,
குமரி மாவட்டம்.

# வெண்பாப் போட்டி

ஏழ்மை, பணத்தாசை இங்கில்லை ; சாதியெனும்
தாழ்வுயர்வுச் சண்டை சழக்கில்லை—வாழ்வில்
இலையெவர்க்கும் பேதம் எனும்நாளில், இன்பங்
கொலுவிருக்கும் அன்றே குவிந்து.

—சோ. சு. யுவராசன், அரக்கோணம்.

கடல்கோள் நிகழாமல் காப்பதற்கே வங்கக்
கடலோரம் கல்லறையைக் கண்டு—குடிகொள்
சலியாத அண்ணா சதுக்கம் அழகு
கொலுவிருக்கும் அன்றே குவிந்து.

—புலவர் மு. சிக்கந்தர், கோரிக்கடவு.

துன்ப இருளைத் துரத்தத் தமிழ்நாட்டார்
ஒன்றாகச் சேர்ந்தே உழைத்திட்டால்—அன்பு
குலுங்கும் அறந்தழைக்கும் குன்றுபோல் இன்பம்
கொலுவிருக்கும் அன்றே குவிந்து.

—வி. மு. உலகநாதன், சென்னை-7.

மக்கள் நலனே மகேசன் நலனென்றே
எக்கணமும் ஆளும் இயல்புடையார்—மிக்க
வலுவுடையார் ஆவார்! வளங்களவர் நாட்டில்
கொலுவிருக்கும் அன்றே குவிந்து.

—நெல்லை ஆ. கணபதி, சென்னை-15.

எல்லாரும் ஓரினமே; எல்லாமும் எல்லார்க்கும்
இல்லார் எனஇல்லை இங்கென்ற—பல்லோர்
நிலைஉயர்த்தும் திட்டம் நிறைவேறின் இன்பம்
கொலுவிருக்கும் அன்றே குவிந்து.

—நாராயண சுந்தரேசன், செங்காடு.

நாளொரு திட்டமிட்டு நம்நாட்டைக் காப்பவர்க்குத்
தோளொடு தோள்நிற்போம் தோழர்காள்!—நீளும்
வலுவிருக்கும் சாதனைகள் வண்ணமுடன் நாட்டில்
கொலுவிருக்கும் அன்றே குவிந்து.

—சண்முக தாயுமானவன், பொன்மலை.

இல்லாமை, கல்லாமை, ஏற்றுண்ணும் ஆற்றாமை,
'இல்லாமை' யாகிடவே இவ்வரசும்—நல்லார்
சொலும்விதமே செய்வினைகள், சூழ்மக்கள் நெஞ்சில்
கொலுவிருக்கும் அன்றே குவிந்து.

—அரி. இல. தமிழடியான், மல்லிகா.

ஒன்றிரண்டு பெற்றே உயர்வடைய வேண்டுமென
நன்றுரைக்கும் திட்டம் நலங்குவிக்கும்—என்றும்
அளவிருக்கும் இல்லமதில் ஆனந்தம் பொங்கிக்
கொலுவிருக்கும் அன்றே குவிந்து.

—வெண்பாவூர் எஸ். சுந்தரம், திருச்சி.

கற்பகமே தேனே கருமுகிலின் பண்புருவே
கற்பனைக்கும் ஒவ்வாத காவியமே—பொற்பு
விலைமதிக்க வொண்ணா விழிமலருன் நோக்கில்
கொலுவிருக்கும் அன்றே குவிந்து.

—பசுமலை வீர முருகேசன், தருமபுரி.

போடுகின்ற திட்டமெலாம் போக்கற்றோர், வாழ்வற்றோர்
தேடுகின்ற தேவைக்கே சேர்த்திருப்பின்—நாடு
நலிவற்று நல்வளத்தால் நாநிலம் போற்றக்
கொலுவிருக்கும் அன்றே குவிந்து.

—புலவர் அ. சுந்தரேசன், மேட்டுப்பாளையம்.

சேது சமுத்திரத்தைச் சேலத் திரும்புதனை
வாதிட்டுப் பெற்றுவிடின் வண்டுவிழி—மாதே!
செழுமை வளந்தேங்கிச் சீர்த்திமிகும் செல்வம்
கொலுவிருக்கும் அன்றே குவிந்து.

—ஆயை மு. காசாமைதீன், பெங்களூர்-1.

ஊக்கும் உரைநடையோ டுன்னதமாய் வல்லுநர்கள்
பாக்களுடன் நல்ல படைப்புகளை—ஆக்கும்
சலுகையை நம்மரசு தானீந்தால் நூல்கள்
கொலுவிருக்கும் அன்றே குவிந்து.

—வெற்றிவேல் வெங்கடேசன், சேலம்-9.

பெய்யும் மழையாய்ப் பிறர்நலம் பேணினர்
உய்யும் வழிகாட்டி ஊக்கினர்—தெய்வம்
சிலுவையில் வைத்தும் சினவாதார் நெஞ்சில்
கொலுவிருக்கும் அன்றே குவிந்து.

—புலவர் வெ. குமாரசாமி, கோரிக்கடவு.

கானப் பாதிரிக் கருந்தகட்டு ஒள்வீ
வேனில் அதிரலொடு விரைஇக்—காண்வர,
சில்ஐங் கூந்தல் அழுத்தி, அழகாய்க்
கொலுவிருக்கும் அன்றே குவிந்து.

—அத்தியூரான், அத்திமாஞ்சேரிப்பேட்டை.

நெஞ்சில் உறுதியுடன் நேர்வழியில் அஞ்சாமல்
வெஞ்சமரை நோக்கி விரைந்திட்டால்—வஞ்சி
வலுவில் நமைத்தேடி வந்தடையும் வெற்றிக்
கொலுவிருக்கும் அன்றே குவிந்து.

—த. சுப்பிரமணியன், காரைக்குடி.

அண்ணாவின் கொள்கை அனைத்தும்நம் நாட்டினர்
எண்ணத்தில் ஊறி இருந்திட்டால்—என்றும்
வலுவுடன் வாழ வழிகாட்டும்; நேர்மை
கொலுவிருக்கும் அன்றே குவிந்து.

—கா. மு. கண்ணாயிரம், புல்லரம்பாக்கம்.

# வெண்பாப் போட்டி

தந்தை பகலவன்; தண்ணீரே ஈன்றவள்;
விந்தை முகிலாம் வினைசெய்க்குச்—சிந்தை
வலுவிருக்கும் பாவலர் வாழ்த்தவிண்ணில் மேகம்
கொலுவிருக்கும் அன்றோ குவிந்து.

—இரும்பொறை, காஞு காத்தான்.

சாதிப் படைநோயும் தாழ்ச்சித் தொழுநோயும்
ஓதி உயர்ந்தோர் உளநோயும்—நீங்கின்
சொலற்கரிய சீர்திருத்தம் தோன்றுவதால் நீதி
கொலுவிருக்கும் அன்றோ குவிந்து.

—தவமுத்து. அண்ணுமலை, தவசி.

பகுத்தறி வூட்டுகின்ற பாசறையின் தந்தை
வகுத்திட்ட கொள்கையில் வாழ்ந்தால்—மிகுத்த
வலுவிருக்கும் தெய்வங்கள் வாய்மூடி ஓர்நாள்
கொலுவிருக்கும் அன்றோ குவிந்து.

—ஆ. துரைராசன், கும்பகோணம்.

வங்கக் கடலோரம் வண்ணத் துயில்கொள்ளும்
சிங்கத் தமிழண்ணன் சொல்லெல்லாம்—எங்கள்
நலிவகற்றும், நல்லோரின் நாவெல்லாம் சென்று
கொலுவிருக்கும் அன்றோ குவிந்து.

—புலவர் கே. மு. கிருட்டிணமூர்த்தி, தேவிகாபுரம்.

மஞ்சள் கருணை வயலிருக்கும் ; காய்க்கடையில்
மிஞ்சி கருங்கருணை மேலிருக்கும்—கொஞ்சும்
கலைகள், கருணை, கருணு நிதிக்கண்
கொலுவிருக்கும் அன்றோ குவிந்து!

—புலவர் தெய்வசிகாமணி, விண்ணம்பள்ளி.

மழலைவாய் தேன்ஒழுகும் மாஎன் றழைக்கும்
அழகே தனியழ காகும்—பழக
வலுவூட்டுந் தாய்த்தமிழும் வான்புகழத் தங்கக்
கொலுவிருக்கும் அன்றோ குவிந்து.

—சு. கா. சுந்தரராஜன், நாரைக்கிணறு.

கொண்ட கணவனையே கும்பிட்டுத் தான்பெற்ற
தண்தேன் குழவிகளைத் தாங்கியுளப்—பண்பால்
பொலிவிருக்கும் கற்புநிறை பூவையரால் இன்பம்
கொலுவிருக்கும் அன்றோ குவிந்து.

—பூங்குழலி, பொருளூர்.

தேனின் இனிமை தெவிட்டாத தீந்தமிழில்
மானின் மருட்பார்வை மாதரிடம்—கானில்
புலிகாட்டும் வீரம் பொதியனிடம் மாண்பே
கொலுவிருக்கும் அன்றோ குவிந்து.

—சிவ. கிருட்டிணன், கணியூர்.

தத்தையே! மோனத் தமிழுருவே! உன்னல்யான்
பித்தானேன் பேதையே! பெண்பாவாய்!—முத்துக்
குலுங்குநகை கொஞ்சிடநீ சென்ருய்; நினைவு
கொலுவிருக்கும் அன்றோ குவிந்து.

—அ. மதிவாணன், நெல்லை-4.

சின்ன மழலையதன் சிங்காரப் பேச்சினிலும்
சன்ன நடையழகின் தன்மையிலும்—மின்னல்
பொலிவிருக்கும் கண்களிலும் பொன்ருத இன்பம்
கொலுவிருக்கும் அன்றோ குவிந்து?

—திருமதி ஜீவரத்தினம், அருப்புக்கோட்டை.

வற்ருப் பெருவளமும் வாட்டமிலா நற்புகழும்
பற்ருக் குறையின்றிப் பன்னலமும்—முற்றி
வலுவிருக்கும் நெஞ்சுடையோர் வாழ்வினிலே என்றும்
கொலுவிருக்கும் அன்றோ குவிந்து.

—அ. காந்தி, தேவத்தூர்.

கையில்லார் காலில்லார் கண்ணில் ஒளியின்றி
உய்ய வழியில்லார் ஓர்கோடி;—மெய்யில்
நலிந்தோர்க் குதவுவதால் நம்மிதயம் அன்பு
கொலுவிருக்கும் அன்றோ குவிந்து.

—சி. சௌ. கருப்பன், திருச்சி-15.

ஈன்ருளின் இன்முகத்தும், இல்லாளின் அன்பிடத்தும்,
சான்ரேரின் தன்வயமாம் நட்பினிலும்,—ஆன்ற
கலையுள்ளும், கன்னித் தமிழினிலும் இன்பம்
கொலுவிருக்கும் அன்றோ குவிந்து.

—அ. முப்பாலிகை, நத்தம்.

கடமை யுணர்த்திட ஓர்விரல் காட்டி
மடமை யொழித்திட்ட மன்னன் —கடமைப்
பொலிவுடையான் புன்னகையில் தாயன்பே என்றும்
கொலுவிருக்கும் அன்றோ குவிந்து.

—எஸ். செந்தில்குமார், கோவை மாவட்டம்.

எங்கும் தமிழ்மொழியின் ஏற்றமே காண்பதன்றி
இங்குயாம் வாளா இருப்போமா?—சிங்க
வலுவிருக்கும் ஒண்டமிழர் வாழ்வினிலே வெற்றி
கொலுவிருக்கும் அன்றோ குவிந்து.

—உருக்குமணி, கோபிச்செட்டிபாளையம்.

அன்பும் அறநெறியும் ஆய்ந்த பொருள்நெறியும்
என்பும் பிறர்க்குரியார் ஏற்றமும்—பொன்போல்
பொலிவுற்றுச் சீர்பெருக்கப் புத்தரசில் இன்பம்
கொலுவிருக்கும் அன்றோ குவிந்து.

—மு. பொன்னுரங்கம், அனக்காவூர்.

# தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கி லிமிடெட்

**19/20, லிங்கி செட்டி தெரு, சென்னை–600001.**

தந்தி விலாசம் : 'அர்பாங்க்'
தொலைபேசி எண் : 20367, 20368, 20369
தபால் பெட்டி எண் : 226.
டெலக்ஸ் எண் : எம். எஸ். 7225.

எங்கள் வங்கியில் நீங்கள் செலுத்தும் முதலீடுகள் நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்கு அடிப்படையான விவசாயத்திற்கும், விவசாயத் தொழில்களுக்கும் உதவி செய்யும்.

## வட்டி விகிதங்கள்

| | | |
|---|---|---|
| நடப்புக் கணக்குகள் .. | (வருடத்திற்கு) | ½% |
| சேமிப்புக் கணக்குகள் .. | | 4% |

(குறைந்த அளவு மாத நிலுவையின் பேரில் வட்டி கணக்கிடப்படுகிறது)

காலாந்திர கணக்குகள் : ரூ. 1,000-ம் அதற்கு மேலும் (வருடத்திற்கு)

| | |
|---|---|
| 15 நாட்கள் .. | 2% |
| 46 நாட்கள் .. | 3% |

நிரந்தரக் கணக்குகள் : ரூ. 100-ம் அதற்கு மேலும்

| | | | |
|---|---|---|---|
| 91 நாட்கள் .. | 4¾% | 24 மாதங்கள் .. | 6¾% |
| 6 மாதங்கள் .. | 5¼% | 36 மாதங்கள் .. | 7¼% |
| 12 மாதங்கள் .. | 6¼% | 60 மாதங்கள் .. | 7½% |

ஓராண்டுக் காலத்திற்கும் அதற்கு மேலும் ரூ. 1,000-க்கும் அதிகமாக உள்ள முதலீடுகளுக்கு மாதாந்திர வட்டி அளிக்கப்படுகிறது.

மத, தர்ம கல்வி நிலையங்களின் முதலீடுகளுக்கு மேலே குறிப்பிட்டதைவிட ½% கூடுதல் வட்டி தரப்படும்.

| தொடர் கணக்குகள் | தவணைகளுக்குப் பெறும் மொத்தப் பணம். | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| மாதத் தவணை | 12 | 24 | 36 | 48 | 60 | 72 | 84 |
| ரூ. 5-ம் அதன் மடங்குகளும் ரூ. | 62 | 128·50 | 201 | 278 | 362·50 | 452 | 548·50 |

---

கிளைகள் :—மயிலாப்பூர், எழும்பூர், திருவல்லிக்கேணி, தியாகராய நகர், காந்திநகர், ஷெனாய் நகர், கெல்லீஸ், சாந்தோம், கிரீன்வேஸ் ரோடு, மயிலாப்பூர்–குளம், அண்ணாசாலை (காமதேனு), சாஸ்திரி நகர், அசோக் நகர், அண்ணா நகர், அண்ணாசாலை (அண்ணா சிலை), ஜவஹர் நகர், நுங்கம்பாக்கம், பெஸண்ட் நகர்.

---

| | | |
|---|---|---|
| **ஆர். கனகசபை,** | **குடவாசல் சி. கிருட்டிணமூர்த்தி,** | **டி. வர்தமானன்,** |
| தலைவர். | துணைத் தலைவர். | செயலர். |

# தென் ஆர்க்காடு மாவட்டத்தின் உலகச் சாதனை!

குடும்பநலத்திட்டச் செயலாக்கத்தில் இந்தியாவிலேயே தமிழ்நாடு தனக்கெனத் தனியொரு சிறப்பிடத்தைப் பெற்ற மாநிலமாகும். 1,000-க்கு 39 அல்லது 40 எனப் பிறப்பு விகிதம் இருந்த நேரத்திலேயே மிகுந்த தொலை நோக்குடன் குடும்ப நலத்திட்ட அறுவைச் சிகிச்சைத் திட்டத்தை 1959-லிருந்தே செயல்படுத்தியது தமிழ்நாடு! இதன் பயனாகத் தமிழ்நாட்டின் பிறப்பு விகிதம் இப்போது 1,000-க்கு 32 எனக் குறைந்திருக்கிறது. அனைத்து இந்தியாவிலும் தமிழ்நாடு, கேரளம், மகாராட்டிரம் ஆகிய மூன்று மாநிலங்களில்தான் பிறப்புவிகிதம் 1,000-க்கு 32 ஆகக் குறைந்திருக்கிறது. 1,000-க்கு 32 எனப்பிறப்பு விகிதத்தைக் குறைக்க வேண்டுமென்பது நான்காவது திட்ட காலக் குறிக்கோளாகும். நான்காவது திட்ட இறுதியாண்டான 1973—74-ல்தான் தமிழ்நாடு 1,000க்கு 32 என்ற பிறப்பு விகிதத்தை அடைய வேண்டுமென்பது இலக்கு! ஆனால் தமிழ்நாடு, குறிப்பிட்ட இரண்டு ஆண்டுக் காலத்திற்கு முன்பாகவே தனது இலக்கை எட்டியிருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கதொரு வெற்றியாகும்.

மேலும், இந்தியாவில் இதுவரை—குடும்ப நலத் திட்ட அறுவைச் சிகிச்சை நடத்தத் தொடங்கிய நாள் முதல் இதுவரை 84 இலட்சம் பேருக்கு அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாடு இதுவரை ஏறத்தாழப் பன்னிரண்டேகால் இலட்சம் பேருக்கு அறுவைச் சிகிச்சை நடத்தியுள்ளது. அதாவது இந்தியாவின் சாதனையில் 15 விழுக்காடுகள் தமிழ்நாடு ஏற்படுத்தித் தந்துள்ளது. ஆனால், இந்தியாவின் மொத்த மக்கள்தொகையில் தமிழ்நாட்டின் மக்கள் தொகை 7.5 விழுக்காடுதான்! எனவே குடும்பநலத் திட்டத்தில் இதுவரை இந்தியா ஏற்படுத்தியுள்ள சாதனையில் தமிழ்நாட்டின் பங்கு இருமடங்காகும். இச்சிறப்புக்குரிய தமிழகம் சென்ற 1971—72-ஆம் ஆண்டில் இலக்கையும் மீறி படுத்தியுள்ளது. சென்ற ஆண்டில் 1,73,883 அறுவைச் சிகிச்சைகள் செய்து முடிக்க வேண்டுமென்பது தமிழ்நாட்டிற்குரிய இலக்காகும். ஆனால், 2,45,845 பேருக்கு அறுவைச் சிகிச்சை செய்து, தமிழகம் சென்ற 1971—72-ஆம் ஆண்டில் மாபெரும் சாதனையை ஏற்படுத்தியிருக்கிறது. இது 141.4 விழுக்காடுகள் அளவுக்குத் தமிழகம் இலக்கு மீறிய சாதனை புரிந்ததற்கு ஒப்பானதாகும். அளப்பரிய இவ்வெற்றியைத் தமிழ்நாடு பெற்றதற்கு மாவட்டங்கள் தோறும் சென்ற ஆண்டு நடந்து முடிந்த முனைப்பு இயக்கங்களே காரணம் எனலாம். வெற்றிக்கு முழுமுதற் காரணமாக அமைந்த முனைப்பு இயக்கத்தைச் செம்மையாக நடத்தித் தமிழக மாவட்டங்கள் அனைத்தையும் விஞ்சிய நிலையில் சாதனை புரிந்த முதல் மாவட்டமாகத் திகழ்வது தென் ஆர்க்காடு மாவட்டமாகும்!

ஏனைய மாவட்டங்களைப் போல முனைப்பு இயக்கம் நடத்த முனைந்த தென் ஆர்க்காடு மாவட்டம் தொலைநோக்குடனும், தகுந்த முன் ஏற்பாடுகளுடனும் தகுந்த அடித்தளத்தோடும் தன் பணியைத் துவக்கியது. முனைப்பு இயக்கக் காலத்தில் அறுவைச் சிகிச்சை முகாம் தொடங்குவதற்கு முன் ஒரு மாத காலம் குடும்ப நல விளம்பரப் பணி மிகச் சிறப்பாக நடத்தப்பட்டது. மக்களிடையே சிறுகுடும்ப நெறியின் அவசியத்தைப்பற்றி எடுத்துச் சொல்லிக் குடும்ப நலத் திட்டம் ஏற்கச் செய்ய கிராம அதிகாரிகளும், ஆசிரியப் பெருமக்களும், வருவாய்த்துறை, சமுதாய நலத்துறை, குடும்ப நலத்துறை ஆகிய துறைகளின் அலுவலர்களும், சீரணியினரும் தன்னியக்கத் தாபனங்களைச் சார்ந்தோரும், அந்தந்த வட்டாரத் தலைவர்களும், ஊராட்சித் தலைவர்கள், ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள், நகராட்சித் தலைவர்கள், சட்டமன்ற, மேலவை, நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகி உறுதுணையாக இருந்து அரும் பணியாற்றினார்கள்.

சிறப்பாக முனைப்பு இயக்கக் காலத்தில் தென் ஆர்க்காடு மாவட்ட ஆட்சித் தலைவராக இருந்தவரும் இரண்டே இரண்டு பெண் குழந்தைகளையேயுடைய வருமான திரு கே.ஏ. நம்பியார் அவர்கள், தாமே அறுவைச் சிகிச்சை செய்து கொண்டு பிறருக்கு எடுத்துக் காட்டாக விளங்கினார்.

## முனைப்பு இயக்கத்தின் முக்கிய அம்சங்கள்

சாதாரணமாக 55 வயது வரை ஆண்களுக்கு அறுவைச் சிகிச்சை செய்யப்படுகிறது. ஆனால் தென் ஆர்க்காடு மாவட்ட முனைப்பு இயக்கக் காலத்தில் அதிகப்படியாக 45 வயதுவரைதான் ஆண்களுக்கு அறுவைச் சிகிச்சை செய்யலாம் என்ற வரம்பு நிர்ணயிக்கப்பட்டது. எனவே குழந்தைகளைப் பெற்றெடுக்கும் வாய்ப்பு மிகுந்த—குறைவான குழந்தைகளையுடைய இவர்களின் இளம் மனைவிமார்கள் அந்த வாய்ப்பை இழந்தார்கள். எனவே இம் மாவட்டத்தில் 45 வயதுவரையிலானவர்களுக்கு மட்டும் அறுவைச் சிகிச்சை செய்ததால் பெரும் பயன் விளைந்தது என்றே சொல்லலாம்.

முனைப்பு இயக்கம் நடந்த போது அறுவைச் சிகிச்சை செய்து கொண்டவர்களுக்குப் பொதுவாக அரசு அளித்தது ரூ. 30 ஈட்டுத்தொகையும், அறுவைச் சிகிச்சைக்குப் பிறரை அழைத்து வந்தவருக்கு ரூ. 10ம், ஆறு நாட்களுக்கு இலவசமாக உணவு அளிக்க ரூ. 18ம் ஆகும். ஆனால் தென் ஆர்க்காடு மாவட்டத்தில் கீழ்வரும் ஊக்கத் தொகையும் பிறவும் அறுவைச் சிகிச்சை செய்து கொண்டவர்களுக்கு அளிக்கப்பட்டன.

## தந்தைமார்களுக்கு வழங்கப்பட்டவை

1. அறுவைச் சிகிச்சை செய்து கொண்ட ஒவ்வொரு தந்தைக்கும் ரூ. 75.
2. தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டு ஒன்று.
3. ரூ. 10 பெறுமானமுள்ள ஒரு வேட்டியும் துண்டும்.
4. இலவச உணவளிக்க ஒவ்வொரு நபருக்கும் நாள் ஒன்றுக்கு ரூ. 4.25 வீதம் ஆறு நாட்களுக்கு ரூ. 25.50.
5. கிராமத்திலிருந்து அறுவைச் சிகிச்சை முகாம்

வரப் போக்குவரத்துச் செலவுக் கென ஒவ்வொருவருக்கும் ரூ. 5.

### தாய்மார்களுக்கு வழங்கப்பட்டவை

1. அறுவைச் சிகிச்சை செய்து கொண்ட ஒவ்வொரு தாய்க்கும் ரூ. 100.

2. தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டு ஒன்று.

3. ரூ. 12 பெறுமானமுள்ள சேலை ஒன்று.

இந்த வகையிலான செல வினங்களுக்காக மாவட்ட ஆட்சித் தலைவரால் பொது மக்களிடமிருந்தே நிதி திரட்டப்பட்டது.

தென் ஆர்க்காடு மாவட்ட முனைப்பு இயக்க அறுவைச் சிகிச்சை முகாமை 1971-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் முதல் நாள், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் பேராசிரியர் அன்பழகன் அவர்கள் கடலூர் நகர மண்டபத்தில், போக்கு வரத்துத்துறை அமைச்சர் திரு இராமச்சந்திரன் அவர்கள் தலைமையில் துவக்கி வைத்தார்கள். இந்நகர மண்டபத்தின் பின் பகுதியிலேயே அறுவைச் சிகிச்சைக்கான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருந்தன, இந்நகர மண்டபத்தில் விழா துவக்கி வைக்கப்பட்ட அந்த ஒரே நாளில் மட்டும் 600 தாய்மார்களுக்கு அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டது. இத் தொடக்க விழாவின் தொடர்பாக மாவட்டத்தில் பரவலாக அமைக்கப்பட்டிருந்த அறுவைச் சிகிச்சை முகாம்களும் இயங்கிச் செயல்பட்டன.

### பூத்துறையின் நூற்றுக்கு நூறு சாதனை

இம்மாவட்டத்தில் 'வானூர்' வட்டார வளர்ச்சிப் பகுதியில் இருப்பது, 2,622 மக்கள் தொகையுடைய பூத்துறை என்ற கிராமமாகும். விவசாயிகளான இக்கிராம மக்களில் தகுதி வாய்ந்த தம்பதிகள்- தென்ஆர்க்காடு மாவட்டஆட்சித் தலைவரின் கணிப்புப்படி 45 வயதுக்குட்பட்ட தந்தைமார்கள் அனைவரும் நூற்றுக்கு நூறு பேர் அறுவைச் சிகிச்சை செய்து கொண்டார்கள். இவ்வருஞ் செயல் நிகழப் பின்னணியிலிருந்து பெரும் பணியாற்றியவர் பூத்துறை கிராம அதிகாரி திரு பி. கே வைத்தியலிங்கம் ஆவார். இருபத்தி ஒன்பது வயது நிரம்பிய இந்த இளைஞர் மூன்று குழந்தைகளோடு சிறுகுடும்ப நெறி ஏற்றுள்ளார். இவரது துணைவியார் அறுவைச் சிகிச்சை செய்து கொண்டுள்ளார்.

### சீரணியினரின் சீரிய தொண்டு

இம்மாவட்டதைச் சேர்ந்த காட்டு மன்னார் கோயில் ஊராட்சி ஒன்றியம் முனைப்பு இயக்கக் காலத்தில் 1,700க்கும் மேற்பட்ட அறுவைச் சிகிச்சை செய்து தனக்கென ஒரு தனியிடத்தை ஏற்படுத்திக் கொண்டுள்ளது. இதில் 500 அல்லது 600 பேர் அறுவைச் சிகிச்சைக் கெனச் சீரணியினரால் அழைத்து வரப்பட்டனர்.

மேலும் இங்கு அறுவைச் சிகிச்சை செய்துகொண்டு ஓய்வில்லங்களில் தங்கியிருந்தோருக்கான உணவைச் சீரணியினர் உழைப்பு தானம் நல்கி இலவசமாக ஆக்கிப் படைத்தார்கள். சீரணியினரின் இச்சீரிய தொண்டு, முனைப்பு இயக்கத்திற்குப் பெருந்துணையாக அமைந்தது.

### உலகச் சாதனை

அனைத்திந்தியாவிலும்முனைப்பு இயக்கத்தின் மூலம் குடும்ப நலத் திட்டத்தில் மிகப்பெரிய சாதனையை ஏற்படுத்தியது கேரள மாநிலத்தைச் சேர்ந்த எர்ணுகுளம் மாவட்டம் எனப் பட்டது. 1970-ஆம் ஆண்டு டிசம்பர் திங்களிலும், 1971-ஆம் ஆண்டு ஜூலைத் திங்களிலும் இம் மாவட்டத்தில் முனைப்பு இயக்க முகாம்கள் நடத்தப்பட்டன. கேரள மாநிலம் முழுவதிலுமிருந்து வந்த தந்தைமார்களும், தாய்மார்களும் அறுவைச் சிகிச்சைக்காக ஏற்றுக் கொள்ளப்பட்டனர்.

அறுவைச் சிகிச்சை செய்து கொண்டவர்களுக்கு 'கேர்' நிறுவனத்தின் உதவியோடு பல்வேறு வகையான சலுகைகள் இலவசமாக அளிக்கப்பட்டன. இத்தனைக்கும் பின்னே, எர்ணுகுளத்தில் இருவேறு மாதங்களில் நடந்த முனைப்பு இயக்க முகாமில் செய்யப்பட்ட அறுவைச் சிகிச்சைகளின் எண்ணிக்கை 78,423 என்றும், இதில் எர்ணுகுளம் மாவட்டத்தைச் சார்ந்தவர்கள் மட்டும் 34,500 பேர் என்றும் அறிகிறோம். இந்த 34,500 அறுவைச் சிகிச்சைகளைச் செய்து முடித்தது எர்ணுகுளம் மாவட்டம் என்றும், தனியொரு மாவட்டத்தால் ஏற்படுத்தப்பட்ட பெருஞ் சாதனை இது என்றும், இதுவே உலகச் சாதனை என்றும் இதுவரை கருதப்பட்டது.


ஆனால் தென்ஆர்க்காடு மாவட்டம் ஒரே முனைப்பு இயக்க முகாமில்-மழைக்கும் வெள்ளத்திற்கும் இடையை நடத்தப்பட்ட முகாமில் 'கேர்' நிறுவனம் போன்றவற்றின் உதவியில்லாமல் 1971-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள், முதல் நாள் முதல்1972-ஆம் ஆண்டு சனவரித் திங்கள் பத்தாம் நாள் வரையிலான 41 நாட்களில், அண்டை மாவட்டம், பிற மாவட்ட மக்களுக்கல்லாது, தன் மாவட்டத்தினரிடையே மட்டும் செய்துள்ள அறுவைச் சிகிச்சையின் எண்ணிக்கை 37,887 ஆகும். எனவே முனைப்பு இயக்கத்தின் மூலம் இப்போதைய நிலையில் குடும்ப நலத்திட்டத்தில் உலகச் சாதனை ஏற்படுத்தியிருப்பது தென்ஆர்க்காடு மாவட்டம். இந்த மாவட்டத்தின் அளப்பரிய இச்சாதனை சிறப்பாகக் குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

இவ்வெற்றியைக் குறிக்கும் வகையில் கடலூரில் 12-5-1972 ஆம் நாள் மாபெரும் வெற்றி விழாக் கொண்டாடப்பட்டது. இவ்வெற்றி விழாக் கூட்டத்தில் கலந்துகொண்டு அனைவரையும் பாராட்டிஊக்கமும்உற்சாகம் ஊட்டிய முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு கே. ஏ. நம்பியாருக்கும் பிறருக்கும் அவர்களது அரும்பணியைப் பாராட்டிப் பரிசுகள் வழங்கினார்கள்.

---

### ஏழு நகராட்சிகள்

**தென் ஆர்க்காடு மாவட்டத்தில் கடலூர், சிதம்பரம், விழுப்புரம், திண்டிவனம் ஆகிய நான்கு நகராட்சிகளே இருந்தன. ஆனால், கடந்த 5 ஆண்டுகளில் ஏற்பட்ட மக்கட் பெருக்கத்தின் விளைவாலும், தொழில், வணிகம் ஆகியவற்றில் முன்னேற்றம் அடைந்துள்ள காரணத்தாலும், பேரூராட்சிகளாக இருந்த நெல்லிக்குப்பம், பண்ணுருட்டி, விருத்தாசலம் ஆகியவையும் நகராட்சி மன்றங்களாக மாற்றப்பட்டன. இவற்றுள் கடலூர் நகராட்சி நூற்றாண்டைத் தாண்டியது குறிப்பிடத்தக்கது.**



# ஆராய்ச்சி நிலையங்கள் அமைந்த மாவட்டம்

தென் ஆர்க்காடு மாவட்டம், தஞ்சை மாவட்டத்திற்கடுத்த படியாக வேளாண்மையில் சிறந்து விளங்குகிறது. அதன் காரணமாக, வேளாண்மை ஆராய்ச்சி நிலையங்கள் இங்கே தோன்றியுள்ளன; வேளாண்மைத் தொழிலுக்கு இந்த ஆராய்ச்சி நிலையங்கள் மிகுந்த உதவி செய்கின்றன.

பழம்பெரும் ஆராய்ச்சிப் பண்ணைகளில் பாலூர் விவசாய ஆராய்ச்சிப்பண்ணையும்ஒன்றாகும். இப்பண்ணை கடலூர் வட்டாரத்தில் பாலூருக்கு அடுத்த பல்லவராயன் நத்தம் கிராமத்தில் அமைந்துள்ளது. இது 1967-ஆம் ஆண்டிலிருந்து உழவியல் வல்லுநர்களின் கீழ் இயங்கி வருகிறது. இந்தப் பண்ணையின் மொத்தப் பரப்பளவு 55 ஏக்கர்களாகும். இவற்றில் 18.65 ஏக்கர் நன்செய், 24.40 ஏக்கர் புன்செய் நிலங்கள். இங்கு குழாய்க் கிணறுகள் ஐந்து உள்ளன. நான்கு மின்சார மோட்டார்கள் பொருத்தப்பட்டுள்ளன இந்தப் பண்ணையில்.

இந்தப் பண்ணையில், பாலூர் —1, பாலூர் —2 என்ற இருவகை குறுகிய காலப் பயிர்களும், பாலூர் —1, பாலூர் —2 என்ற குறுகிய காலக் கேழ்வரகுத் தானிய வகையும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவ்வகைகளைப் பயிரிடுவதன் வாயிலாகச் சாதாரணச் சாகுபடியை விட 10 சதவிகிதம் அதிக மகசூல் கிடைக்கிறது.

டி. கே. எம். 6 நெல் வகை, சொர்ணவாரி, நவரைப் பட்டத்தில் பயிரிடுவதற்கும், கோ. 25 சம்பாப் பட்டத்தில் பயிரிடுவதற்கும் சிறந்தவை என முடிவு செய்யப்பட்டுள்ளன. இந்தப் பண்ணை நெல், தானியங்கள், காய்கறி போன்ற விதைகளை உற்பத்தி செய்து அரசு விதைப்பண்ணைகளுக்கும் ஊராட்சி ஒன்றியங்களுக்கும் அனுப்பி வைக்கிறது. பழவகைகளில் உயர்தரக் கன்றுகளும், காய்கறிகள் முதலியவையும் இப்பண்ணையின் காய்கறித் தோட்டத்திலும் பழத் தோட்டத்திலும் உற்பத்தி செய்யப்பட்டு விநியோகிக்கப்படுகின்றன.

இப்பண்ணையில் ஆராய்ச்சியின் விளைவாகக் கண்டுபிடிக்கப்பட்ட பயிர் வகைகள் நெல் பி.எல்.ஆர். 1, பி. எல். ஆர். 2, கேழ்வரகு, பி.எல்.ஆர். 1, பி.எல்.ஆர் 2 ஆகிய வகைகளாகும்.

ஃ ஃ ஃ

விருத்தாசலம் வட்டத்தில் உள்ள குப்ப நத்தம் என்ற கிராமத்தில் ஓர் ஆராய்ச்சி நிலையம் செயல்பட்டு வருகிறது. இங்கு முந்திரி விளைச்சலைப் பல மடங்கு பெருக்கும் நோக்கத்தோடு ஆராய்ச்சிகள் நடைபெற்று வருகின்றன. தரமான முந்திரி விதைகளைக் கண்டுபிடிப்பது இதன் முக்கியமான பணிகளாகும்.

ஃ ஃ ஃ

கடலூரில் வில்வராய நத்தம் என்ற கிராமத்தில் கரும்பு ஆராய்ச்சி நிலையம் செயல்பட்டு வருகிறது.

1957-ஆம் ஆண்டின் துவக்கத்தில் இந்த ஆராய்ச்சி நிலையம் கடலூரில் துவக்கப்பட்டது. தமிழ்நாடு பிரிவதற்கு முன் இந்த ஆராய்ச்சி நிலையம் ஆந்திர மாநிலத்தில் விசாகப்பட்டின மாவட்டத்தில் அனகாபள்ளியில் இருந்தது. தமிழ்நாட்டுக்கு ஆராய்ச்சி நிலையம் அவசியம் என்ற நிலை உருவாகியது. அதற்குத் தகுந்த இடம் கடலூர் என்று தேர்ந்தெடுக்கப்பட்டது. 136·15 ஏக்கர் பரப்பளவு உள்ளது இந்த ஆராய்ச்சி நிலையம்.

இந்த நிலையத்தின் முதன்மையான அலுவல் கரும்பு ஆராய்ச்சிதான்.

ஆண்டுதோறும் 70 ஏக்கரில் கரும்பு பயிரிடப்படுகிறது. மீதி நிலத்தில் நெல், மணிலா, ராகி, சூரியகாந்தி, பசுந்தாள் உரம், இதர பயிர்கள் பயிரிடப்படுகின்றன.

ஆண்டு ஒன்றுக்கு 1·19 இலட்சம் ரூபாய் செலவாகிறது. ஆனால் வரவு ரூபாய் 1·57 இலட்சம். எனவே இது இலாபகரமாக நடைபெறும் நிலையம் என்பது குறிப்பிடத்தக்கது.

கோ. 6304 என்ற ரகக் கரும்பு இந்த ஆராய்ச்சி நிலையத்தால் கண்டுபிடிக்கப்பட்டு 1970-ல் அறிமுகம் செய்யப்பட்டது. இதன் வயது 12 மாதம்; பிப்ரவரி, மார்ச் மாதத்தில் நடவு செய்வார்கள். ஒரு ஏக்கருக்கு 46 டன் கரும்பு விளைகிறது. இதில் சர்க்கரைச் சத்து 13·5 சதவிகிதம் கிடைக்கிறது. ஒரு ஏக்கர் கரும்பிலிருந்து கிடைக்கும் சர்க்கரை 6·2 டன். இந்த ரகத்தைக் கரிப்பூட்டை நோய் தாக்காது. எளிதில் சாயாமல் நிமிர்ந்து நிற்கும் தன்மையுடையது இந்த ரகம்.

பொதுவாக, கோ. 658, கோ. 740, கோ. 853, கோ. 419, கோ. 449 ஆகிய கரும்பு ரகங்கள் சாகுபடியில் உள்ளன. ஆனால் இவை அனைத்தையும்விடச் சிறந்ததாக விளங்குகிறது இந்தப் புதிய ரகம்.

அதிக மகசூல் கொடுக்கக் கூடியதும் அதிக சர்க்கரை கொடுக்கக் கூடியதும், பூச்சி பூஞ்சாள நோய்களால் தாக்கப்

படாததும், பல்வேறு தட்ப வெப்ப நிலைகளுக்கு உகந்ததுமான ரகங்களைத் தேர்ந்தெடுத்தல்.

பல்வேறு நிலங்களுக்கு வேண்டிய உர அளவுகளைக் கண்டுபிடித்தல்.

பயிரிடும் செலவுகளைக் குறைப்பதோடு, வேண்டிய உழவியல் முறைகளை ஆராய்தல்.

இவைதான் இந்த நிலையத்தின் நோக்கங்கள்

பொதுவாக வெளிநாட்டு ரகங்கள் நமது நாட்டுக்குப் பயன்படவில்லை.

இந்தியாவிலேயே புகழ்பெற்ற கோவை ஆராய்ச்சி நிலையத்தில் ஒட்டுச் சேர்க்கை செய்து, ரகங்களைக் கண்டுபிடித்து, மாநில ஆராய்ச்சி நிலையங்களுக்கு அனுப்புகிறார்கள். அவர்கள் மாவட்ட வேளாண்மை அலுவலகங்களுக்கு அனுப்பி வைக்கிறார்கள்.

வட ஆர்க்காடு மாவட்டத்தில் குடியாத்தத்திலும், திருச்சி மாவட்டத்தில் சிறுகமணியிலும் கிளை ஆராய்ச்சி நிலையங்கள் உள்ளன.






**பிஸ்மில்லாவைத் தெரியுமா ?**

இப்படிக் கேட்டவுடன் புகழ்பெற்ற ஷெனாய் வாத்தியக் கலைஞர் பிஸ்மில்லா என்று கருதிவிட வேண்டாம். தென் ஆர்க்காடு மாவட்டத்தில், பரங்கிப்பேட்டைப் பகுதியில் உள்ள ஒருவகை மீனுக்குத்தான் பிஸ்மில்லா என்று பெயர். அது சரி. . . .அந்த மீனுக்கு இந்தப் பெயர் எப்படி ஏற்பட்டது தெரியுமா? அதன் உடலில், "பிஸ்மில்லா" என்று உருது மொழிச் சொல் இயற்கையிலேயே இருக்கிறதாம். அதனால் தான் அந்த மீனுக்கு பிஸ்மில்லா என்று பெயர் ஏற்பட்டிருக்கிறது.

ஒவ்வொரு ஆண்டும் 750 முதல் 1,500 ரகங்கள் ஆய்வு செய்யப்பட்டு, முக்கியமான ரகங்கள் மாவட்ட வேளாண்மை அலுவலர் (கரும்பு) அவர்கள் மூலம், வேளாண் பெருமக்களின் நிலங்களில் பரிசோதிக்கப்பட்டு, அதன் பின்னர் பரந்த அளவில், வேளாண்மைக்குப் பயன்படுத்தப் பெறுகின்றன.

தமிழ்நாடு வேளாண் குடியினரால் பயன்படுத்தப்பெறும் விதை ரகங்கள் நூற்றுக்கு நூறு இந்த நிலையத்தில் உருவாகியவைதான் என்பது குறிப்பிடத்தக்கது.

30 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு ஏக்கர் நிலத்தில் 20 டன் கரும்பு விளைந்தது. தற்போது ஒரு ஏக்கர் நிலத்தில் ஏறக்குறைய 37 டன் கரும்பு பயிராகிறது.

வேளாண் குடியினர், தங்கள் நிலத்தின் மண் எவ்வகையானது, அதில் எவ்வகைப் பயிர் செய்யலாம் என்றறிவதற்கு, இந்த நிலையத்திற்கு மண்ணை அனுப்பி வைத்தால், இந்நிலையத்தினர் இலவசமாக மண் ஆய்வு நடத்தி அதன் விவரங்களைத் தெரிவிக்கிறார்கள்.

ஃ ஃ ஃ

திண்டிவனத்தில் இறையானூர் என்ற கிராமத்தில் ஒரு வேளாண்மை ஆராய்ச்சி நிலையம் இயங்கி வருகிறது. எண்ணெய் வித்துப் பயிர்களில் முக்கியமான பயிர்களான நிலக்கடலை (மணிலா), எள், ஆமணக்கு, இம்மூன்றிலும் தீவிர ஆராய்ச்சி செய்து, அதிக மகசூலைக் கொடுக்கக்கூடிய வகைகளும், வறட்சி தாங்கக் கூடியதுமான சிறந்த விதைகளைத் தேர்ந்தெடுப்பதற்கும், சாகுபடி முறைகளில் மகசூலைப் பெருக்கக் கூடிய ஆராய்ச்சிகள் இங்கு நடைபெறுகின்றன. உலகத்தில் இதுவரை 750 வகையான மணிலாக்கள் இருக்கின்றன என்று கண்டுபிடித்திருக்கிறார்கள்.

புது டில்லியில் உள்ள இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக்குழு, எண்ணெய் வித்துக்கள் ஆய்வினை அகில இந்திய அளவில் நடத்தியது. கேரளம், ஜம்மு—காஷ்மீர் தவிர எல்லா மாநிலங்களும் அந்த ஆய்வில் பங்கு பெற்றன. திண்டிவனத்தில் உள்ள இந்த ஆராய்ச்சி நிலையந்தான் முதன்மை மையமாகத் (Major centre) தேர்ந்தெடுக்கப்பட்டது.

கோவை மாவட்டம் பொள்ளாச்சியில் உள்ள நிலையம் துணை மையமாகத் (Sub centre) தேர்ந்தெடுக்கப்பட்டது.

நிலக் கடலையில் உள்ளூர் ரக வித்துக்களைவிட 30 சதம் அதிக மகசூலைக் கொடுக்கக் கூடிய 6 பொறுக்கு விதைகள் ஏற்கெனவே இந்த நிலையத்தில் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளன. இவை தவிர டி.எம்.வி. 7, டி.எம்.வி. 8, டி.எம்.வி. 9, டி.எம்.வி. 10 போன்ற அதிக விளைச்சல் தரக்கூடிய பொறுக்கு விதைகளையும் இங்குக் கண்டுபிடித்துள்ளனர். உலகத்தின் பல பாகங்களிலிருந்தும் நிலக்கடலை, எள், ஆமணக்கு ரகங்கள் வரவழைக்கப்பட்டு, ஆராய்ச்சிகள் நடைபெறுகின்றன. என்றாலும், மணிலாவைப் பற்றிய ஆராய்ச்சிக்கே இங்கு முதலிடம் கொடுக்கப்பட்டுள்ளது.

# மீனவர்கள் வளம்பெற அரசு தரும் உதவிகள்



கனிச் செல்வம், நிலச் செல்வம் போன்றதே நீர்ச் செல்வமும். ஆழ் கடலில் மூழ்கி முத்தெடுத்துக் கிரேக்க, ரோமானிய நாடுகளுடன் முத்து வாணிகம் செய்து செழித்துக் கொழித்த நாடு நமது தமிழகம். தமிழகத்தின் கடற்கரையோரம் சரித்திரக் கதைகள் பல பேசும் நிலச் செல்வத்தைவிட, நீரிலிருந்து பெற்ற செல்வம் பெரு மதிப்புடையது. தமிழகத்தில் கடற்கரை யோரங்களில் பல சீரான துறைமுகங்களைக் கட்டி நாட்டின் வாணிக நிலையினை உயர்த்திப் பெருமை பெற்றிருக்கிறது தமிழக அரசு.

தென் ஆர்க்காடு மாவட்டத்தில் வடக்கே மரக்காணத்திலிருந்து தெற்கே கொள்ளிடத்தின் முகத்துவாரம் வரை 65 மைல் நீளக் கடற்கரை இருக்கிறது. உள்நாட்டு நீர்நிலைகளில் மீன் பிடிப்பதற்காக வாய்ப்பு வசதிகள் ஏராளமாகப் பெருகியுள்ளன.

நீர் மேல் வாழ்வு நடத்தும் மீனவர்களுக்கு மீன்வலையும், ஸ்டீமர்களும் வாங்கக் கடன் உதவி அளித்து வருகிறது. இம்மாவட்டத்தில் கடலூர் பழைய நகரில் மீன்பிடிக்கும் துறைமுகம் ஒன்றை அரசு அமைத்து வருகிறது.

மீனவர்கள் வாழ்வு மேன்மையுற விசைப்படகுகளை வாங்கத் தவணை முறையில் பணம் கட்டி, விசைப்படகுகளைத் தமிழக அரசு அளிக்கிறது. இத்திட்டத்தின் கீழ் கடந்த 4 ஆண்டுகளில் ரூ. 47,89,050 கடன் வழங்கியுள்ளது. 1971-ஆம் ஆண்டு மீனவர்களுக்கு 35 விசைப்படகுகள் கடனாக வழங்கும் திட்டம் செயல்பட்டு அதனைப் பரிசுத் திட்டத்தின் மூலம் மீனவர்களுக்கு அரசு ஏற்பாடு செய்துள்ளது.

இந்த ஆண்டு 44 விசைப் படகுகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் இவ்வாண்டு முதல், விசைப்படகுகளில் மீனவர்கள் விரும்பினால், இயந்திரத்தைப் பொருத்தித் தரவும் தமிழக அரசு அனுமதித்துள்ளது.

## குடியிருப்பு வசதி

ஓலைக் குடிசையிலே வாழ்கின்ற மீனவர்களுக்கு நல்ல தரமான குடியிருப்புகளைக் கட்டுவதற்கு அரசு ரூ. 80,000 வழங்கியுள்ளது. இந்த வீடுகளை சிதம்பரம் வட்டம் கிள்ளை என்ற கிராமத்தில் கட்டுவதாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இத் திட்டத்தின் கீழ் மீனவர்களுக்கென வீடு கட்டுவதற்கு மீனவர்களுக்கு ரூ. 750 உதவித் தொகையாகவும், ரூபாய் 250 வட்டியில்லாத கடனாகவும் அரசு வழங்கி வருகிறது.

## மீன் அங்காடி

மீன்களை விற்பதற்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு இந்த அரசு பல உதவிகளைச் செய்து வருகிறது. இம்மாதிரியான கூட்டுறவுச் சங்கங்கள் இம் மாவட்டத்தில் 70 உள்ளன. அவற்றில் உள்ள மீனவ உறுப்பினர்களின் எண்ணிக்கை 19,000 ஆகும். இச்சங்கங்களுக்காக அரசு 1969—70-ல் ரூ. 31,000 கடன் வழங்கியுள்ளது.

1970—71-ல் அரசு, ரூபாய் 10,000 செலவில் உலர்ந்த மீன் அங்காடி வைக்க விழுப்புரத்தில் ஒரு கட்டடத்தைக் கட்டியது. கடலூர் பழையநகரில் ரூ. 10,000 செலவில் ஒரு மீன் அங்காடி கட்டி முடிக்கப்பட்டது. தென் கடலில் மூழ்கி முத்து எடுப்பது தொன்று தொட்டுவரும் ஒரு வழக்கமாகும். அம்முறையில் ஆழ்கடலில் மூழ்கிச் சங்கு எடுப்பதை இம்மாவட்டத்தில் அரசு பொது மக்களுக்குக் குத்தகைக்கு விட்டிருக்கிறது. 1971-ல் 1,09,722 சங்குகள் மூழ்கி எடுக்கப்பட்டுள்ளன. 1969—70 வரை சங்கு எடுப்பதற்காகக் குத்தகை விடப்பட்டு அரசு அடைந்த வருமானம் ரூ. 35,000 ஆகும். இம் மாவட்டம் சங்கு எடுப்பதில் முதன்மையில் நிற்கிறது.

### அரிசனக் குடியிருப்பும் மின் வசதியும்

தென் ஆர்க்காடு மாவட்டத்தில் 1967 வரையுள்ள 20 ஆண்டுகளில் மின்வசதி பெற்ற அரிசனக் குடியிருப்புகள் 30; கடந்த ஐந்தாண்டுகளில் மின்வசதி பெற்ற அரிசனக் குடியிருப்புகள் 1,152 ; கல்வராயன் மலைப் பகுதி தவிர மற்றப் பகுதிகளுக்கெல்லாம் மின் வசதி அளிக்கப்பட்டுவிட்டது.



# கதர் கைத்தொழில் அங்காடி

## குறளகம்
சென்னை-1











**கைவண்ணப் பொருள்களின் களஞ்சியம்**

வெளிநாட்டார் போற்றும்
**பயன் பொருள் கலைக்கூடம்**

20461
20462 20463
20464 20465





சந்தர்

# தென்ஆர்க்காடு மாவட்டத்தில் கல்வி வளர்ச்சி

"தொட்டனைத் தூறும்மணற்
கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு"

என்கிறது குறள்; குறள் மொழியைப் பொன்னாகப் போற்றிவரும் தமிழக அரசு கல்விதரும் பணியில் பெருந்தொண்டு புரிந்து வருகிறது. இந்தியாவிலேயே படித்தவர்கள் அதிகம்பேர் உள்ள மாநிலங்களில் தமிழ்நாடு இரண்டாவது மாநிலமாகத் திகழ்கிறது. இந்த முன்னேற்றத்துக்குக் காரணம், தமிழக அரசின் அயராத தொண்டு என்றால் அது மிகையாகாது.

தென் ஆர்க்காடு மாவட்டத்தைப் பொறுத்த அளவில் கல்விப் பணிக்கு அரசு நிறையப் பொருள் செலவு செய்து வருகிறது. கல்விப் பணியைப் பொறுத்த அளவில் தென் ஆர்க்காடு மாவட்டம் நான்கு கோட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அவையாவன: கடலூர், விழுப்புரம் விருத்தாசலம், திண்டிவனம்.

தென் ஆர்க்காடு மாவட்டத்திலுள்ள பள்ளிகள் விவரம்:

| | |
|---|---|
| துவக்கப் பள்ளிகள் | 2,034 |
| உயர் துவக்கப் பள்ளிகள். | 380 |
| உயர் நிலைப் பள்ளிகள். | 195 |
| முதுநிலை ஆதாரப் பள்ளிகள். | 126 |
| இளநிலை ஆதாரப் பள்ளிகள். | 428 |
| கீழ்நாட்டு மொழி நடுநிலைப்பள்ளி. | 1 |
| கீழ்நாட்டு மொழி உயர்நிலைப்பள்ளி. | 1 |
| முதல்நிலை ஆதாரப் பள்ளி. | 5 |
| சிறைப்பள்ளி | 1 |
| பார்வையற்றோர் துவக்கப் பள்ளி. | 1 |
| முதியோர் பள்ளி | 4 |
| நர்சரிப் பள்ளி | 1 |

துவக்கப்பள்ளிகளுக்கும், உயர்நிலைப்பள்ளிகளுக்கும் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் மிகுதியாகத் தேவைப்பட்டதை யொட்டிப் பயிற்சிப் பள்ளிகள் வளர்ச்சியிலும் கவனம் செலுத்த வேண்டி நேரிட்டது. தற்போது இந்த மாவட்டத்தில் 10 ஆசிரியர்பயிற்சிப் பள்ளிகள் இயங்கி வருகின்றன. இவற்றில் 7 ஆண்களுக்கும் 3 பெண்களுக்கும் ஆகும்.

துவக்கப் பள்ளிகளில் 8,547 ஆசிரியர்களும், உயர்நிலைப்பள்ளிகளில் 3,747 ஆசிரியர்களும் பணிபுரிகிறார்கள்.

அண்மையில் இந்த மாவட்டத்தில் குறிப்பிடத் தக்க நிகழ்ச்சி ஒன்று நிகழ்ந்துள்ளது. நெல்லிக்குப்பம் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த கண்டாக் கோட்டையில் உயர் தொடக்கப்பள்ளி ஒன்று 20 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ளது. இந்தக் கட்டடத்திற்குப் பரிசுச் சீட்டு வருமானத்திலிருந்து 13 ஆயிரம் ரூபாயைத் தமிழக அரசு மானியமாகக் கொடுத்துள்ளது. இந்தப் பள்ளியை அரிசன நல அமைச்சர் திருமதி சத்தியவாணி முத்து அம்மையார் அவர்கள் செப்டம்பர் மாதம் 16-ஆம் தேதி அன்று திறந்து வைத்தார்கள்.

இம்மாவட்டத்தில் 1966-ஆம் ஆண்டு அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் உள்ள கலைக் கல்லூரிகளைத் தவிர்த்து, இரண்டு கல்லூரிகள் மட்டுமே இருந்தன. அதன்பின் கடலூரில் ஆண்கள் கல்லூரி ஒன்று இயங்கி வருகிறது. 1968-ல் மகளிர் கல்லூரி ஒன்று, பச்சையப்பன் அற நிலையத்தாரால் கட்டப்பட்டு இயங்கி வருகிறது.

திண்டிவனத்தில் ஏ. கோவிந்தசாமி அரசினர் கலைக் கல்லூரி— 31—10—1969-ல் ரூ. 8.50 இலட்சத்தில் கட்டுவதற்கு அனுமதி வழங்கப்பட்டது. 17—12—1970 அன்று வேலை துவக்கப்பட்டு, இந்த ஆண்டுத் துவக்கத்தில் முடிக்கப்பட்டுவிட்டது. கல்லூரி, இப்போது புதிய கட்டடத்தில் நடைபெற்று வருகிறது. கட்டடம் கட்டி முடிக்கச் செலவிடப்பட்ட மொத்தத் தொகை ரூ. 10 இலட்சம் என்பது குறிப்பிடத்தக்கது.

விழுப்புரத்தில், நகர்ப் பகுதியில் அமைந்துள்ள கீழ்ப்பெரும்பாக்கத்தில் அரசினர் கலைக் கல்லூரி நிரந்தரக் கட்டடம் நிறுவுவதற்கு அரசு அனுமதி தந்துள்ளது; இந்தத் திட்டம் 1971-ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் செயல்முறைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது; தற்போது வேலைகள் முடிவடையும் தறுவாயில் உள்ளன. இதன் மொத்தச் செலவு ரூ. 10.30 இலட்சங்கள் ஆகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

விருத்தாசலத்தில், ஆண்கள் கலைக் கல்லூரி ஒன்றினை அரசு உருவாக்கியுள்ளது. 1969-ல் துவக்கப்பட்ட கல்லூரிக் கட்டடம் 1971-ல் கட்டி முடிக்கப் பெற்றது. கடந்த 1971 ஜூன் மாதத்திலிருந்து இந்தக் கல்லூரி புதிய கட்டடத்தில் இயங்கி வருகிறது. சுமார் 700 மாணவர்களுக்குக் கல்வி கொடுத்து வரும் இந்தக் கல்லூரியின் திட்ட மதிப்பீடு ரூ. 8.50 இலட்சம்; ஆனால் ரூ. 8.27 இலட்சம்தான் செலவாகியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. இந்தக் கல்லூரியின் பின் பகுதியில் முதல் மாடி கட்டுவதற்கும் தமிழக அரசு ரூ. 3.10 இலட்சம் தருவதற்கு இசைந்துள்ளது. விரைவில் வேலை துவங்கி, முடிக்கப்படவிருக்கிறது.

இவ்வாறு, அறியாமையைப் போக்கும் அறிவாலயங்களை உருவாக்கி, மாவட்ட மக்களுக்குக் கல்விச் செல்வத்தை வாரி வழங்கும் வகையில் அரசு தொண்டு புரிந்து வருகிறது

# தென் ஆர்க்காடு மாவட்டத்தில் கண் ஒளி வழங்கும் தொண்டு



தமிழக முதல்வர் கலைஞர் அவர்களின் 49-வது பிறந்த நாள் விழாவை விழி இழந்தோருக்கு ஒளி வழங்கும் விழாவாகக் கொண்டாடும் பொருட்டு மாவட்டந்தோறும் கண் சிகிச்சை முகாம்கள் சிறப்பான முறையில் நடைபெற்று வருகின்றன. ஒளி இழந்த கண்ணினர் பலர் ஒளிபடைத்த கண்ணினராக மாறிக் காட்சி யின்பங்களில் திளைத்து மகிழ்கின்ற அற்புதங்கள் அன்றாடம் நிகழ்கின்றன.

இந்தக் கண் சிகிச்சை முகாம் மூலம் இவ்வாண்டு ஓர் இலட்சம் பேருக்கு அறுவைச் சிகிச்சை நடத்துவதென முடிவு செய்யப்பட்டுள்ளது. இதற்கு ஏறத்தாழ 60 இலட்சம் ரூபாய் வரை செலவாகும் என்றும் அதே சமயம் 5 இலட்சம் பேர்களுக்குக் கண் பரிசோதனை வேறு செய்ய வேண்டியுள்ளது என்றும், இதற்கு 5 இலட்சம் ரூபாய் வரை செலவாகலாம் என்றும் கணக்கிடப்பட்டுள்ளது.

இந்த ஏற்பாட்டின்படி, தென் ஆர்க்காடு மாவட்டத்தில் 10 ஆயிரம் பேருக்கு இலவசக் கண் சிகிச்சையளிக்க முடிவு செய்யப்பட்டு சூலை 19 முதல் 31 வரை முகாம் நடைபெற்றது.

முதலில், சிதம்பரம் அரிமா சங்கத்தின் உதவியுடன் அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பொறியியல் கல்லூரியில் இருவார காலம் நடைபெற்றது.

இந்த முகாமில், 4,378 பேர்களுக்குக் கண் சிகிச்சையளிக்கப்பட்டது. 433 பேர்களுக்கு அறுவைச் சிகிச்சையளிக்கப்பட்டது. அறுவைச் சிகிச்சை பெற்றோருக்கு, சென்னை கண் மருத்துவத் தலைமை மருத்துவர் திரு கே. சி. ஆபிரகாம் தலைமையில், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மாண்புமிகு பேராசிரியர் அன்பழகன் அவர்கள் இலவசமாக மூக்குக் கண்ணாடிகள் வழங்கினார்.

இன்னொரு முகாம், தென் ஆர்க்காடு மாவட்டம் மணவாள நல்லூர் கொளஞ்சியப்பர் கோயிலில் நடைபெற்றது. இந்தச் சிகிச்சை முகாமுக்காகக் கொளஞ்சியப்பர் கோயில் சார்பாக முன்பே ரூபாய் 12 ஆயிரம் நிதி வழங்கப்பட்டது. இது தவிர, உணவு முதலிய வசதிகளுக்காக ரூ. 8 ஆயிரம், கோயிலின் சார்பில் செலவிடப்பட்டது.

இந்த முகாமில், 2,867 ஆண்களுக்கும், 1,733 பெண்களுக்கும் 135 குழந்தைகளுக்கும் இலவசக் கண் சிகிச்சையளிக்கப்பட்டது; 262 ஆண்களுக்கும், 275 பெண்களுக்கும் கண்ணில் புரை அறுவைச் சிகிச்சை அளிக்கப்பட்டது.

இந்த முகாமின் நிறைவு விழா சட்ட மன்ற உறுப்பினர் திரு என். செல்வராசு தலைமையில் நடைபெற்றது.

மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் பேராசிரியர், 510 பேர்களுக்கு மூக்குக் கண்ணாடி வழங்கினார்.

அடுத்த முகாம், விழுப்புரம் அரசினர் பயிற்சிப் பள்ளியில் 27—9—1972-ல் தொடங்கியது. சட்ட மன்ற உறுப்பினர் திரு சண்முகம் தலைமையில் இந்த முகாமை மாவட்ட ஆட்சியாளர் தொடங்கி வைத்தார்.

இந்த முகாமில் 2,504 பேர்களுக்கு மருந்திடப்பட்டது. 492 பேருக்கு அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டது. சென்னை, எழும்பூர் கண் மருத்துவ மனை டாக்டர் திரு கே. சி. ஆபிரகாம் தலைமையில் 18 மருத்துவர்கள் இந்த அறுவைச் சிகிச்சைகளை நடத்தினர்.

### புத்தகப் பெருக்கம்

உலகத்திலுள்ள அச்சகங்கள் ஒரு வினாடிக்கு 260 புத்தகங்களும், 4,500 செய்தித்தாள்களும் அச்சடிக்கின்றன. ஒரு முழுப் புத்தகம் ஒவ்வொரு மணித்துளிக்கும் அச்சாகின்றது.

ஓர் ஆண்டில் உலகில் அச்சாகும் புத்தகங்களை, ஒன்றுக்குப் பக்கத்தில் ஒன்றாக அடுக்கினால் உலகத்தை நான்கு முறை சுற்றி அடுக்கவேண்டும்.

வானொலி, தொலைக்காட்சி முதலியவைகளினால் புத்தகம் படிக்கும் பழக்கம் மக்களிடையே இருந்து விலகுமோ என்ற ஐயப்பாட்டுக்கு அவசியமே இல்லை.



# செழித்து வளரும் கூட்டுறவு

மக்கள் ஒன்றுபட்ட முறையில் பொருளாதார வசதிகளைப் பெருக்கிக்கொள்ளப் பெருஞ் சாதனமாக இருப்பது கூட்டுறவு. கூட்டுறவே நாட்டுயர்வு என்பதற்கேற்ப ஊர்தோறும் பள்ளியும் ஊராட்சி மன்றமும் எவ்வாறு அவசியமோ, அதுபோலக் கூட்டுறவுச் சங்கமும் அவசியமான நிறுவனமாகும். இம்மாவட்டத்தில் பெரும்பாலும் எல்லாக் கிராமங்களும் கூட்டுறவு இயக்க வசதியைப் பெற்றுள்ளன. இம்மாவட்டத்தில் தற்போது 1,333 கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கி வருகின்றன. இவற்றில் சுமார் 400 கூட்டுறவுச் சங்கங்கள் புதிதாகக் கடந்த நான்காண்டுகளில் துவக்கப்பட்டுள்ளன.

இம்மாவட்டத்தில் கூட்டுறவுத் துறையின் கீழ் இயங்கி வரும் சங்கங்களின் வகைகளும் அதன் எண்ணிக்கையும் :—

1 விவசாயக் கடன் கழகங்கள் (வரையறுக்கப்பட்டது)—320.

2 விவசாயக் கடன் கழகங்கள் (வரையறுக்கப்பட்டது)—452.

3 விவசாயக் கடன் கழகம்—1

4 கூட்டுறவுக்கழகம் (விற்பனை) —16.

5 பொதுநல ஆய்வுக் கழகங்கள்—2.

6 ஆரம்ப நிலைக் கூட்டுறவு வங்கிகள்—9.

7 பிற விவசாய மன்றக் கடன் கழகங்கள்—65.

8 உபயோகிப்போர் கூட்டுறவுக்

9 கைத்தறிப் பொருள்கள் கழகங்கள்—67.

10 கைத்தொழிற் கழகங்கள் —28.

11 வீட்டுவசதிக் கழகங்கள்—8.

12 பிறவகைக் கூட்டுறவுக் கழகங்கள்—193.

இந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் இம்மாவட்டத்தில் எல்லா மக்களும் நிதி உதவி பெற்று வளமான வாழ்க்கைக்கு வழி செய்து கொள்கின்றனர். அவ்வகையில் இக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் பெற்ற நிதி உதவி விவரம் :—

| ஆண்டு. | மக்கள் பெற்ற தொகை. ரூ. |
|---|---|
| 1966-67 | 46,785.25 |
| 1967-68 | 82,321.09 |
| 1968-69 | 1,02,218.33 |
| 1969-70 | 22,758.81 |

திருக்கோவலூரில் அமைந்துள்ள கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாக மக்கள் பெற்ற கடந்த 4 ஆண்டுகளின் உதவி பெற்ற கடன் தொகை விவரம் :—

| ஆண்டு. | மக்கள் பெற்ற தொகை. ரூ. (இலட்சம்.) |
|---|---|
| 1967-68 | 95.70 |
| 1968-69 | 120.02 |
| 1969-70 | 120.44 |
| 1970-71 | 128.77 |

விழுப்புரம் வட்டத்தில் உள்ள மக்கள் பெற்ற உதவித்தொகை விவரம் :—

| ஆண்டு. | மக்கள் பெற்ற தொகை. ரூ. (இலட்சம்) |
|---|---|
| 1967-68 | 95.70 |
| 1968-69 | 120.02 |
| 1969-70 | 120.44 |
| 1970-71 | 128.77 |

இத்தகைய கூட்டுறவுச் சங்கங்களுக்கு அரசினரும் மக்களும் கடன் வழங்கும் எண்ணத்தோடு நிதி உதவி அளிக்கின்றனர். அவ்வகையில் கடந்த நான்காண்டுகளில் இக்கூட்டுறவுச் சங்கங்கள் பெற்ற கடன் தொகை விவரம் :—

| ஆண்டு. | தொகை. ரூ. |
|---|---|
| 1966-67 | 6,000 |
| 1967-68 | 8,700 |
| 1968-69 | 4,900 |
| 1969-70 | 15,300 |

திருக்கோவலூர் வட்டம்

| ஆண்டு. | தொகை. ரூ. |
|---|---|
| 1966-67 | 1,49,760 |
| 1967-68 | .. |
| 1968-69 | 8,34,805 |
| 1969-70 | ... |

விழுப்புரம் வட்டம்

| ஆண்டு. | தொகை. ரூ. (இலட்சம்.) |
|---|---|
| 1966-67 | 0.15 |
| 1967-68 | 0.07 |
| 1968-69 | 0.66 |
| 1969-70 | 0.37 |

கடந்த நான்காண்டுகளில் இம்மாவட்டத்தில் நிதி உதவி பெற்ற மக்களின் எண்ணிக்கை வருமாறு :—

| ஆண்டு. | மக்கள் தொகை. |
|---|---|
| 1967-68 | 43,477 |
| 1968-69 | 41,235 |
| 1969-70 | 43,332 |
| 1970-71 | 45,437 |


**மற்ற முன்னேற்றச் சாதனைகள்**

விழுப்புரம் வட்டத்திலுள்ள விற்பனைச் சங்கத்திற்காக ஏற்படுத்தப்பட்டுள்ள மூலதனத்தில் இவ்வட்டத்திலுள்ள கூட்டுறவுச் சங்கம் 1970-71-ல் 0.15 இலட்சம் கடனைக் கொடுத்துள்ளது.

இந்த வட்டத்திலுள்ள கூட்டுறவு விற்பனைச் சங்கங்களுக்காக மாவட்டக் கூட்டுறவுச் சங்கம் ரூ. 0.45 இலட்சம் 1969-

திருக்கோவலூர் வட்டத்தில் கள்ளக்குறிச்சியில் ஒரு கூட்டுறவு அரிசி ஆலையை மாவட்டக் கூட்டுறவுச் சங்கம் நிறுவியுள்ளது. இந்த ஆலை, மணிக்கு 2 மெட்ரிக் டன் அரைக்கும் திறனுடையது. இதற்காக இந்த ஆலையின் மூலதனத்தில் ரூபாய் 10.87 இலட்சம் அரசு உதவியாக அளித்துள்ளது. அத்துடன் 1.11 இலட்சம் தென்ஆர்க்காடு மத்தியக் கூட்டுறவு வங்கியிலிருந்து பெறவும் அனுமதி பெற்றுள்ளது. இந்த நிதியிலிருந்து இந்த ஆலைக்குத் தேவையான நெல் கொள்முதல் செய்யப்படுகின்றது.

இத்துடன் கடலை எண்ணெய் எக்ஸ்பெல்லர் கூடம் ஒன்று அமைக்க அரசு இந்தக் கூட்டுறவு ஆலைக்கு மூலதனத்தில் ரூபாய் 70,000 உதவி அளித்துள்ளது.



'சாரம்' என்னும் ஊரில் உள்ள கூட்டுறவு நூற்பு ஆலை.

வீடு கட்டும் திட்டத்தின்கீழ், கடலூர் வட்டத்தில் கிராமங்களில் சீரான வீடுகளை ஏழை மக்களும் கட்டி இன்புற்றுவாழ அரசு உதவி செய்துள்ளது. அவ்வகையில் 1966-67-ல் ரூபாய் 30,000, 1967-68-ல் ரூபாய் 1,940, 1968-69-ல் ரூபாய் 7,060, 1969-70-ல் ரூபாய் 7,840 கடனுக வழங்கப்பட்டன. இதன் மூலம் வந்த கடனை, மக்கள் நல்வழியில் பயன்படுத்தி நல்லமுறையில் வீடுகளைக் கட்டிப் பயனடைந்து வருகின்றனர்.

மேலும் குறைந்த வருமானம் உள்ளோர் வீடு கட்ட வசதியில்லாமல் தவிக்கும் சமயத்தில் உதவும் பொருட்டு இச்சங்கம், இவ்வட்டத்தில் 1967—68-ல் ரூ. 8,000, 1968—69-ல் ரூ. 8,590, 1969—70-ல் ரூ. 11,900, கடனுக வழங்கியுள்ளது. அவ்வகையில் பெற்ற கடனைக் கொண்டு குறைந்த வருமானமுள்ள மக்கள் வீடுகளைக் கடலூரிலும் சுற்றுப்புறங்களிலும் அமைத்துச் சுகாதாரமான வாழ்வு வாழ்ந்து வருகின்றனர்.

திருக்கோவலூர் வட்டத்திலும் விழுப்புரம் வட்டத்திலும், உழவர்களும் தொழில் செய்வோரும் பெற்ற கடன் தொகை விவரம் :—

| ஆண்டு. | மக்கள். | மக்கள் தொகை. | கடன்பெற்ற தொகை. ரூ. |
|---|---|---|---|
| 1967—68 | விவசாயிகள் | 15,454 | 96,94,141 |
| | தொழிலதிபர்கள் | 5,156 | 25,26,878 |
| 1968—69 | விவசாயிகள் | 10,932 | 1,20,50,599 |
| | தொழிலதிபர்கள் | 5,812 | 20,44,127 |
| 1969—70 | விவசாயிகள் | 16,374 | 1,24,11,266 |
| | தொழிலதிபர்கள் | 4,826 | 24,80,720 |

**விழுப்புரம் வட்டம் :**

| | | 1968–69 | 1969–70 | 1970–71 |
|---|---|---|---|---|
| விவசாயிகள் | | 79.13 | 83.27 | 90.25 |
| கிராம வங்கி | | 40.82 | 32.52 | 37.45 |
| உறுப்பினர்கள் சங்கங்கள் | 0 15 | 0.07 | 0.005 | 0.12 |
| கிராமங்களில் வீடுகட்ட | — | — | 0.201 | 0.101 |

**முன்னாள் இராணுவத்தினர் நலன்**

கடலூரிலுள்ள தென்ஆர்க்காடு மாவட்டக் கூட்டுறவு பஸ் போக்குவரத்துச் சங்கம் முன்னாள் இராணுவத்தினரின் நலனுக்காக 1947-ஆம் ஆண்டில் துவங்கப்பட்டது. தற்போது இதில் 49 உறுப்பினர்கள் இருக்கின்றனர். இச் சங்கத்திற்குச் சொந்தமாகத் தற்போது 10 பேருந்துகள் உள்ளன. இவர்களுக்கு,மூன்றாவது திட்ட காலத்தில் அரசு ரூ. 2,80,000 கடனுக வழங்கியுள்ளது. அதன்பின் அச் சங்கம் எந்தக் கடனையும் அரசிடமிருந்து பெறவில்லை. 1971-ல் மட்டும் இந்தச் சங்கத்திற்குப் போக்குவரத்தின்மூலம் கிடைத்த வருமானம் ரூ. 13.32 இலட்சம் ஆகும். இவர்களுக்கு 1971-ல் கிடைத்த இலாபம் சுமார் ரூ. 84,292 ஆகும்.

**கூட்டுறவு அச்சகம்**

கடலூரிலுள்ள தென் ஆர்க்காடு கூட்டுறவு அச்சகம், கூட்டுறவு முறையில் இந்த மாவட்டத்திலேயே [illegible]

லாகத் துவக்கப்பட்ட ஒன்றாகும். தற்போது இச்சங்கத்தில் சுமாராக 60 உறுப்பினர்கள் இருக்கின்றனர். இதன் பங்கு மூலதனம் ரூ. 51,840 ஆகும். பங்கு மூலதன உதவியாக ரூ. 10,000 கடனும், மேற்பார்வை அலுவலக உதவித் தொகையாக ரூ. 5,000 கடனும் அரசினரால் வழங்கப்பட்டுள்ளது.

இம்மாவட்டத்தில் கூட்டுறவு முறையில் கூட்டுறவுப் பண்ணைச் சங்கங்கள் இயங்கி வருகின்றன. இத்தகைய சங்கங்கள் முக்கியமாக அரிசன மக்களுக்கு உதவுவதற்காகவே அமைக்கப்பட்டுள்ளன. கடன் வழங்கும் சங்கம் என்ற ஒன்றும் இம்மாவட்டத்தில் இயங்கிவருகின்றது. இந்தச் சங்கங்கள் விவசாயிகளுக்குக் கடன் வழங்குவதுடன் இரசாயன விதைகள், பூச்சிக்கொல்லி மருந்துகள், நவீன கருவிகள் முதலியவை வழங்குகின்றன. வேளாண்மை உற்பத்தியை அதிகமாக்க முழுநிதித் திட்டம், தீவிரச் சாகுபடித் திட்டம் போன்றவை இம் மாவட்டத்தில் அமலாக்கப்படுகின்றன. கடன் தொகையினைத் துரிதமாக வழங்குவதற்காகத் தென்ஆர்க்காடு கூட்டுறவு மத்திய வங்கியின் கிளைகள், திண்டிவனம், செஞ்சி, உளுந்தூர்ப்பேட்டை, பண்ருட்டி, சிதம்பரம், விழுப்புரம் போன்ற இடங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

கடன் வழங்கும் சங்கங்களுக்குப் புத்துயிர் அளிப்பதற்காக 142 கடன் வழங்கும் சங்கங்கள், 22 விவசாய வங்கிகள், 13 கடன் வழங்கும் நிலையங்கள் ஆகியவற்றில் பங்கு மூலதனமாக ரூ. 8.08 இலட்சம் அரசு முதலீடு செய்துள்ளது.

இவை தவிர இம் மாவட்டத்தில் தொழிலாளர் ஒப்பந்தச் சங்கங்கள், பால் வழங்கும் ஒன்றியங்கள், நெசவாளர் ஒன்றியங்கள் போன்ற பல ஒன்றியங்கள் செயல்பட்டு வருகின்றன.

## மரமும் கல்லாதும்

மரம் என்று எண்ணி, அருகே சென்று பார்த்தால் அது கல்லாக இருக்கிறது

இது ஓர் அதிசயம்! ஆனால் உண்மை!

ஆமாம்! ஒரு காலத்தில் மரமாக இருந்தவை, கால வெள்ளத்தால் கல்லாக மாறி விட்டன!

இந்த அதிசயத்தைத் தென் ஆர்க்காடு மாவட்டத்தில் உள்ள திருவக்கரை என்ற ஊரில் காணலாம். தென் ஆர்க்காடு மாவட்டத்தின் வழியாகச் செல்லும் தெற்குப் பெருஞ்சாலையில் (Grand Southern Trunk Road) இருந்து பாண்டிச்சேரியை நோக்கிக் கிழக்கே செல்லும் சாலையில் சென்று, 9-வது கிலோ மீட்டரில் உள்ள கரசனூர் என்ற இடத்தில் தெற்கே திரும்பி, மேலும் 9 கிலோமீட்டர் தூரம் சென்றால் திருவக்கரையை அடையலாம்.

திருவக்கரைக்குச் செல்லும் வழியிலும், அதன் சுற்றுப்புறங்களிலும் கடலூர் வகையைச் சார்ந்த கருங்கல் குன்றுகளும், அதிலிருந்து கல் உடைப்பவர்கள் நீலக் கருங்கற்களை உடைத்துத் தூளாக்குவதையும் காண முடியும். மேலும் செல்லச் செல்ல, நிலத்தோற்றம் மாறிக் கடலூர் மணற்கற்கள் (Cuddalore sand stone) வகையைச் சார்ந்த புரசல் மண்ணின் பழுப்பு நிறமாகக் காணப்படுகிறது.

திருவக்கரைக் கோயிலின் தென் கிழக்கு மூலையில் நின்று நோக்கினால், நிலக்கடலை வயல்களுக்கு இடையிலே—சங்கராபரணி ஆற்றின் வட கரையிலேயுள்ள ஒரு குன்றின் அடிவாரத்திலே—வெட்டப்பட்ட மரங்களின் பெரிய பெரிய துண்டுகள் கிடப்பதைக் காணலாம்!

மேலும் சற்று அருகே செல்வீர்களேயானால், விழுந்து கிடக்கும் மரங்களின் காய்ந்த பட்டையும் உங்களின் கண்களுக்குத் தெரிய வரும்!

நீங்கள் அவைகள் கிடக்கும் இடத்தின் அருகே சென்று தொட்டுப் பார்த்தால், அவை மரக்கட்டைகள் அல்ல—கற்களே என்பதை உணருவீர்கள்!

நிலஇயல் வல்லுநர்கள் அக்கற்கள், கடலூர் மணற்கற்கள் வகையைச் சேர்ந்தவை என்று கூறுகிறார்கள்!


அக்கற்கள் 20 இலட்சம் ஆண்டுகளுக்கு முன்பு மரங்களாக இருந்திருக்கக் கூடும் என்றும், காலப் போக்கில் அம்மரங்களின் மேல் மணல் படிந்து படிந்து—மரம் இருந்த அமைப்பிலேயே—கல்லாக மாறியிருக்கக்கூடும் என்றும் நில இயல் வல்லுநர்கள் கருதுகின்றார்கள்.

தற்பொழுது கிடைக்கும் வரலாற்றுச் சாசனங்களிலிருந்து இந்த அதிசயக் கல் மரங்களை 1781-ஆம் ஆண்டில் 'சோனார்டு' (Sonard) என்ற நிலஇயல் வல்லுநர் அவர்களே முதன் முதலில் கண்டுபிடித்தார் என்பது தெரிய வருகிறது. அது முதல் அவை ஆராய்ச்சிக்குரிய பொருளாகிவிட்டன.

அக்கல் மரத்தின் மேல் காணப்படும் ஒளிவிடும் தன்மையினால், அக்கற்களில் தங்கம் இருக்கிறது என்ற வதந்தியும் ஒரு காலத்தில் பரவி இருந்தது. அவ்வதந்தி இன்றும் உலவுகிறது. திருமாலால் கொல்லப்பட்ட ஓர் இராட்சதனின் எலும்பே அக்கல் மரங்கள் என்ற அறிவுக்கு ஒவ்வாத ஒரு கதையும் அவ்வூரில் கூறப்படுகிறது.

அவ்வதிசயக் கல் மரங்களைச் சுற்றிலும் நில இயல் துறை பாதுகாப்பான வேலி அமைந்துள்ளது. கால வெள்ளத்தால் கல்லாக மாறிய அம்மரங்கள் எதிர் காலத்தில் பல உண்மைகளை உலகிற்குப் புலப்படுத்தும் என்பது திண்ணம்.






# கதர் கிராமத் தொழில்கள்

கதர் கிராமத்
தொழில்களை
ஆதரிப்பது
புனிதத் தொண்டு

கதர் கிராமத்
தொழில்களை ஆதரிப்பது
கிராம மக்களுக்குச்
செய்யும் பேருதவி





கதர்- கதர்ப் பட்டு
சோப்பு, தேன்
தோல் பொருள்கள்
பனைவெல்லம்.
பனைப் பொருள்கள்
வார்ப்படங்கள்
மற்றும் பல்வேறு கைநுட்பப்
பொருள்கள் கதர் கிராமத்தொழில்
விற்பனை நிலையங்களில் கிடைக்கும்





## கதர் கிராமத் தொழில் துறை

2. சர் தேசிகாச்சாரி சாலை
சென்னை-4

சுந்தர்...



# மின்ஒளி வசதி

கிராமங்களுக்கு மின்சார வசதி அளிப்பதிலும், மின்சக்தியை வேளாண்மைக்குப் பயன்படுத்துவதிலும் தமிழகம் இந்தியாவிலேயே முதலிடமாய் விளங்குகிறது. தென் ஆர்க்காடு மாவட்டத்தில் விவசாயம் பயன்மிக்க தொழிலாக வளர்வதில் மின்சார வசதி பெருமளவிற்கு உதவியாயிருக்கிறது.

மேட்டூர், நெய்வேலி, திருச்சி ஆகிய மின்சார அமைப்புகளில் இருந்து இம்மாவட்டத்திற்கு மின்சாரம் கிடைக்கிறது. இம் மாவட்டத்தில் மிகுதிச் சக்தி மின்நிலையங்கள், செஞ்சி, விருத்தாசலம், சிதம்பரம், திட்டக்குடி, குறிஞ்சிப்பாடி, அவலூர்பேட்டை ஆகிய இடங்களில் இயங்கி வருகின்றன. மிகுதி கூடுதல் மின்சாரச் **சக்தித் துணை நிலையங்கள்** விழுப்புரம், **பண்ணுருட்டி,** மங்கலம், கடலூர், திண்டிவனம், தியாகதுர்க்கம் ஆகிய இடங்களில் செயல்பட்டு வருகின்றன.

இம்மாவட்டத்தில் மின்வசதி பெற்ற கிராமங்கள் தற்போது 3,772 ஆகும். 1967–68-ல் 184 கிராமங்கள் மின்வசதி பெற்றன. 1968–69ல் 203 கிராமங்களும், 1969–70-ல் 218 கிராமங்களும் 1970–71-ல் 391 கிராமங்களும் மின்வசதி பெற்றன.

விவசாய வளர்ச்சிக்காக அரசு பம்பு செட்டுகளை விவசாயப் பெருங்குடி மக்களுக்குக் கிராமங்கள் தோறும் அமைத்துத் தந்து 1971-ஆம் ஆண்டு மார்ச்சு முடிய 2,763 சிறு தொழிற்சாலைகளுக்கு மின்வசதி செய்து தரப்பட்டுள்ளது. இதில் 1967–68-ல் 245 தொழிற்சாலைகளுக்கும் 1968–69-ல் 312 தொழிற்சாலைகளுக்கும், 1970–71-ல் 332 தொழிற்சாலைகளுக்கும் மின்வசதி செய்து தரப்பட்டது. 1971 மார்ச்சு மாதம் முடிய 28 பெரிய தொழிற்சாலைகளுக்கு மின் வசதி செய்து தரப்பட்டிருக்கிறது.

பின் தங்கிய வகுப்பினரான அரிசன மக்கள் வசிக்கும் காலனிகளுக்கு மின்வசதி தர அரசு பெருமுயற்சி எடுத்து வருகிறது. அவ்வகையில் கடந்த நான்காண்டுகளில் இம் மாவட்டத்தில் மின்வசதி படைத்த அரிசனக் காலனிகளின் எண்ணிக்கையைக் கீழே காணலாம்.

| வட்டங்கள். | 67–68 | 68–69 | 69–70 | 70–71 |
|---|---|---|---|---|
| கடலூர் | .. | 6 | 9 | 43 |
| சிதம்பரம் | .. | 8 | 21 | 61 |
| விருத்தாசலம் | 2 | 1 | 9 | 29 |
| திருக்கோவலூர் | 1 | 6 | 31 | 11 |
| விழுப்புரம் | 16 | 14 | 18 | 31 |
| செஞ்சி | 3 | 3 | 6 | 28 |
| திண்டிவனம் | 7 | 5 | 25 | 24 |
| கள்ளக்குறிச்சி | 1 | 11 | 8 | 34 |
| | 30 | 54 | 127 | 261 |

வியாபாரத்திற்கு 1967–68-ல்120 இலட்சமும் 1968–69-ல் 10·84 இலட்சமும் 1969–70-ல் 71·9 இலட்சமும் 1070–71-ல் 401·1 இலட்சமும் செலவில் மின்வசதி தரப்பட்டிருக்கிறது.

இம்மாவட்டத்திற்கு மின்சாரவசதி செய்துதர அரசு 1967–68-ல் 89·11 இலட்சமும் 1968–69-ல் 122·77 இலட்சமும் 1969–70-ல் 132·10 இலட்சமும் 1970–71-ல் 348·3 இலட்சமும் செலவு செய்திருக்கிறது.

விவசாயத்திற்காகவும் தொழில் வளர்ச்சிக்காகவும் வீடுதோறும் விளக்கெரியவும் அரசு இம் மாவட்டத்தில் வியக்கத்தகும் வகையில் மின்வசதிகளைச் செய்து தந்திருக்கிறது. அவ்வகையில் கடந்த நான்காண்டுகளில் தமிழக அரசு தனிநபர்களுக்கு மின்சார வசதி செய்து தந்துள்ள செயலைக் கீழே அறியலாம்.

| | 67–68 | 68–69 | 69–70 | 70–71 |
|---|---|---|---|---|
| விவசாயம் | 32,667 | 39,439 | 45,131 | 51,146 |
| தொழிற்சாலை | 2,186 | 2,753 | 3,041 | 3,474 |
| பொதுமக்களுக்கு மின்வசதி. | 2,341 | 5,269 | 5,444 | 5,946 |
| வீட்டிற்கு மின் வசதி | 48,465 | 55,674 | 57,380 | 60,596 |

1970-ல் கடலூரில் 100 மெகாவாட் கொண்ட ஒரு மின் நிலையம் புதியதாக அமைக்கப்பட்டது. திண்டிவனம் உதவி மின் நிலையம் 10 மெகாவாட் மின் நிலையம் ஆக மாற்றப்பட்டது. இதனால் இம்மாவட்டத்திலுள்ள மக்களுக்குத் தங்கு தடையின்றி மின் ஆற்றல் கிடைத்து வருகிறது.

1967-68-ல் 24,88,64,495 யூனிட் மின் சக்தி மக்களால் பயன்படுத்தப்பட்டது. அதுவே அரசு இத்துறையில் மேற்கொண்ட பெரும் திட்டங்களால் 3,324.93 இலட்சம் யூனிட்டுகளாக உயர்ந்து மின் சக்தியினை மக்களுக்கு வாரி வழங்குகிறது. இம்மாவட்டத்திற்கு வேண்டிய மின் சக்தியில் 152,27,79,962 யூனிட்டுகள் நெய்வேலியிலிருந்து பெறப்படுகின்றன. அண்டை மாநிலமான புதுவைக்கு உதவி செய்யும் உள்ளத்தோடு நமதரசு 879.5 இலட்சம் யூனிட் மின் சக்தியினை விற்கின்றது

இவ்வாறு அரசு தமிழகத்தினை ஒளி மயமாக்க 1972-க்குள் தமிழகத்திலுள்ள எல்லாக் கிராமங்களுக்கும் மின் வசதி அளிக்கச் செயல் பட்டு வருகின்றது. ஏற்கெனவே மின் வசதியில் முக்கிய இடம் வகிக்கும் தென்ஆர்க்காடு மாவட்டம் மேன்மையான இடத்தை 1972-க்குள் பெறும்.

# கால்நடை வளர்ப்பில் கண்டுள்ள முன்னேற்றம்



தென் ஆர்க்காடு மாவட்டத்தில் ஒரு காலத்தில் உயர்ந்த ரகக் கால்நடைகளைக் காண்பது மிகவும் அரிதாக இருந்தது. கால்நடைகளுக்குப் போதிய சத்துள்ள தீவன வசதிகள் இல்லாமல் இருந்தன. ஆனால் இப்போது அந்த நிலைமை மாறி வருகிறது. 1968–69 ஆண்டுக் கணக்குப்படி இம்மாவட்டத்திலுள்ள கால்நடைச் செல்வங்களின் எண்ணிக்கை சுமார் 29,07,758 ஆகும்.

| | | |
|---|---|---|
| மாடுகள் | .. | 11,30,724 |
| எருமைகள் | .. | 1,90,449 |
| செம்மறியாடுகள் | | 3,86,401 |
| வெள்ளாடுகள் | | 4,34,593 |

## கால்நடை மருத்துவ மனை

கால்நடைகளை நோயின் பிடியிலிருந்து காப்பதற்காக இந்த மாவட்டத்தில் கள்ளக்குறிச்சியிலும் மற்றுமோர் இடத்திலும் இரண்டு கால்நடை மருத்துவ மனைகளும், சின்ன சேலம், வாணுபுரம், விருத்தாசலம், கம்மாபுரம், போன்ற 40 இடங்களில் கால்நடை மருந்தகங்களும் செயல்பட்டு வருகின்றன. இவற்றில் 1969–70-ல் வாணுபுரம், கம்மாபுரம், புக்கிரவாரி ஆகிய மூன்று இடங்களில் புதிதாக மருந்தகங்கள் திறக்கப்பட்டன. 1969–70-ல் 55 கால்நடை உதவி நிலையங்கள் இவ்வட்டத்திலுள்ள 9 ஊராட்சி ஒன்றியங்களில் நிறுவப்பட்டன. புவனகிரியை மையமாகக் கொண்ட கால்நடை மருத்துவ மனைகள் 18 அவ்வட்டத்தில் செயல்பட்டு வருகின்றன. மேலும் 1970ல் 62 கால்நடைப் பராமரிப்பு உதவி நிலையங்கள் 9 ஊராட்சி ஒன்றியங்களில் புதிதாகத் துவக்கப்பட்டன. சாரத்தை மையமாகக் கொண்ட மருத்துவ மனைகளில் 8 கால்நடை மருந்தகங்கள் இயங்கி வருகின்றன. இவற்றில் 1968–69-ல் பிரம்மதேசம் என்ற இடத்தில் ஒரு கால்நடை மருந்தகம் திறக்கப்பட்டுள்ளது.

1969–70-ல் தேவனூர், கிளியனூர், மயிலம், வல்லம் ஆகிய நான்கு இடங்களில் புதிதாகக் கால்நடை மருந்தகங்கள் திறக்கப்பட்டுள்ளன. இந்த மாவட்டத்தில் ஒரு நடமாடும் கால்நடை மருத்துவ மனையும் உள்ளது. கடலூரில் உள்ள நோய் ஆராய்ச்சி நிலையம் கால்நடை நோய்கள் பற்றிய ஆராய்ச்சிப் பணிகளை மேற்கொண்டு வருகிறது. இந்த நிலையத்தில் வெட்கை நோய், சப்பை நோய், அடைப்பான் நோய், கோமாரி நோய் போன்ற கால்நடை நோய்களுக்குச் சிகிச்சை அளிப்பதுடன் கால்நடை வளர்ச்சிப் பணிகளும் மேற்கொள்ளப் படுகின்றன. தடுப்பு ஊசிகள் போடப்படுகின்றன.

கோழி வளர்ப்பு, சிதம்பரம் வட்டம், திருநாவலூர், புவனகிரி ஆகிய இடங்களில் கோழிப் பண்ணை விஸ்தரிப்பு நிலையங்களில் நடைபெற்று வருகின்றன. கோழிப்பண்ணை வைத்திருக்கும் குடியானவர்கள் கடனுதவியும் மானிய உதவியும் பெற்று வருகின்றனர். திருக்கோவலூர், கள்ளக்குறிச்சி வட்டத்தில் அம்மையகரத்தைத் தலைமையகமாகக் கொண்ட கோழி வளர்ப்பு நிலையங்கள் 18 தனியார் துறையில் இயங்கி வருகின்றன. அவற்றில் 13 நிலையங்கள் 1967-லிருந்து 1971-க்குள் நிறுவப்பட்டன. திண்டிவனம் வட்டத்தில் உள்ள மேல் மலையனூர் என்ற ஊராட்சி ஒன்றியத்தில் ஒரு சேவலும், 4 கோழிக்குஞ்சுகளும் கொண்ட 500 யூனிட்டுகள் 1970–71-ல் புதிதாகத் துவக்கப்பட்டுள்ளது.

புவனகிரியில் உள்ள கோழிப் பண்ணையில் தீவிரக் கோழி வளர்ப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்துடன் நோய் தீர்க்கும் துறை ஒன்றும் இம்மாவட்டத்தில் இயங்கி வருகிறது.

குறிஞ்சிப்பாடியில் கால்நடை வளர்ப்புத்திட்டம் ஒன்றும் இயங்கி வருகிறது. அத்திட்டத்தின் கீழ் சுமார் 100 குடியானவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களிடையே கோழிகளை வினியோகம் செய்கின்றனர். அக்கோழிகள் இடும் முட்டைகளை அவர்கள் அரசினரிடமே கொடுக்க அம்முட்டைகள் இந்த மாவட்டத்திலுள்ள ஏழை மக்களுக்கு இலவசமாக வழங்கப் படுகின்றன.

'கோஸ்வா' திட்டம் என்ற திட்டத்தின் கீழ் இம்மாவட்டத்தில் 10 முதல் 12 வரை உயர் ரகக் கால்நடைகளைக் கோயில்களுக்கும், பள்ளிகளுக்கும் இலவசமாக அரசு வழங்கியுள்ளது. அவற்றைப் பராமரிக்க அவர்களிடம் சொல்லி அதன் மூலம் பெறும் பாலை ஏழை எளியவர்களுக்கு வழங்கவும் செய்கிறது. மேலும்இத்திட்டத்திற்குச் சுமார் 3,000 ரூபாய் கடன் உதவியும் வழங்கியிருக்கிறது.

சிறு விவசாயிகள் முன்னேற்றத் திட்டத்தின் கீழ் கோழி வளர்ப்புத் திட்டம், மாடு வளர்ப்புத் திட்டம், ஆகியவற்றையும் செயல்படுத்தி அவற்றின் மூலம் சிறு விவசாயிகளுக்கு இத்துறையில் நிறையக் கடன் வழங்கிக் கோழிகள், மாடுகள் வழங்கி உதவி செய்து வருகிறது.

அந்த முறையில் 'புள்ளெமங்' என்ற வகை 10,000, நூறு சிறு விவசாயிகளுக்குக்கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் வழங்குகின்றனர். அத்தோடு இச்சங்கங்கள் மூலம் கடன் வழங்க 1·20 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. 2,800 உயர்ந்த ரகப் பசுமாடுகளும், எருமை மாடுகளும் விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்றன. இவற்றில் 1,300 கடனாகவும் ஒரு விவசாயிக்கு இரண்டு மாடுகள் வீதம் 1,400 சிறு விவசாயிகளுக்கு வழங்கியிருக்கிறார்கள்.

கோழி வளர்க்கவும், உணவு தயாரிக்கவும் கூடிய ஒரு நிலையத்தைக் கால்நடைத் துறையினர் செம்பியன் மாதேவி என்ற இடத்தில் துவக்குவதற்கு முடிவெடுத்துள்ளனர்.

# தமிழகத்தின் தலைநகருக்குத்



# தாராளத் தண்ணீர் தரும் வீராணம் திட்டம்

நீர்ப் பற்றுக்குறையினால் நித்தமும் தத்தளிக்கும் சென்னை வாழ் மக்களுக்கு நீரளித்துத் தாகம் தணிக்கும் தனிப் பெருமையை வீராணம் திட்டத்தின் மூலம் தென் ஆர்க்காடு மாவட்டம் பெற்றிருக்கிறது.

தமிழக அரசால் சென்னைக்கு நீரளிக்கும் இத்திட்டத்தின் மூலம் வீராணம் ஏரியிலிருந்து ஒரு நாளைக்கு 40 மில்லியன் காலன்கள் நீரெடுத்து வழங்க ஒரு மாபெரும் திட்டம் 21.30 கோடி ரூபாய் செலவில் உருவாக்கப்பட்டிருக்கிறது.

சிதம்பரம் வட்டத்திலே— சிதம்பரத்திலிருந்து சுமார் 10 கிலோ மீட்டர் தூரத்திலே அமைந்துள்ளது வீராணம் ஏரி; தமிழகத்திலுள்ள மிகப் பெரிய ஏரிகளில் இதுவும் ஒன்று. 25.90 சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் இந்த ஏரி அமைந்துள்ளது. இவ்வேரியின் அகலம் 5.64 கிலோ மீட்டர் ஆகும். இந்த ஏரியில் 44.500 ஏக்கர் அளவில் ஒரு மதகு அமைந்துள்ளது. இவ்வீராணம் ஏரி தெற்கே லால்பேட்டையிலிருந்து வடக்கில் சேத்தியாத் தோப்பு வரை 16 கிலோ மீட்டர் நீளம் உள்ளது.


இத்திட்டத்தின் கீழ்த் தினமும் 40 மில்லியன் காலன் நீரெடுத்து அதை வடலூர் அருகேயுள்ள வடக்குத்து என்னுமிடத்திற்குக் குழாய் மூலம் கொண்டுசென்று அங்கு நீரை விஞ்ஞானமுறையில் சுத்தம் செய்து, 66 அங்குலம் விட்டமுள்ள சிமெண்ட் குழாய்களில் 213 கி. மீ. தூரமுள்ள சென்னை மாநகருக்கு எடுத்துச் செல்லப்படுகிறது.

வீராணம் ஏரியில் நீரெடுப்பதற்காக ஒரு கோபுரம் ஒன்று அமைத்தல், கோபுரம், நீரை இறைப்பதற்குப் பம்பு செட்டும், ஒரு பம்புக் கூடமும் அங்கு அமைக்கப்படுகிறது. இவ்வாறு குழாய்கள் மூலம் கொண்டு வந்த நீரை வடக்குத்துக் கிராமத்தில் தேக்கி வைத்துச் சுத்தப்படுத்துவதற்காக 40 மில்லியன் காலன் கொள்ளளவு கொண்ட பெரிய டாங்கிகளைக் கட்டுவதும், அவ்வாறு சுத்தப்படுத்தப்பட்ட நீரைக் குழாய்கள் மூலம் சென்னைக்கு எடுத்துச் செல்வதற்காகக் குழாய்களையும் பம்பு செட்டுகள் கொண்ட கூடங்களையும் கட்டுவதும் நீரைக் கொண்டு செல்லப் பாலங்கள் மீதும், சாலைகள் மீதும் பாலங்கள் கட்டுவதும் ஆகியவை திட்டங்களாகும்.

சேத்தியாத் தோப்பில் ஏரியிலிருந்து நீரை எடுக்க 34 அடி அகலம் கொண்ட ஒரு நீர்த்தேக்கம் 24 அடி ஆழத்திற்கு 2 முகங்கள் கொண்டுள்ளதாகக் கட்டப்பட்டுள்ளது. இவற்றில் ஆறுமுகங்கள் கொண்ட வாயில் அமைந்துள்ளது. அந்த ஆறு முகவாயில்களின் மூலம் நீர் எடுக்கப்படும். இந்தக் கணவாயில் நீர் வெளியே போகா வண்ணம் பாதுகாக்கப்படும். இக்கணவாய் நீர் மட்டத்தில் இரண்டு அடி ஆழத்திலிருந்து அமைக்கப்பட்டுள்ளதால், எந்த அளவில் இருந்தாலும் நீரை எளிதில் எடுத்து இந்த நீர்த் தொட்டிகளில் தேக்கி வைக்க முடியும். இதன் மூலம் கீழ் அளவில் நீர் இருந்தாலும் நீரை எடுப்பதற்குத்தடையின்றிச் சென்னைக்கு நீர் எப்போதும் அனுப்ப முடியும். அதோடு இத்திட்டம்நன்குசெயல்பட்டால் போதுமான நீர் இருந்தால், மற்றுமொரு நீர்த் தொட்டியையும் உருவாக்கி 40 மில்லியன் காலன்வரை தேக்கி, சென்னைக்குக் கொண்டு செல்ல வழிவகை செய்யப்படும்.

சேத்தியாத் தோப்பிலுள்ள நீர்த்தொட்டியிலிருந்து 450 குதிரைச் சக்தி கொண்ட ஆறு பம்பு செட்டுகள் மூலம் நிமிடத்திற்கு 30,450 காலன் நீர், வெளியேற்றப்பட்டு வடக்குத்துக் கிராமத்திற்குக் கொண்டுவரப்படும்.

தற்போது 40 மில்லியன் காலன் நீர் கொள்ளும் நீர்த் தொட்டி கட்டப்படும் வேலை



நடந்து வருகிறது. அங்கு வீராணத்திலிருந்து கொண்டுவரும் நீரைத் தேக்கி விஞ்ஞான முறையில் சுண்ணும்பு மற்றும் பல இரசாயன முறையில் சுத்தப்படுத்தி, 10.5 மில்லியன் காலன் கொள்ளளவு கொண்ட 4 நீர்த் தொட்டிகளில் தேக்கிவைத்து, அவற்றை வடிகட்டிக் குளோரின் கலந்து சென்னைக்குக் குழாய்கள் மூலம் எடுத்துச் செல்லப்படும். விஞ்ஞான முறையில் நீரைச் சுத்தம் செய்யும் தொட்டி மணிக்கு 18,27,000 காலன் நீர் கொள்ளும் திறனுடையது.

இவ்வாறு சுத்தம் செய்யப்பட்ட நீரானது 2 மில்லியன் கேலன் கொள்ளும் அளவுடைய நீர்த்தொட்டியில் சேர்ந்து அங்கிருந்து 600 குதிரைச் சக்திகொண்ட 6 குழாய்கள் மூலம் நிமிடத்திற்கு 27,770 காலன் வீதம் வெளியேற்றப்பட்டுச் சென்னைக்குக் கொண்டு செல்லப்படும்.

இத்திட்டத்தின்கீழ் சேத்தியாத் தோப்பிலுள்ள நீர்கொள்ளும் தொட்டி கட்டி முடிக்கப்பட்டுவிட்டது. வடக்குத்தில் நீர் சுத்தம் செய்யப்படும் திட்டமும் மிக வேகமாக நடைபெற்று வருகிறது. நீர் கொண்டு செல்லும் குழாய்கள் தயாரிப்பதற்கான தொழிற்சாலைகள் பண்ணுருட்டியிலும், திருக்கழுக்குன்றத்திலும் நிறுவப்பட்டுப் பணியைத் தொடங்கிவருகின்றன. தனியார் நிலங்களையும் அரசு நிலங்களையும் இத் திட்டத்திற்காக அரசின் ஒத்துழைப்போடும், மக்களின் ஒத்துழைப்போடும் வாங்கிக் குழாய்ப்பாதை வெட்டுவதற்கான வேலை மிக மும்முரமாக நடைபெற்று வருகிறது. இந்தக் குழாய் வெள்ளாறு, கெடிலம், புள்ளியாறு, கிளியாறு, பாலாறு போன்ற பெரிய ஆறுகளைக் கடக்க வேண்டி இருப்பதாலும், பல இடங்களில் தேசிய நெடுஞ்சாலையைக் கடந்துசெல்ல வேண்டியிருப்பதாலும் இவற்றில் எல்லாம் தங்கு தடையின்றி இக்குழாய்கள் செல்ல வேண்டியிருப்பதால் பாலங்கள் கட்டப்பட்டு வருகின்றன.

நீரை எப்போதும் தடை யில்லாமல் ஏரியிலிருந்து வெளியேற்றவும், அந்நீரைச் சுத்தப்படுத்திச் சென்னைக்கு எக்காலத்திலும் எடுத்துச் செல்லவும், மின்சாரம் மிக முக்கியத் தேவையாக இருப்பதால் தமிழக மின்சார வாரியத்தினல் 110 கிலோ வாட்ஸ் மின் சக்திகொண்ட இரண்டு உதவி நிலையங்கள் சேத்தியாத் தோப்பிலும், வடக்குத்திலும் நிறுவப்பட்டு வருகின்றன.

இத் திட்டமானது 1973 இறுதிக்குள் முடிந்து தாகம் தீர்க்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. தமிழகத்திலேயே தமிழக அரசு மேற்கொண்டுள்ள திட்டங்களில் மிகப்பெரிய திட்டமான இது முடிவு பெற்றுல் தமிழகத்தின் வளர்ச்சிக்கு ஓர் எடுத்துக்காட்டாக விளங்கும். ஆண்டுகள் பலவாக அல்லலுறும் சென்னை மக்களுக்கு இத் திட்டம் அமுதசுரபி போல் பயன் கொடுக்கும். அந்தப் பெருமை தென் ஆர்க்காடு மாவட்டத்திற்குக் கிடைக்கும்.


விலைவாசியைக் கட்டுப்படுத்த உதவுங்கள்



அதிக விலை கொடுக்காதீர்கள்

சங்கர் சிமெண்ட் தரம் நிறைந்த சிமெண்ட். ஆனலும் கூட அதற்கு நீங்கள் அதிக விலை கொடுக்க வேண்டியதில்லை. அங்கீகாரம் பெற்ற எங்கள் விற்பனையாளர்களிடமிருந்தே வாங்குங்கள். எங்கள் விற்பனையாளர்களிடம் கம்பெனி கொடுத்துள்ள சான்றிதழ் இருக்கிறதா என்று பாருங்கள். எங்கள் விற்பனையாளர்களின் கடைகளில் அமுலில் உள்ள நிர்ணய விலை பட்டியல் இருக்கும். அதன்படி நிர்ணய விலையே கொடுத்து வாங்குங்கள்.

SANKAR IC CEMENT

இந்தியா சிமெண்ட்ஸ் லிமிடெட்

175/1, மவுண்ட் ரோடு, சென்னை 2

IS:269 மார்க்குடன் உத்தரவாதம் கொண்டது.

சங்கர் சிமெண்ட்


IC/1813TMA

## தேனான
# தென் ஆர்க்காடு

அமிழ்தான தமிழ்ப்பாட்டுப் பிறந்த தாக
அருளாளர் போற்றுதிருக் கோவ லூரும்
தமிழோடு பலகலைகள் வளர்க்கும் கூடம்
தவசிருக்கும் கலைநகரும் பொம்மை மற்றும்
அமிழ்தாகும் சுவைப்பலாக் கனியும் நல்கும்
அழகான பண்ணுருட்டி நகரும், கண்கள்
இமையாமல் ஆடுகின்ற பெருமான் கோயில்
இலங்குநக ரும்கொண்ட தென்ஆர்க் காடு !

வடக்கினிலே செங்கையொடு வடஆர்க் காடு ;
வல்லிரும்புக் கனிசூழ்ந்த சேலம் மேற்கில் ;
கிடக்கும்நல் வங்கமொடு பாண்டிச் சேரி
கிழக்கினிலே ; தென்புறத்தே திருச்சி மற்றுக்
கடும்பசியை விரட்டுதற்குச் செந்நெல் நல்கும்
களஞ்சியமாம் தஞ்சாவூர் மாவட் டங்கள் ;
நடுவினிலே கொலுவிருந்து புகழ்ம ணக்கும்
நடுநாடு நன்னாடு தென்ஆர்க் காடு !

அற்றைநாள் தமிழ்ஔவை கபிலர் மற்றும்
அருநட்புப் பிசிராந்தை போன்றோர் தம்மைப்
பொற்புடனே அழைத்துநற் சிறப்புச் செய்து
புகழ்கொண்ட பழம்பெருமை போதா தென்று
இற்றைநாள் தமிழ்மக்கள் உயிர்கள் தங்கும்
எழிலுடலாய்த் திகழ்கின்ற கலைஞர் தம்மைப்
பொற்புடனே அழைத்துநல் விருத ளித்துப்
புகழ்சேர்த்த நடுநாடு தென்ஆர்க் காடு !



தோரியம்சூழ் கடற்கரையும் பிறநாட் டாரின்
தொகைகொணரும் முந்திரியும் மணிலா மற்றும்
ஊர்க்குதவும் சர்க்கரையை வழங்கும் நல்ல
ஊட்டமுள்ள தேன்கரும்பு யாவும் நல்கிப்
பேர்கொள்ளும் மாவட்டம் ; தமிழ கத்தில்
பெருங்கடல்போல் நின்றிலங்கிப் பயன்வி ளைக்கும்
வீராணம் ஏரியொடு நீர்வ ளங்கள்
மிக்குள்ள பொன்னாடு தென்ஆர்க் காடு.

பாரிமன்னன் பைங்கிளிகள் இரண்டி னுக்கும்
பண்போடு புகலீந்து புரந்த பூமி !
ஈரமிக்க சடையப்பர், காரி வாழ்ந்த
எழில்நாடு ; வள்ளலார் நந்தன் போன்ற
பேராளர் பலர்தோன்றி வாழ்ந்த பூமி !
பேசுகின்ற பன்மதங்கள் தவழும் பூமி !
வீரமிக்க தேசிங்கு ராசன் சீர்த்தி
விரித்துரைக்கும் நடுநாடு தென்ஆர்க் காடு !

நிறையப்பேர் தொழில்கொள்ளும் வாய்ப்பு நல்கும்
நெய்வேலித் தொழில்நகரம் கொண்ட நாடு ;
சிறுகுடும்பம் போதுமெனும் நலத்திட் டத்தின்
சிறப்புணர்த்தும் பூத்துறையைக் கொண்ட நாடு;
இறக்கின்ற தொழுநோயர் வாழ்வுக் காக
இரப்போர்கள் நலவிடுதி பெற்ற நாடு ;
சிறந்ததொரு சாதனையைச் சிறுசேமிப்பில்
செய்திட்ட நடுநாடு தென்ஆர்க்காடு ;



கவிஞர்
சாமிபழனியப்பன்



# தென் ஆர்க்காட்டுச் செய்திகள்

கி.பி. 9ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் என்று கருதப்படுபவரும், இராமாயணத்தை எழுதியவருமான கவிச்சக்கரவர்த்தி கம்பனை ஆதரித்த வள்ளல் சடையப்பர் வாழ்ந்த திருவெண்ணெய் நல்லூர் தென் ஆர்க்காடு மாவட்டத்தில்தான் இருக்கிறது.

மதுரையிலுள்ள மீனாட்சியம்மன் ஆலயத்திலும், சுசீந்திரம் ஆலயத்திலும், சில தூண்களைத் தட்டினால் இனிய ஒலி வருவது போல, ஸ்ரீமுஷ்ணம் பூவராக சுவாமி ஆலயத்தில் உள்ள நாயக்க மன்னர்கள், அவர்கள் துணைவியர் ஆகியோரின் சிலைகளைத் தட்டிப் பார்த்தால், கருங்கல்லின் ஒலி கேட்பதில்லை; ஆனால் இசைக்கருவிகளை இயக்கினால் ஏற்படுமே சங்கீத ஒலி, அதுபோன்ற ஒலி கேட்கிறது.

தென் ஆர்க்காடு மாவட்டத்தின் தலைநகரான கடலூர், கூடலூர் என்றும் வழங்கப்படுகிறது. ஏன் தெரியுமா? பெண்ணையாறும் கெடிலம் நதியும் கூடுமிடத்தில் இந்த ஊர் அமைந்திருப்பதுதான் காரணம்!

கோணன் குப்பத்தில் வீரமா முனிவரால் கட்டப்பெற்ற கத்தோலிக்கத் தேவாலயம் இருக்கிறது. அவர் இந்த ஊரில்தான் தேம்பாவணி என்னும் நூல் இயற்றினார்.

மலையமான் என்னும் குறுநில மன்னன் ஆட்சி செலுத்திய பகுதியான திருக்கோவலூர் இந்த மாவட்டத்தில்தான் உள்ளது. இதனைக் கீழூர் என்றும் அழைக்கிறார்கள்.

திருக்கோவலூர் வட்டத்தைச் சேர்ந்த சேந்தமங்கலத்தில் சோழ, பாண்டிய மன்னர்களின் கல்வெட்டுக்கள் உள்ளன. கிருஷ்ண தேவராயரின் வெற்றியை எடுத்துரைக்கும் கல்வெட்டும் இருக்கிறது.

பண்ணுருட்டி பலாப்பழத்திற்குப் பெயர் போனது. இப்போது முந்திரி வளர்ச்சியிலும் சிறந்து விளங்குகிறது.

பண்ணுருட்டி பலாச்சுளைகளுக்கு மட்டுமல்ல பொம்மைகளுக்கும் பெயர் போன ஊர். தமிழகத்தில் கொண்டாடப்பட்டு வரும் நவராத்திரி விழாக்களில் முதலிடம் பெறுவது பண்ணுருட்டிப் பொம்மைகள்தாம்.

இன்றைய திண்டிவனம்தான் முன்னாளில் கிடங்கல் என்னும் பெயருடன் திகழ்ந்ததென்றும், நல்லியக்கோடன் என்னும் குறுநில மன்னன் இதனை ஆண்டு வந்தான் என்றும் வரலாறு தெரிவிக்கிறது.

சர்வ சமய சமரச சன்மார்க்கத்தைத் தோற்றுவித்தவரும் அருட்சோதி வள்ளல் என்றும் வள்ளலார் என்றும் புகழப்படுபவருமான இராமலிங்க அடிகளார் இந்த மாவட்டத்துக்காரர் என்பதிலே இந்த மாவட்டத்துக்குத் தனிப்பெருமை உண்டு.

தென் ஆர்க்காடு மாவட்டத்தில் கூட்டுறவு இயக்கம் 1907-ஆம் ஆண்டில் துவக்கப்பெற்றது. இந்த மாவட்டம் கூட்டுறவுத் துறையில் தனிப்பெருஞ் சிறப்பைத் தேடிக் கொண்டிருக்கிறது. இந்த மாவட்டத்திலுள்ள எல்லாக் கிராமங்களிலும் கூட்டுறவு நிறுவனங்கள் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

பறம்பு மலை மன்னன் பாரியின் மகளிரான அங்கவை, சங்கவை இருவருக்கும் அடைக்கலம் கொடுத்து ஆறுதலளித்தது தென்ஆர்க்காடு மாவட்டந்தான். பாரியின் பிரிவால் அவரது நண்பர் கபிலர் மனம் வருந்தித் தீ மூட்டி உயிர் துறந்ததும் இந்த மாவட்டத்தில்தான்.

வாணிகம் செய்ய வந்த ஆங்கிலேயர் முதன்முதலில் கிழக்கிந்தியக் கம்பெனியார் என்ற பெயரில் கடலூர் துறைமுகத்தில், தங்களது பண்டகசாலையை நிறுவினார்கள். பின்னர் உள்நாட்டுப் பிரச்சினைகளில் தலையிட்டு மெல்ல மெல்ல நாட்டை ஆளும் நிலைக்கு வந்துவிட்டார்கள். அப்போது கடலூரில் செயின்ட் ஜார்ஜ் கோட்டையைக் கட்டினார்கள். அதன் இடிபாடுகளையும், கிழக்கிந்தியக் கம்பெனியார் வாணிகம் நடத்திய இடங்களின் சின்னங்களையும் கடலூர் கடற்கரைச் சாலையில் இன்றும் காணலாம். இன்று கடலூர் மஞ்சைக்குப்பத்தில் உள்ள அர்ச் சூசையப்பர் உயர்நிலைப்பள்ளி அமைந்துள்ள இடம் 'கர்னல் தோட்டம்' என அழைக்கப்படுகிறது. இந்த இடம் ஆங்கிலேயரின் படைத் தலைவன் வசித்த இடமாக இருந்ததாலேயே இப்பெயருடன் விளங்குகிறது.



சேக்கிழார் அருளிச் செய்த பெரியபுராணம் என்னும் திருத்தொண்டர் புராணம், தென் ஆர்க்காடு மாவட்டத்தில் உள்ள சிதம்பரம் நடராசர் ஆலயத்தில் அரங்கேற்றம் செய்யப்பெற்றது. அண்மைக் காலத்தில், கோவையைச் சேர்ந்த திரு சி. கே. சுப்பிரமணிய முதலியார் அவர்கள் பெரிய புராணத்திற்கு எழுதிய உரையும் சிதம்பரம் ஆலயத்தில்தான் அரங்கேற்றம் செய்யப்பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது.

விருத்தாசலத்தில் உள்ள அரசினர் பிராந்திய அச்சகத்தில் தொழிலாளர்களின் மனமகிழ் மன்றம் ஒன்று இயங்கி வருகிறது. குடியரசு நாள், விடுதலை நாள் போன்ற முக்கியமான விழா நாட்களை இந்த மனமகிழ் மன்றம் சிறப்பாகக் கொண்டாடி வருகிறது. அதற்கு அரசு ஆண்டுக்கு ரூ. 250 நன்கொடையாகத் தந்து வருகிறது.

ஆர்ட்டிசன் கிணறுகள் என்று சொல்லப்படும் தானே இயங்கி வரும் ஊற்றுக் கிணறுகள் தமிழகத்தில் இந்த மாவட்டத்தைத் தவிர வேறு எந்த மாவட்டத்திலும் கிடையாது.

காட்டு மன்னார் கோயில் என்று வழங்கப்படும் ஊரின் பெயர் அதுவல்ல; வீரநாராயண நல்லூர் என்பதே ஆகும்; இது ஒரு காலத்தில் சோழ நாட்டின் தலைநகராக இருந்தது என்றும் கூறப்படுகிறது. இதன் அருகில் உள்ள வானமாதேவி, உத்தம சோழகன் முதலிய ஊர்கள் இதற்குச் சான்றாக உள்ளன. இவ்வூர் காட்டு மன்னார் கோயில் எனப்பெயர் பெற்றதற்கு ஒரு கதை வழங்கப்பட்டு வருகிறது. ஆழ்வார்கள் அருளிய நாலாயிர திவ்ய பிரபந்தங்கள் மறைந்துவிட, அவை எங்கே இருக்கின்றன என்பதை இந்த ஆலயத்தில் உள்ள பெருமான் காண்பித்ததாகவும், அதனால் அவர்க்குக் காட்டும் மன்னனார் என்று பெயர் ஏற்பட்டதாகவும் சொல்கிறார்கள்.

திண்டிவனம் நகரத்தில் 17·34 இலட்ச ரூபாய் செலவில், பாதுகாக்கப்பட்ட குடிநீர்த் திட்டம் ஒன்று நிறைவேற்றப்பட்டுள்ளது. இந்த நகராட்சியில் சாக்கடைத் திட்டம் இல்லாததால், அதனை அமைக்கும் கருத்து அரசினரின் ஆய்வில் இருக்கிறது.

வீராணம் ஏரி என்று சொல்லப்படும் ஏரியின் பெயர் வீரநாராயண ஏரி ஆகும். இது தமிழ்நாட்டிலேயே மிகப்பெரும் ஏரியாகும். ராஜாதித்தன் என்ற சோழ மன்னன் கி. பி. 9 ஆம் நூற்றாண்டில் இந்த ஏரியை வெட்டியதாகச் சொல்லப்படுகிறது. ராஜேந்திர சோழன் கங்கை கொண்ட சோழபுரத்தில் கோயிலும் ஊரும் உண்டாக்கும்போது, அந்நகர அமைப்புக்காக மண்வெட்டியபோது ஏற்பட்ட ஏரிதான் இது என்றும் சொல்லப்படுகிறது. வீர நாராயணன் என்று அழைக்கப்பட்ட முதற் பராந்தக சோழனால் இது அமைக்கப்பட்டது என்றும் சொல்லப்படுகிறது.

வீராணம் 52 வடிகால்களைக் கொண்டது. இதன் நீர் கான்சாகிப் கால்வாய் வழியாகச் சிதம்பரம் வட்டத்தில் பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலத்திற்குப் பாசன வசதியை அளித்து வருகிறது. 43,500 ஏக்கர் பரப்பிற்கு மேற்பட்ட ஆயக்கட்டு உள்ளது.

விருத்தாசல வட்டத்தைச் சேர்ந்த மணவாள நல்லூரில் உள்ள கொளஞ்சியப்பர் தேவஸ்தானம் தென் ஆர்க்காடு மாவட்டத்திலேயே அதிக வருவாயுள்ள ஆலயமாகும். ஆண்டொன்றுக்கு ரூபாய் 3 இலட்சம் உண்டியல் வாயிலாகவும், தானியம், கால்நடைகள் ஆகியவற்றின் வாயிலாகவும் கிடைக்கிறது. இதற்குச் சொந்தமாக 12·22 ஏக்கர் நிலம் உள்ளது.

தனது வருவாயை நல்ல பணிகளுக்கு இந்த ஆலயம் செலவு செய்வது குறிப்பிடத்தக்கது. சித்த மருத்துவ மனை ஒன்றினை நிறுவிப் பொது மக்களுக்கு இலவசச் சிகிச்சை தருகிறது.

விருத்தாசலத்தில் உள்ள கொளஞ்சியப்பர் கலைக் கல்லூரிக்கு ரூ. 2 இலட்சம் நன்கொடையாகத் தந்துள்ளது.

புதுக்கோட்டையில் உள்ள பெண்கள் கல்லூரிக்கு 10 ஆயிரம் ரூபாய் நன்கொடை தந்துள்ளது.

அனைத்துக்கும் மேலாக, முதல்வர் அவர்களின் வேண்டுகோளின்படி உருவாக்கப்பட்ட இலவசக் கண் சிகிச்சை முகாம் வெற்றி பெற ரூ. 20 ஆயிரம் கொடுத்து உதவி இருக்கிறது.

# பரங்கிப்பேட்டைப் பெருமை

தென் ஆர்க்காடு மாவட்டத்திலுள்ள பரங்கிப்பேட்டை பல வகைப் பெருமையும் படைத்ததாகத் திகழ்கிறது.

இந்த இடம் ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியாரால் (Porto Nova) என்று அழைக்கப்பட்டது. இதன் பொருள் New port என்பது. அதாவது புதிய கோட்டை. ஆங்கிலேயர்கள் இந்த இடத்தில் ஒரு கோட்டை கட்டினார்கள். அதனால்தான் புதிய கோட்டை என்று இந்த இடம் அழைக்கப்பட்டது.



இங்கே, கடல்வாழ் உயிரின ஆராய்ச்சி நிலையம் ( Biological Station ) ஒன்று இருக்கிறது. இது அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தைச் சார்ந்தது. இங்கு ஆண்டுதோறும் 45 மாணவர்கள் ஆராய்ச்சி செய்கின்றனர்.

வெள்ளாறும், உப்பங்கழியும் (Back water) கலப்பதால் இங்கே ஆய்வுக்குரிய வாய்ப்புகள் நிறைந்துள்ளன. அதிலும் ஆய்வுக்கூடம் அமைந்திருக்கும் இடத்தில், கரை யோரத்திலேயே ஆய்வுக்குரிய பொருள்கள் எளிதில் கிடைக்கின்றன.

இந்த நிலையத்தில் பலவகையான மீன்களும், பாம்புகளும் கொண்ட காட்சியகம் ஒன்று உள்ளது. பல வகையான கடற்பொருள்களும் வைக்கப்பட்டுள்ளன.

பரங்கிப்பேட்டை, உப்பளங்களுக்குப் பெயர்போன இடம்.

இங்கு, அதிக அளவில் கிடைக்கும் இறால் மீன்கள் (Prawns) அமெரிக்கா போன்ற வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகின்றன. அமெரிக்கர்கள் இவற்றை விரும்பி உண்கின்றனர்.

இறால்களைக் கடலிலிருந்து பிடிப்பதற்கு இங்கே ஒருவகை முறை கையாளப்பட்டு வருகிறது. ஆழ் கடல் மீன்பிடிப்பு முறைஎன்று சொல்லப்படுகிறது. நைலான் வலை, கூடை மாதிரி இருக்கும். படகுகளில் இதனைப் பொருத்தி விடுவார்கள். இறால்கள் அவற்றுக்குள் விழுந்துவிடும். வலையைக் கத்தரித்து வெளியே வர முடியாது. இந்த முறையை நமது மாநிலத்தில் தூத்துக்குடியிலும், கேரள மாநிலத்திலும் கடைப்பிடிக்கிறார்கள்.

இங்கு டேனிஷ் மிஷன் நடத்தும் பள்ளி ஒன்று இருக்கிறது. இந்தப் பள்ளியில் அனாதைக் குழந்தைகள் பராமரிக்கப்படுகிறார்கள். பல ஆண்டுகளுக்கு முன்பு, இங்கு வந்த காந்தியடிகள் ''சேவா மந்திர்'' என்று இந்தப் பள்ளிக்குப் பெயர் வைத்தார்.

டென்மார்க்கிலிருந்து இந்தப் பள்ளிக்குப் பலவித உதவிகள் கிடைத்து வருகின்றன.

ஐதர் அலிக்கும் ஆங்கிலேயர்களுக்கும் 1781-ல் போர் நடந்த இடம் இந்தப் பரங்கிப் பேட்டையில் உள்ளது.

துவக்கத்தில் இங்கு உருக்காலை இருந்திருக்கிறது. இந்தியாவிலேயே முதல் உருக்காலை இங்கே இருந்த ஆலையாகத்தான் இருக்க வேண்டும். இங்கு செய்யப்பட்ட இரும்புப் பாளங்கள் (கர்டர்கள்) சென்னை எழும்பூர் ரயில் நிலையத்தில் இன்றும் உள்ளன. போர்ட்ட நோவாவில் செய்யப்பட்டது என்ற பொருளுள்ள ஆங்கிலச் சொற்றொடர் அந்த இரும்புப் பாளங்களில் உள்ளது.

சென்னையில் உள்ள 'பக்கிங் ஹாம்' கால்வாயை யாரும் மறக்க முடியாது. அந்தக் கால்




வாய், பரங்கிப் பேட்டையில் தான் துவக்கம்ஆகிறது. மாமல்லபுரம் வழியாகச் சென்னைக்கு வந்து சேரும் அந்தக் கால்வாயின் நீளம் சுமார் 250 கிலோ மீட்டர் இருக்கலாம்.

பரங்கிப்பேட்டைக்கு மாபெரும் பெருமை ஒன்று வந்து சேர இருக்கிறது. கடல்நீரைக் குடி தண்ணீராக மாற்றும் நிலையம், இந்தியாவிலேயே முதன் முதலாக இங்கேதான் அமையப் போகிறது என்னும் பெருமை தான் அது!

ஆசிரியர், வெளியிடுபவர் செய்தி—மக்கள் தொடர்புத் துறை இயக்குநர், தமிழ்நாடு அரசு அச்சக எழுதுபொருள் இயக்குநரால், சென்னை, அண்ணாசாலை தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி: தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், அண்ணாசாலை, சென்னை-2.